CONTENTS - ISSUE 79

32.COVER STORY



கேணல் தீபன் தலைமையிலான படையணியின் கைகளில்!

PARAPARAPU JOURNAL TEAM

Overseas Distribution

Australia
Lingam
Denmark & Germany
Sivasekaran Sarma
France
T.Rameswaran
Norway
Selva
Swiss
A.Varathan
U.K.
N.T.Navaneethan

Creation Team

Production Advisor
Sydney Karan
Type Setting
Karthik, Ram
Advertising
Kannan
Marketing Manager
Nimalini Rasa
Layout Design
Team Alpha Canada
Associate Editor
Shiamini Kandiah
Chief Executive
Joethn Kandiah

Published By
Team Alpha Canada

Editor-in-Chief
Rishie

Paraparapu Weekly
P.O.Box 171, 21 Main Street Markham, Ontario. L3P 3J7, Canada.
Phone: 416-548-8060 Fax: 416-548-8061
E-Mail: info@paraparapuweekly.com

சீனாவைக் கோட்டைவிட்ட கொக்கோகோலா

சீனாவில் பீஜிங் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் வாசகம், ''ஒரு நாடு, ஒரு கனவு' என்பது அந்நாட்டுக்கு மிகப்பெரிய அளவில் கிலியை ஏற்படுத்தியுள்ளது. ஒலிம்பிக் தீபம் செல்லும் இடமெல்லாம் எதிர்ப்பும், கண்டனமும் சீனாவிற்கு நெருக்கடியைத் தருவதாக உள்ளது. திபெத் மீதான சீனாவின் நிலைப்பாடு மற்றும் மனித உரிமைகள் மீறல் புகார்கள், சீனர்களைத் தனிமைப்படுத்துவதாக உள்ளது. ஒலிம்பிக் ஜோதி செல்லும் இடங்களில் எல்லாம் வன்முறையும், அருவெருக்கும் நடவடிக்கையும், போராட்டமும் இன்னும் தொடர்கிறது. குறிப்பாக லண்டனுக்கும் பாரிஸுக்கும் இடையே ஒலிம்பிக் ஜோதி சென்றபோது நடந்த சம்பவங்கள் வெறுப்பையும், அருவருப்பையும் ஏற்படுத்தியது. இதனால், சாபிரான்சிஸ் கோவில் இருந்து ஒலிம்பிக் ஜோதி புறப்பட்டபோது கடைசி நிமிடத்தில் அதன் பாதை மாற்றி அமைக்கப்பட்டது. இருந்தபோதும் இது எந்த வகையிலும் எதிர்ப்புப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதாக இல்லை.

இந்த நடவடிக்கைகள் சீனாவிற்கு மிகப்பெரிய அளவில் பின்னடைவை ஏற்படுத்தும். அதாவது, உலக விடயங்களில் தலையிடும் சம உரிமை பெற்ற நாடாக சீனா விளங்க வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக இது உள்ளது. இந்த நடவடிக்கை சீன அரசுக்கு மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் உள்ள சீன மக்களுக்கும் மிகப்பெரிய அவமரியாதையாக இருக்கும். திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும் இடங்களில், அந்தந்த நாடுகளில் வாழும் சீனர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துவிடுகிறது.



கடந்த வெள்ளிக்கிழமை ஒலிம்பிக்



ஜோதி ஆர்ஜென்டினா தலைநகரில் மிக அமைதியாக கொண்டு செல்லப்பட்டது. இதுவே பீஜிங்கிற்கு மிகப் பெரிய நிம்மதியை அளித்தது. அதேபோல தான்சானியாவிலுள்ள தார்-இ-சலாம் நகரில் கடந்த ஞாயிறன்றும், ஓமன் நாட்டில் உள்ள மஸ்கட்டில் கடந்த திங்கட்கிழமையும் ஒலிம்பிக் ஜோதி எந்த இடையூறும் இல்லாமல் கொண்டு செல்லப்பட்டது. பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத்தில் இந்த வாரம் ஜோதி கொண்டு செல்லப்பட்டது. அங்கு வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இஸ்லாமாபாத்திற்குப் பிறகு ஒலிம்பிக் ஜோதி இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இங்கு திபெத்தியர்கள் ஏராளமானோர் கூடி போட்டி ஜோதி ஓட்டம் நடத்தினர். இந்தியாவிலும் ஜோதி கொண்டு செல்லப்படும் வீதியெங்கும் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டதோடு பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டது. ஜோதி அமைதியாகக் கொண்டு செல்லப்பட்டாலும், போட்டிக்கு விடுதலை ஜோதியை திபெத்தியர்கள் நடத்தியது உலகின் கவனத்தை ஈர்த்தது. அதற்கு அடுத்ததாக அவுஸ்திரேலியாவுக்கு ஜோதி கொண்டு செல்லப்பட்டது. அங்கும் திபெத்தியர்கள் தங்களது எதிர்ப்பை ஆர்ப்பாட்டம் மூலம் தெரிவித்தனர்.

21 நாடுகளிலும் ஒலிம்பிக் ஜோதி கொண்டு செல்லும் திட்டம் விரைவில் நிறைவுபெறப் போகிறது. இந்த திட்டத்தின்படி, ஒலிம்பிக் ஜோதி திபெத்திற்கும் கொண்டு செல்லப்படும். வரும் ஒகஸ்ட் 8ம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் தொடக்க நாளன்று ஜோதி கொண்டு வரும்போதும் எதிர்ப்புகள் இருக்கும் என்று தெரிகிறது. ஒலிம்பிக் போட்டிகள் தொடக்க நாள் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக 30 ஆயிரம் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் குவிகின்றனர். சீனாவால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவினரும் தங்களது எதிர்ப்பை உலகம் முழுவதும் தெரிவிக்க இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிடும்.

அடுத்த நான்கு மாதங்களில் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணவில்லை என்றால், இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், ‘எதிர்ப்புகள் நிறைந்த ஒலிம்பிக்’ என்று பெயர் பெற்றுவிடும். திபெத்தில் சீனா அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து வருவதற்கும், மனித உரிமைகள் மீறப்படும் கொடூரத்தால் ஒலிம்பிக் ஜோதி செல்லும் இடங்களில் போராட்டம் வெடிக்கிறது. இந்த

ஒலிம்பிக் ஜோதி செல்லும் இடங்களில் எல்லாம் வன்முறையும், அருவெருக்கும் நடவடிக்கையும், போராட்டமும் இன்னும் தொடர்கிறது. குறிப்பாக லண்டனுக்கும் பாரிஸுக்கும் இடையே ஒலிம்பிக் ஜோதி சென்றபோது நடந்த சம்பவங்கள் வெறுப்பையும், அருவருப்பையும் ஏற்படுத்தியது.



எதிர்ப்பு நடவடிக்கை சீனர்களிடையே ஒருவிதச் தேச பற்றை உருவாக்கியுள்ளது. ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது நம்பிகையை அதிகரித்துள்ளது.

ஒலிம்பிக் ஜோதி செல்லும் கோல்டன் கேட் பாலத்தில் திபெத்தியர்கள் தயாராக நின்று கொண்டு ஜோதியை அணைக்கும் முயற்சியிலும், அதனைப் பிடுங்கி எறியும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதாக, செய்திகள் மற்றும் தொலைக்காட்சிச் செய்திகளை ஆதாரம் காட்டி, இணையத்தள 'சட்' அறை முழுவதும் இதே பேச்சுத்தான். உலக அரங்கில் தங்கள் நாட்டின் சார்பில் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தியபடி வரும்போது அதை போராட்டக்குழுவினர் அணைக்க முயலும்போது, ஒரு சாதாரண சீனர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் விவாதிக்கப்படுகிறது.

ஒலிம்பிக் ஜோதி கொண்டு செல்லப்பட்ட இடங்களில் திபெத்தியர்களால் இடையூறு ஏற்பட்டபோது, சீனர்களும், மேற்கத்திய நாட்டைச் சேர்ந்தவர்களும் நடந்து கொண்ட விதம் பரபரப்பாகப் பேசப்படுகிறது. சீனர்கள் தரப்பில் 28 வயதான ஜின் ஜிங் என்ற வீராங்கனை, ‘சக்கர நாற்காலித் தேவதை’ என்று கருதப்படுகிறார்.
புற்று நோயினால் தனது ஒரு காலை இழந்த அவர், ஷாங்காயின் சக்கர நாற்காலி பென்சிங் விளையாட்டுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் சென்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜோதியை அணைக்க முயன்றனர். அப்போது அவர்களிடமிருந்து பத்திரமாகப் போராடி ஜோதியைக் காப்பாற்றினார். ஜோதியை காப்பாற்றும் அவரது போராட்டம் படங்களாக பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியானது. இதனைப் பார்த்த அனைத்து சீனர்களும் உணர்ச்சி வசப்பட்டுப் போயினர்.

"வீராங்கனை ஜின், சக்கர நாற்காலியில் அமர்ந்துள்ள ஒரு சிரிக்கும் தேவதை. ஒலிம்பிக் ஜோதியைக் காப்பாற்றும் அவரது முயற்சியைப் பார்த்ததும் நாட்டில் உள்ள அனைவரது நெஞ்சையும் தொட்டுவிட்டார்" என்று சின்குவா செய்தி ஏஜன்சி புகழ் பாடுகிறது. அவரது உறுதித் தன்மையும், தீமையை எதிர்த்துப் போராடும் குணமும் சீனாவின் அடையாளமாக அவர் கருதப்படுகிறார்.

ஒரு ஹோட்டலில் சுவிட்ச்போர்ட் ஒப்பரேட்டராக ஜின் வேலை பார்த்தார். பின்னர் தனது வேலையை இழந்துவிட்டார். தற்போது இந்த ஒலிம்பிக் ஜோதி நிகழ்வின் பின், ஜின் மற்றுமொரு வேலையைத் தேடிக் கொள்வதில் எந்த சிரமும் இருக்காது என்று அனைவரும் நம்புகின்றனர். இன்றுள்ள நிலையில் ஜின் வேலை கேட்டால் சீனாவில் போட்டிபோட்டுக் கொண்டு கொடுப்பார்கள். இதைப் போலவே மற்றுமொரு நிகழ்ச்சியும் குறிப்பிடும்படி உள்ளது. 41 வயதான



சீனர்கள் தரப்பில் 28 வயதான ஜின் ஜிங் என்ற வீராங்கனை, ‘சக்கர நாற்காலித் தேவதை’ என்று கருதப்படுகிறார். புற்று நோயினால் தனது ஒரு காலை இழந்த அவர், ஷாங்காயின் சக்கர நாற்காலி பென்சிங் விளையாட்டுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் சென்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜோதியை அணைக்க முயன்றனர்.

மஜோரா கார்டர் என்ற வீராங்கனை சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தியபடி ஓடினார். அப்போது தனது சட்டையில் மறைத்து வைத்திருந்து திபெத்தியக் கொடியை எடுத்து பறக்க விட்டார். இதைக் கவனித்துவிட்ட பாதுகாப்பு படையினர் உடனே திபெத் கொடியைப் பறித்து சான்பிரான்சிஸ்கோ பொலிசாரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து ஒலிம்பிக் ஜோதியைச் சுற்றி சீன பாதுகாப்புப் படையினர் துணை நிலை ராணுவப்படையினர் புடைசூழ வலம் வருகின்றனர். சான்பிரான்சிஸ்கோ வீராங்கனையின் முயற்சி பெரியதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், சீன வீராங்கனை ஜின் முயற்சி தொலைக்காட்சிகளில் 15 நிமிடத்திற்கும் மேலாக ஒளிபரப்பப்பட்டது.

இதுகுறித்து மஜோரா கார்டர் பின்னர் நியூயோர்க் டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், ‘‘பேச்சுச் சுதந்திரம் இல்லாதவர்களுக்காக அமெரிக்க குடிமகனுக்கு உரிய எனது உரிமையை நான் பயன்படுத்திக் கொண்டேன். திபெத்தில் என்ன நடக்கிறது என்பதை நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அதற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினேன். அதனால்தான் இப்படி செய்தேன். ஒலிம்பிக் ஜோதி ஏந்திச் செல்லும் படையில் இனி நான் இருக்கப் போவதில்லை,’’ என்றார்.

இதுகுறித்து கொக்கோகோலா நிறுவனப் பிரதிநிதி கெல்லி பூருக்ஸ், ‘‘வீராங்கனை கார்டருக்கு எங்கள் நிறுவனம் ஸ்பொன்சர் செய்கிறது. ஒலிம்பிக்

போட்டிகளின்போது சீனாவில் கொக்கோகோலா அதிக அளவு விற்பனை செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், தற்போது நடைபெற்ற சம்பவங்களால் எங்கள் நிறுவனம் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளது. எங்கள் நிறுவனம் ஸ்பொன்சர் செய்த வீராங்கனை ஒலிம்பிக் ஜோதி பயணத்தில் தனிப்பட்ட அரசியல் விமர்சனம் செய்வார் என்று நாங்கள் கொஞ்சம்கூட எதிர்பார்க் கவில்லை. ஒலிம்பிக் என்பது உண்மையில் திறமையை வெளிக்கொணரும் ஒரு விளையாட்டுப் போட்டி என்பதில் எங்களுக்கு அதிகமான நம்பிக்கை உள்ளது. அதனால், பீஜிங் 2008 ஒலிம்பிக் போட்டிகளை நாங்கள் பெருமையுடன் ஆதரிக்கிறோம்,'' என்றார்.

இதுபோன்ற ஒரு எதிர்ப்பை சீனத் தலைவர்களும், உலகமும் எதிர்பார்த்து இருக்காது. மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒலிம்பிக்கைப் பயன்படுத்தி, திபெத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு ஆதரவாக, சீனா வுக்கு எதிராக செயல்படத் தொடங்கியுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தச் செயல்கள் சீனத் தலைவர்களை மறுபரிசீலனை செய்யத் தூண்டும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இதற்கு நேர் எதிராக, திபெத் பிரச்சனைக்கு ஆதரவாக மேற்கத்தியர்களின் எதிர்ப்பு சீனர்களிடையே கோபத் தைத் தூண்டியுள்ளது. மேலும், கடுமையான முடிவு களை எடுக்கவும் தூண்டுகிறது. பல்வேறு எதிர்ப்புக ளுக்கும் இடையே, சீனத் தலைவர்கள் கொஞ்சமும் அஞ்சவில்லை. மனித உரிமைப் போராட்டம் நடத்திய ஹு ஜியா என்பவரை மூன்றரை ஆண்டுகள் சிறையில் அடைத்தனர். பீஜிங்கின் வடமேற்கில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் தன்னாட்சி நகரான சின்ஜியாங் நகரமும் பிரிந்துசெல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரி கிறது.

மக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சகம் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில், ''ஒலிம்பிக் போட்டிகளை குறிவைத்துத் தாக்க திட்டமிட்ட தீவிரவாதிகள் குழு வினர் சின்ஜியாங் பகுதியில் பதுங்கி இருந்து செயல் பட்டதைப் பொலிசார் கண்டுபிடித்து அழித்துள்ளனர்,'' என்றார்.

தீவிரவாதச் செயல்களை அழித்தது உண்மையாக இருக்கலாம். ஆனால் இதற்கு ஆதாரமாக பொலிசார் எந்தப் புகைப்படமோ, கைது நடவடிக்கையோ செய்யாதது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. சின்ஜி யாங் பகுதியில் வசிக்கும் உய்குர் சிறுபான்மை மக்களின் போராட்டத்தால் பிளவுகள் ஏற்படாமல் தடுக்கவே சீன அதிகாரிகள் மிகைப்படுத்தி இவ்வாறு கூறுகின்றனர் என்றும் பரவலாகப் பேச்சு அடிபடுகிறது.

திபெத் சுதந்திரம் கேட்டுப் போராடும் 'திபெத் இளைஞர் காங்கிரஸ்' அமைப்பை தீவிரவாதக் குழு என்று சீன



எங்கள் நிறுவனம் ஸ்பொன்சர் செய்த வீராங்கனை ஒலிம்பிக் ஜோதி பயணத்தில் தனிப்பட்ட அரசியல் விமர்சனம் செய்வார் என்று நாங்கள் கொஞ்சம்கூட எதிர்பார்க் கவில்லை என்றார் கொக்கோகோலா நிறுவனப் பிரதிநிதி கெல்லி புருக்ஸ்

ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன. எந்த ஆதாரமும் வெளியே காட்டாமல் குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு எதிர்ப்புகள் பலமாக கிளம்புகிறது.

இதற்கிடையே அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தித்தாளான 'பீப்பிள்ஸ் டெய்லி' , எந்தத் தேர்தலிலும் பெலோசிக்கு எதிராக சீன மக்கள் வாக் களிப்பார்கள்,'' என்கிறது.

சின்குவா செய்தி நிறுவனம், ''தலாய் லாமாவுக்கு ஆதரவாக பெலோசி செயல்படுகிறார் என்பது சந்தேகமே இல்லாமல் தெளிவாகிறது. 'கொள்ளைக் கூட்டத்தவர் மற்றும் வன்முறைக்காரர்களுக்கு' பாது காப்பு அளிக்கும் செயலை பெலோசி செய்கிறார் என்று சீன மக்கள் அனைவரும் முடிவு செய்துள்ளனர். மேற்கத்திய நாடுகளில் எதிர்ப்புகள் நடப்பதற்கு இது முக்கியமான செயல் என்றும் சீனா கருதுகிறது. ஒலிம்பிக் போட்டியை வெற்றிகரமாக நடத்திவிட்டால் உலக அரங்கில் சீனா முக்கியமான இடத்தைப் பெற்றுவிடும் என்ற அச்சத்தில் மேற்கத்திய நாடுகளின் சதித்திட்டத்தில் தற்போது வன்முறைகள் நடந்து வரு கின்றன. அதுவே ஒலிம்பிக் ஜோதி கொண்டு செல்லப் பட்ட பாதையில் இடையூறு ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது என்று சீனா கருதுகிறது" என்று எழுதியுள்ளது

மேற்கத்திய நாடுகளின் மீதுள்ள சீனாவின் கோபம் ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகும் தொடரும் எனத் தெரிகிறது. ஒலிம்பிக் போட்டியின் தொடக்க நாள் விழாவைப் புறக்கணிக்க வேண்டும் என்று மேலை நாட்டுத் தலைவர்களுக்குத் தொடர்ந்து வற்புறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன என்பதால் சீனா நடத்தும் ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு மேலை நாடுகளுடன் நெருக்கமான உறவு ஏற்படும் என்ற கனவு தற்போது தகர்ந்துவிட்டது.

ஈழப் போர்களில்

இதுவரை நடந்தவை

பாகம் ஒன்று: இரண்டாம் ஈழப் போர்

திட்டங்கள்.. நகர்வுகள்.. தாக்குதல்கள்

முழுமையான விபரமான யுத்தமுனைப் பதிவுகள்

அத்தியாயம் 2

கிழக்கில் ஆரம்பித்த இரண்டாம்கட்ட ஈழப்போர் 1990 ஜுன் நடுப்பகுதியில் வடக்கிற்கும் வியாபித்தது. வடக்கின் பல பாகங்களிலும் இருந்த ராணுவத்தினரின் பாரிய முகாம் களில் இருந்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீதும் விடுதலைப்புலிகளின் வதிவிடங்கள் மற்றும் முகாம்கள் மீதும் செறிவான எறிகணைத் தாக்குதல்களும் விமானக் குண்டுவீச்சுகளையும் ராணுவத்தினர் அப்போது நடத்த ஆரம்பித்திருந்தனர்.

இதனால் வடக்கில் உள்ள ராணுவ முகாம்களையும் (வடக்கில் அப்போது பிரதானமாக யாழ்.கோட்டை, பலாலி, மாங்குளம், ஆனையிறவு, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் ராணுவத்தினரின் பிரதான ராணுவத்தளங்கள் இருந்தன) தாக்கியழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு புலிகள் தள்ளப்பட்டனர். குறிப்பாக ராணுவத்தினர் நிலைகொண் டிருந்த பகுதிகளை மீட்டெடுக்கும் தந்திரோபாயம் அப்போது முன்னிலை வகித்தது.

இந்த தந்திரோபாயத்தின் அடிப்படையில், இரண்டாம் கட்ட ஈழப்போரில் வடக்கில் இடம்பெற்ற முதலாவது மிகப் பெரும் தாக்குதலாக யாழ். கோட்டை மீதான தாக்குதல் விளங்கியது.

ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் யாழ்ப் பாணத்தின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கட்டியதே யாழ். கோட்டை. யாழ். நகரை அண்மித்து பண்ணைப் பாலத்திற்கு அருகாக அமைந்திருந்த இந்த கோட்டை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். அத்துடன் யாழ். நகரத்தில் ராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதற்கான அடையாளச் சின்ன மாகவும் இந்த கோட்டையே விளங்கியது. அத்துடன் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதும் கோட்டை ராணுவத் தளத்தில் இருந்து கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் தினமும் இடம்பெறத் தொடங்கின. இதனால் யாழ்.மருத்துவமனை மற்றும் அதனையண்மித்த பகுதிகளில் இருந்த நோயாளர்களும், மக்களும் பெருஞ் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

எனவே யாழ்.கோட்டையில் இருந்த ராணுவத் தளத்தை தாக்கியழித்து அதனைக் கைப் பற்றுவதற்கு புலிகள் திட்டமிட்டனர். ஆனாலும் அது இலகுவான காரியமல்ல என்பது புலிகளுக்கு தெரிந்ததால் அதற்கான திட்டங்களையே முதலில் வகுத்தனர். யாழ்.கோட்டை ராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள மூன்று பகுதிகள் சுமார் 30 அடி அகலமான அகழிகளால் சூழப்பட்டிருக்க நான்காவது பகுதி கோட்டைக்கு பின்புறமாக அமைந்திருந்த நிலவறை ஊடாக மண்டைதீவு வரை பண்ணைக் கடலுடன் தொடர்புபட்டிருந்தது. அத்துடன் நாலாபுறமும் பெரிய, அகன்ற, 30 அடி உயரமான மதிற்சுவரால் கோட்டை கட்டப்பட்டிருந்தது.

மதிற்சுவர்களின் மேலேறிப் பார்த்தால் யாழ். நகர் வரை அனைத்தும் தெட்டத்தெளிவாகத் தெரியும். ஐங்கோண வடிவில் கட்டப்பட்டிருந்த கோட்டையின் அகன்ற மதில்களின்மேல் கனரக ஆயுதங்களைக் கொண்ட ஐந்து பெரிய அரண்களும் கட்டப்பட்டிருந்தன. கோட்டைக்கு வடகிழக்காகவும், வடமேற்காகவும், தெற்கு பகுதியை நோக்கியும், தென்கிழக்காகவும், தென்மேற்காகவும் இந்த அரண்கள் கட்டப்பட்டிருந்தன. இவற்றில் தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதியில் கட்டப்பட்டிருந்த அரண்கள் பண்ணைக் கடலில் இருந்து வரும் தாக்குதல்களைச் சமாளிக்க கூடிய வகையிலும், ஏனைய மூன்று அரண்களும் தரையில் இருந்து வரும் தாக்குதல்களைச் சமாளிக்க கூடிய வகையிலும் அமைந்திருந்தன.

அத்துடன் கோட்டைக்குள் செல்வதற்கு ஒரேயொரு வாசலே இருந்தது. இந்த வாசலுக்கு அகழிக்கு மேலால் அமைக்கப்பட்ட பாலத்தின் ஊடாகவே செல்ல வேண்டும். அத்துடன் வாசலில் உள்ள கதவும்

அகலமற்று மிகவும் ஒடுங்கியதாகவே அமைக்கப் பட்டிருந்தது. இதுதவிர கோட்டை மதிற்சுவரை அண்மித்து சின்னக்கோட்டை என்று கூறப்படும் காவலரண்கள் சிலவும் அமைக்கப்பட்டிருந்தன. தாக்குதல்களுக்கு இலகுவில் முகம்கொடுக்கக்கூடிய வகையிலேயே சின்னக்கோட்டைகள் அமைக்கப் பட்டிருந்தன.

மொத்தத்தில் கோட்டை மீது திடீரென வலிந்த தாக்குதல் ஒன்றை நடத்துவதென்பது தற்கொலைக்கு ஒப்பானதாகவே இருந்தது. எனவேதான் கோட்டை மீதான தாக்குதலுக்காக புலிகள் பிரத்தியேகமான பல திட்டங்களைப் போடவேண்டியிருந்தது. அதன்படி தாக்குதலுக்கான இறுதித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

கோட்டை ராணுவத்தளம் மீது நேரடியாகத் தாக்குதல் நடத்தாமல் அந்த தளத்திலுள்ள ராணுவத்தினருக்கான விநியோகங்களை முதலில் தடுத்து நிறுத்தி ஒரு முற்றுகை நிலைக்கு கோட்டை ராணுவத் தளத்தைக் கொண்டுவருவதே முதலில் போடப்பட்ட திட்டம். இந்த முற்றுகை நிலைக்காக கோட்டையைச் சூழ புலிகள் பலம்பொருந்திய பாதுகாப்பு அரண்களை அமைத்தனர். கோட்டையை அண்மித்திருந்த பொலிஸ் நிலையக் கட்டடத்திலும், யாழ். மத்திய கல்லூரி விளையாட் டரங்கிலும், யாழ். நூலகக் கட்டடத்திலும், வீரசிங்கம் மண்டபப் பகுதியிலும், பண்ணைச் சந்தியை அண்மித்த பகுதியிலும், தொலைத்தொடர்பு நிலையக் கட்டடப் பகுதியிலும் மேலும் சில இடங்களிலும் புலிகள் தமது பாதுகாப்பு அரண்களை அமைத்துக்கொண்டனர்.

சில இடங்களில் அமைக்கப்பட்ட காவலரண்கள் கோட்டைக்கு மிகவும் அருகில் உருமறைப்புச் செய்து காணப்பட்டன.

அதாவது கோட்டைக்குள் இருந்து பார்க்கும்போது இந்தக் காவலரண்கள் கண்களுக்குத் தெரியாது. அந்தவகையில் மண்டைதீவு கடல் பரப்பு தவிர ஏனைய மூன்று முனைகளிலும் தமது பாதுகாப்பு அரண்களை செறிவாக அமைத்துப் பலப்படுத்தினர்.

கோட்டை ராணுவத்தளத்திற்கான விநியோக நடவடிக்கைகள் துண்டிக்கப்படும் நிலை உருவாகுவதை அறிந்து கடும் ஆத்திரமடைந்த பாதுகாப்பு அமைச்சு, விமானங்களைப் பயன்படுத்தி புலிகளின் பாதுகாப்பு அரண்களை அழிக்கும் தீவிர தாக்குதலை முன்னெடுத்தது. 'சகடை' மூலம் பீப்பாய்க் குண்டுகள் போடப்பட, ஹெலிகொப்டர்கள் மூலம் கலிபர் தாக்குதல்கள் இரவு பகல் பாராது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அதேநேரம் கோட்டை ராணுவத் தளத்திற்கான விநியோகங்கள் விமானங்கள் மூலம் ஆகாயத்தில் இருந்தே கொட்டப்பட்டன.

விமானத்தாக்குதல்களில் இருந்து தமது அரண்களைப் பாதுகாப்பதற்காக புலிகளின் விமான எதிர்ப்புப் பிரிவும் கோட்டைப் பகுதிக்கு நகர்த்தப்பட்டது. புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவினர் அப்போது 50 கலிபர் ரக துப்பாக்கிகளையே பயன்படுத்தினர். புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவினர் கட்டடங்களின் கூரை மீதேறியிருந்தவாறே குண்டுபோட வரும் விமானங்களைக் குறிவைத்தன. இதனால் ராணுவத்தினருக்கான உணவுப் பொட்டலங்களை வீசிய விமானங்களும் மிகவும் உயரத்திலேயே பறந்தவாறு இருந்தன. அதுமட்டுமன்றி பண்ணைக்கடலில் இருந்தும் மண்டைதீவுக் கடலில் இருந்தும் கடற்படைக்கலங்கள் கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடத்தின.

கோட்டை மீதான புலிகளின் முற்றுகைத் தாக்குதலை முறியடிக்க தரையிறக்க நடவடிக்கைகள் எதுவும் நிகழலாம் என்று கருதிய புலிகளின் தளபதிகள், யாழ். நகரின் கரையோரப் பகுதிகளிலும் தமது படையணிகளை



நிறுத்திவைத்தனர். அதேநேரம் கோட்டை மீதான தாக்குதலுக்காகவே பிரத்தியேகமாக புலிகள் சில கனரக ஆயுதங்களையும், கனரக வாகனங்களையும் தாமே வடிவமைத்திருந்தனர். குறிப்பாக பசீலன் 2000 எறிகணைகள் புலிகள் வடிவமைத்த கனரக தாக்குதல் ஆயுதமாகவும், பாரம் துக்கி போன்ற வாகனங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட புல்டோசர்கள் மற்றும் டாங்கிகள் அவர்களால் வடிவமைக்கப்பட்ட கனரக வாகனங்களாகவும் இருந்தன.

இப்படி கோட்டையை மீட்பதற்கான தமது முழுக் கவனத்தையும் புலிகள் அப்போது செலுத்தினர். ஒருபுறம் கோட்டை மீதான தாக்குதலுக்கு தேவையான கனரக ஆயுதங்களையும் வாகனங்களையும் வடிவமைத்த புலிகள், மறுபுறத்தே பாதுகாப்பு அரண்களை உறுதியாக அமைத்துக்கொண்டு ராணுவத்தினருக்கான விநியோக நடவடிக்கைகளை குறிப்பிடத்தக்களவு முடக்கினர்.


ராணுவத்துக்கான விநியோக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதையடுத்து, திட்டத்தின் அடுத்த கட்டமாக கோட்டை மீதான தாக்குதலை ஆரம்பித்தனர். 1990 ஜுன் 18ம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு கோட்டை ராணுவத்தளம் மீதான தாக்குதல் தொடங்கியது.

அப்போது யாழ்.மாவட்ட தளபதியாக இருந்தவர் கேணல் பானு. அவருடைய தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முற்றுகை யுத்தத்தை புலிகளின் ஏனைய தளபதிகள் சிலரும் முன்னின்று வழிநடத்தினர். யாழ். கோட்டைத் தாக்குதலுக்காகவே புலிகளால் தயாரிக்கப்பட்ட பசீலன் 2000 ரக எறிகணை மூலமே கோட்டை மீதான முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ். பொலிஸ் நிலையம் மற்றும் மத்திய கல்லூரி அமைந்திருந்த பகுதிகளில் வைத்து ஏவப்பட்ட பசீலன் 2000 எறிகணைகள் காதைப் பிளக்கும் சத்தத்துடன் கோட்டை ராணுவத் தளத்திற்குள் வீழ்ந்து வெடித்தன.

புலிகளால் உருவாக்கப்பட்ட பசீலன் 2000 எறிகணைகள் இந்த தாக்குதலின் மூலமே வெளியே அறியப்பட்டது. பசீலன் 2000 கோட்டைக்குள் வீழ்ந்து வெடித்ததும் புலிகளின் அணிகள் கோட்டை நோக்கி விரைந்தன. இருதரப்புக்கும் இடையில் உக்கிர மோதல் வெடித்தது. புலிகள் எதிர்பார்த்ததற்கும் மேலாக கோட்டைக்குள் இருந்து கடுமையான எதிர்த்தாக்குதல்கள் நடத்தப் பட்டன. கோட்டையின் மதிற்சுவரை அடைவதற்கே எக்கச்சக்கமான சிரமங்களை புலிகள் சந்திக்க வேண்டியிருந்தது.

தம்மால் வடிவமைக்கப்பட்ட கனரக வாகனங்களைப் பயன்படுத்தி கோட்டை மதிற்சுவர் வரை முன்னேறுவதே புலிகளின் முதற்திட்டம். இந்த கனரக வாகனங்களில் ஏராளமான மண்மூடைகள் அடுக்கப்பட்டு நகரும் பாதுகாப்பு அரண்களாகவே இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. எனினும் இந்த வாகனங்கள் கோட்டை மதிற்சுவரை அடைய விடாமல் பார்த்துக் கொள்வதில் ராணுவத்தினர் குறியாக இருந்தனர். புலிகளும் கடுமையான தாக்குதல்களை நடத்திய போதும் ராணுவத்தினரின் அரண்களை நெருங்க முடியாமல் போனதால் புலிகளின் முதலாவது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

எனினும் புலிகள் கோட்டைப் பகுதியைச் சுற்றிய காப்பரண் முற்றுகையைக் கைவிட்டுவிடவில்லை. அந்த காப்பரண்களில் நிலைகொண்டிருந்தவாறே கோட் டைக்குள் இருந்த ராணுவத்தினருக்கான விநியோ கங்களை தொடர்ந்தும் முடக்கி வைத்திருந்தனர். எனினும் சுமார் இரண்டு மாதங்கள் கழித்தே மீண்டும் கோட்டை மீதான தாக்குதலை புலிகள் நடத்தினர்.







இந்த இரண்டு மாத காலப்பகுதியில் கோட்டையை மீட்பதற்கான மேலதிக உத்திகளில் கவனம் செலுத்திய புலிகள், இந்த காலப்பகுதியில் வடக்கில் ராணுவத்தினர் நிலைகொண்டிருந்த ஏனைய இடங்களிலும் தாக்குதல்களை விரிவுபடுத்தினர். எனவே இந்த இரண்டு மாத காலப்பகுதியில் இடம்பெற்ற ஏனைய தாக்குதல்களை பார்த்துவிட்டு பின்னர் மீண்டும் கோட்டை தாக்குதல் குறித்து பார்க்கலாம்.

கோட்டை மீதான தாக்குதல் ஆரம்பித்து இரண்டு நாட்கள் கழித்து 1990 ஜுன் 20ம் திகதி மன்னாரில் கஜுவத்த என்று அழைக்கப்பட்ட கொண்டச்சி ராணுவமுகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தினர். கொண்டச்சி ராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு என்ன காரணம் என்பதை முதலில் பார்க்கலாம்.

கொண்டச்சி என்ற இடத்தில் ராணுவத்தின் ஆதரவுடன் சிங்களக் குடியேற்றவாசிகளைக் கொண்டு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகைத் தோட்டம் அமைக்கப்பட்டது. அத்துடன் இங்கு வேலை செய்வதற்கென மேலும் ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் புத்தளம் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு தமிழ் மக்களின் பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். அத்துடன் மன்னார் மாவட்டத்திற்கு உட்பட்டதான இந்த பகுதியின் முகாமைத்துவம் மற்றும் அரச நடவடிக்கைகள் புத்தளம் மாவட்டத்துடன் இணைந்ததாகவே மேற்கொள் ளப்பட்டன.

அதுமட்டுமன்றி இங்குள்ள பகுதிகளின் தமிழ்ப் பெயர்கள் நீக்கப்பட்டு அவற்றிற்கு சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டன. அத்துடன் இங்குள்ள ராணுவ முகாமில் வைத்து ஊர்காவல் படையினருக்கு ஷொட் கண்களும் வழங்கப்பட்டன. எனவேதான் கொண்டச்சி இராணுவ முகாமை தாக்கியழிப்பதற்கு புலிகள் திட்டமிட்டனர்.

1990 ஜுன் 20ம் திகதி பின்னிரவு கொண்டச்சி ராணுவ முகாமை சுற்றிவளைத்த புலிகள், ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடையுமாறு வெளியேயிருந்து ஒலிபெருக்கி மூலமாக அறிவிப்பு விடுத்தனர். எனினும் அந்த கோரிக்கையை ஏற்காத ராணுவத்தினர், புலிகளுடனான மோதலுக்கு தயாராகினர். அத்துடன் இரவோடிரவாக அனுராதபுரம் ராணுவத்தளத்திற்கும் தகவல் பறந்தது.

அனுராதபுர ராணுவத்தளத்தில் இருந்து ரகசியமாக படையணி ஒன்று இரவோடிரவாக கொண்டச்சி நோக்கி வரத்தொடங்கியது. கொண்டச்சி ராணுவ முகாமை சுற்றிவளைத்திருந்த புலிகள், அனுராதபுரத்தில் இருந்து படையணி வரும் விஷயத்தை பொட்டம்மான் தலைமையிலான உளவுப்பிரிவினரின் மூலமாகத் தெரிந்து கொண்டனர். தெரிந்ததும் சுற்றிவளைப் பிற்குள்ளான முகாம் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

21ம் திகதி அதிகாலை ஆரம்பித்த இந்த தாக்குதல்கள் சுமார் இரண்டுமணிநேரம்வரை நீடித்தது.

தாக்குதலின் முடிவில் அந்த முகாமை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த புலிகள், அங்கிருந்த பெருமளவான ஆயுத தளபா டங்களைக் கைப்பற்றினர். தென்னாபிரிக்கத் தயாரிப்பான பவள் கவச வாகனம் ஒன்றையும் இந்தத் தாக்குதலின்போது கைப்பற்றினர். அத்துடன் இங்கிருந்த 50ற்கும் அதிகமான ராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இங்கே ராணுவமுகாமில் இப்படித் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே நேரத்தில், அனுராத புரத்தில் இருந்து வந்துகொண்டிருந்த ராணுவப் படையணியும் இடைநடுவில் மறிக்கப்பட்டு தாக்குத லுக்கு இலக்கானது. இந்த தாக்குதல்களில் பத்து ராணுவத்தினர் உயிரிழந்ததாக அப்போது புலிகள் தெரிவித்திருந்தனர். எனினும் ஏனைய ராணுவத்தினர் காடுகள் ஊடாக கொண்டச்சி நோக்கி விரைந்தனர்.

அவர்கள் கொண்டச்சி முகாமை வந்தடைய முன்னரே அந்த முகாமில் இருந்த அனைத்தையும் வழித்து துடைத்துக் கொண்டு முகாமையும் தாக்கியழித்துவிட்டு அங்கிருந்த புலிகள் வெளியேறிவிட்டனர். இந்த இரண்டு தாக்குதல்களிலும் புலிகள் தரப்பில் 12 பேர் உயிரிழந்தனர்.

புலிகள் அங்கிருந்து வெளியேறியதையடுத்து மீண்டும் கொண்டச்சியில் ராணுவ முகாம் அமைக்கப்பட்டது. அந்த முகாமை குறிவைத்து புலிகளும் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர். இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்திலேயே ராணுவத்தினர் தரையில் இப்படியான பாரிய இழப்புகளைச் சந்திக்க, தரையில் மட்டுமின்றி கடலிலும் தங்களால் சாதனை படைக்க முடியும் என்பதை புலிகள் உலகுக்கு வெளிக்காட்டிய சம்பவம் நடைபெற்றதும் அதே தினத்தில்தான்..

கடற்புலிகளின் தோற்றம் குறித்தும், அவர்கள் நடத்திய முதலாவது வெற்றிகரமான தாக்குதல் குறித்தும், அந்த தாக்குதல்களால் இலங்கைக் கடற்படையும் ராணுவத்தினரும் சந்தித்த நெருக்கடிகள் குறித்தும் அடுத்தவாரம் அலசலாம்.

(தொடரும்)

சர்வ வல்லமை பொருந்திய ராணுவத் தீவு

டியாகோ கார்சியா. இந்தியப் பெருங் கடலில் ஆப்ரிக்காவுக்கும் இந்தோனே சியாவுக்கும் இடையே அமைந்துள்ள ஒரு குட்டித் தீவு. இந்தப் படைத்தளம் தீவிரவாதிகளால் தாக்கப்படலாம் அல்லது கைப்பற்றப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரில், சி.ஐ.ஏ.யின் கடும் கண்காணிப்பில் உள்ளது என்பதை அமெரிக்கா தற்போது வெளியிட்டுள்ளது. இந்தத் தீவில் என்ன விசேஷம்? அமெரிக்கா, உலகிலேயே அதிக நவீன வசதிகளைக் கொண்ட ராணுவத் தளத்தை இந்த ஒதுக்குப்புறமான குட்டித் தீவில் அமைத்துள்ளதுதான். அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பெர்சியன் வளைகுடாவிலிருந்து சுமார் 16,000 கிலோ மீற்றர் தொலைவில் இந்தத் தீவு உள்ளது. மிகப் பெரிய அளவிலான விமானப் படைத் தளத்தையும், கடற்படைத் தளத்தையும் அமெரிக்கா இங்கு அமைத்துள்ளது.

ஆரம்ப நாட்களில், இந்த ரகசிய ராணுவத் தளம் பற்றி மிகச் சிலரே அறிந்திருந்தனர். இங்கு அமெரிக்கா எப்படி ராணுவத் தளத்தை அமைத்தது?

ராணுவத் தளம் அமைக்க இந்தத் தீவு ஏற்றது என்பதை அமெரிக்கா கண்டறிந்தது. இதையடுத்து, பிரிட்டனின் உதவியுடன், டியாகோ கார்சியா மற்றும் அருகில் உள்ள சாகோஸ் ஆர்சிபிலாகோவில் வசித்த மக்களைக் கட்டாயப்படுத்தி அமெரிக்கா வெளியேற்றியது. இத்த கைய நடவடிக்கை 1968 மற்றும் 1973ம் ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்றன. அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளால் சுமார் 2,000 பேர் தமது வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

சாகோசியன்ஸ் என்று அழைக்கப்பட்ட இவர்கள் 2,000 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மோரிஷஸ் மற்றும் செஷல்ஸ் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் மறுவாழ்வுக்கு எவ்வித வசதியும் செய்து தரப்பட வில்லை. சாகோசியன்ஸ் மக்களின் மூதாதையர்கள் 18 ம் நூற்றாண்டில் இருந்தே இப் பகுதியில் வசித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

18ம் நூற்றாண்டில் சாகோஸ் ஆர்சிபிலாகோவில் குடியேறியிருந்த சாகோசியன்களின் மூதாதையர்கள் அனைவரும் ஆப்ரிக்கா மற்றும் இந்தியாவிலிருந்து அடிமைகளாக அழைத்து வரப்பட்டனர். பிரான்கோ மோரிஷியன்களின் கட்டட வேலைகளிலும், தென்னந்



தோப்புகளிலும் பணியமர்த்தப்பட்டனர். சுமார் இரு நூற்றாண்டுகளாக அவர்கள் இத் தீவுகளில் தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் வேலை வாங்கப்பட்டனர். 20ம் நூற்றாண்டின் நடுவிலேயே அவர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது எனச் சொல்லலாம். சுதந்திரமாக அவர்கள் வாழத் தொடங்கினர். அவர்களது வாழ்வில் வசந்தம் பிறந்தது. வாழ்வில் சமூக மாற்றங்கள் ஏற்பட்டன.

வேலைவாய்ப்பு, ஊதியம், இலவச வீடுகள், கல்வி, ஓய்வூதியம், சுகாதார வசதி உட்பட பல்வேறு வசதிகளைப் பெற்றனர்.

ஆனால், 1950களில் இவர்களது வாழ்வில் புயல் வீசத் தொடங்கியது. அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தியாகோ கார்சியாவை ராணுவத் தளம் அமைக்க உகந்த இடம் எனத் தேர்ந்தெடுத்தனர். உடனே எப்படி அந்த இடத்தில் பெரிய அளவிலான ராணுவத் தளத்தை அமைக்க முடியும்?

உள்ளூர் மக்கள் மற்றும் அரசு நிர்வாகத்திடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பும் என அதிகாரிகள் அஞ்சினர். இருந்தும் அமெரிக்கப் படைகளை இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிறுத்தினர். தீவுகளில் படைத்தளங்கள் அமைப்பது என்ற திட்டத்தை வகுத்தனர். அதைச் செயல்படுத்தவும் முனைந்தனர்.

எதிர்ப்புகளைச் சமாளிக்கவும் அமெரிக்கப் படையினர் தயாராக இருந்தனர். இங்கிருக்கும் பல தீவுகளில் குறைந்த மக்கள் வாழும் தீவுகளில் படைத் தளத்தை அமைப்பது என்று முடிவு செய்தனர்.

மொத்தத்தில் கூட்டிக் கழித் துப் பார்த்தபோது, அவர்கள் முடிவு செய்தது டியாகோ கார்சியாதான் படைத்தளம் அமைக்க உகந்த இடம் என்று. உடனே நடவடிக்கையில் இறங்கினர். டியாகோ கார்சியாவைக் கையகப்படுத்தினர்.


கப்பல் தளம், விமானத் தளங்கள் அமைக்கப்பட்டன. அங்கு வசித்த மக்களை அப்புறப்படுத்துவதில் அவர்கள் அதிகம் சிரமப்படவில்லை. எதிர்ப்புகள் பெரிதாக எழவில்லை.

1960ம் ஆண்டில் டியாகோ கார்சியா பற்றி பிரிட்டிஷ் அரசுடன் அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்வந்த ஆண்டுகளில் பிரிட்டிஷ் அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, அந்தத் தீவை ராணுவ நகரமாக மாற்றினர்.

அதற்கு பிரிட்டிஷ் இந்திய கடல் பிராந்தியம் எனப் பெயரிட்டனர். அதற்குக் கட்டுப்பாடுகளை விதித்தனர். பின்னர் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுக்கப்பட்டன. ஈராக்கில் ராணுவப் படைகள் அமெரிக்கா நிறுத்தும் நடவடிக்கையில் இந்தத் தீவில் இருந்துதான் படைகளை அனுப்புவது குறித்து விவாதிக்கப்பட்டது.

சகோஸியன்களை வெளியேற்றுவது, பிராந்தியங்கள் அமைப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் ரகசியமாக மேற்கொள்ளப்பட்டன. இதற்காக 1.4 கோடி அமெரிக்க டொலர்கள் பிரிட்டனுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 1968ம் ஆண்டின் தொடக்கத்தில், மருத்துவ சிசிச்சை உட்பட பல்வேறு காரணங்களுக்காக மோரீஷஸ் தீவுக்குச் சென்ற சகோஸியன்கள் மீண்டும்



டியாகோ கார்சியா தீவுக்குள் திரும்பிவர முயன்றபோது அனுமதிக்கவில்லை. அதற்கு அடுத்தபடியாக, அந்தத் தீவில் வசித்தவர்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதை பிரிட்டிஷ் அதிகாரிகள் நிறுத்தினர். இந்நிலையில், அங்கு வசித்தோர் உணவு, மருந்துப் பொருள்கள் கிடைக்காமல் சிரமப்பட வேண்டியதாயிற்று.

இந்த நடவடிக்கை அங்கிருந்த மக்களை தீவிலிருந்து வெளியேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட ஒரு அழுத்தம். அமெரிக்க அதிகாரிகளின் ஆதரவுடன், பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த இம்மக்கள் மீது தங்கள் பிடியை இறுக்கியது.

1971ம் ஆண்டு அமெரிக்கக் கடற்படை தமது கட்டுமான வேலைளை இத் தீவில் தொடங்கியது. அங்கிருக்கும் மக்களை உடனே வெளியேற்றும்படி, அதற்காக பிரிட்டனுக்குப் பணம் கொடுத்திருந்த அமெரிக்கா, பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டது.

இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஏஜன்ட்களும் அமெரிக்கப் படைவீரர்களும் ஒன்றிணைந்து இத்தீவு மக்களின் செல்லப் பிராணிகளான ஆடுகள் நாய்கள் போன்றவற்றை ஓரிடத்தில் அடைத்து, அவற்றை அதன் உரிமையாளர்களின் முன் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதனால் திகிலடைந்திருந்த மக்களை மறுநாளே கப்பலில் ஏற்றி வலுக்கட்டாயமாக மோரீஷஸ் மற்றும் செஷஸ் தீவுகளுக்கு நாடு கடத்தினர். அவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை.

இதுகுறித்து 1975ம் ஆண்டு வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட ஒரு கட்டுரையில், நாடுகடத்தப்பட்ட மக்கள் மிகவும் கேவலமான நிலையில் வறுமையில் வாடுகின்றனர் என்று தெரிவித்திருந்தது. இன்றும் சுமார் 5000 பேர் வறுமையில் வாடுகின்றனர்.

இந்நிலையில், அனைவரும் நாடு கடத்தப்பட்ட நிலையில், அமெரிக்காவின் பென்டகன் அத் தீவில் தகவல் தொழில்நுட்ப வசதியை ஏற்படுத்தியது. ஆண்டுகள் ஆக ஆக அங்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, ஒரு முழு அளவிலான ராணுவத் தளமாக அத் தீவு மாறியது.

1973ல் இஸ்ரேலியப் போரின்போது இந்தத் தளத்திலிருந்து விமானப் படை வீரர்கள் சென்று போரிட்டனர்.

விரைவில், மத்தியக் கிழக்கு நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய அளவிலான ராணுவத் தளம் என்ற பெயரை அத் தளம் பெற்றது.

ஈரானியப் புரட்சி, 1979ல் ஆப்கானிஸ்தான் மீது சோவியத் படைகளின் படையெடுப்பு ஆகியவற்றுக்குப் பின் அமெரிக்க ஜனாதிபதிகள் ஜிம்மி கார்டர், ரொனால்ட் ரீகன் ஆகியோர் ஆர்.டி.எப். என்ற படைப்பிரிவை அமைத்தனர்.

அமெரிக்காவை அச் சுறுத்தும் நாடுகளை எதிர்கொள்ள இப் படைப்பிரிவு அமைக்கப்பட்டது. இந்த ஆர்.டி.எப். படையினருக்கு டியாகோ கார்சியா ஒரு முக்கிய மையமாக வழங்கப்பட்டது.

ஆர்.டி.எப். படைப்பிரிவு அமெரிக்காவின் மத்தியப் படைப்பிரிவுக்கு மாற்றப்பட்டது. இப்படை, அமெரிக்கா மற்றும் எண்ணெய் வள நாடுகளைப் பாதுகாப்பதற்காக ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் நேரடியாகப் போரிட்டது.



ஒவ்வொரு போரின்போது டியாகோ கார்சியா முக்கிய பங்கு வகித்தது எனச் சொல்லலாம்.

1991ம் ஆண்டில் நடைபெற்ற முதல் வளைகுடா போரின்போது டியாகோ கார்சியாவிலிருந்து 18 கப்பல்களில் போர்க் கருவிகள் மற்றும் வீரர்கள் சென்றனர். ஈராக்கியப் படையினருக்கு எதிராக அவர்கள் சண்டையிட்டனர்.

1991 போருக்குப் பின் இதை முக்கியப் படைப்பிரிவுகள் கொண்ட தளமாக அமெரிக்கா மாற்றியது. அமெரிக்க ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு லூசியானாவில் உள்ள விமானப் படைத்தளம், பசிபிக் பிராந்தியத்தில் உள்ள குவாம் அல்லது டியாகோ கார்சியா ஆகிய ஏதாவது ஒன்றில் பணிபுரிய வேண்டும் என்பது கனவாக இருந்தது.

அமெரிக்க வர்த்தக மையக் கட்டடத்தில் 2001 செப்டம்பரில் நடந்த மிகப் பெரிய தாக்குதலை அடுத்து, இத் தீவிலுள்ள படைத்தளத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த சில வாரங்களில் பென்டகன் அமெரிக்க விமானப் படையில் 2,000 வீரர்களைச் சேர்த்து, 12 ஏக்கர் பிரிவில் காம்ப் ஜஸ்டிஸ் என்ற பிரிவை அமைத்தது.

2001ல் நடந்த போரில் இத் தீவில் இருந்து அனுப்பப்பட்ட B-1, B-2, B-52 ஆகிய போர் விமானங்கள்தான் ஆப்கானிஸ்தானில் அதிகத் தாக்குதல்களை நடத்தின.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அமெரிக்கக் கப்பற்படை, விமானப் படை மேற்கொண்ட முக்கிய நிகழ்வுகளுக்கு இத் தளம் முக்கியக் காரணியாக விளங்கியது.

போர்களிலும் இத் தளத்தினரின் நடவடிக்கைகள் அபரிமிதமாக இருந்தன.

2007ல் ஏற்பட்ட மற்றொரு அச்சுறுத்தலை எதிர்கொள்ள அமெரிக்கப் பாதுகாப்புப் படை 3.19 கோடி டொலரில் புதிய கப்பல் தளத்தை அமைக்க நடவடிக்கை எடுத்தது. ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொள்ள இவை தயாராக இருந்தன.


போர் சமயத்தில் பயன்படுத்துவதற்காக கூடுதல் எரிபொருள்களும் இத் தளத்துக்கு வழங்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள், பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினர், பன்னாட்டுப் பார்வையாளர்களுக்கு இங்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.



சி.ஐ.ஏ.யின் கண்காணிப்பில் உள்ள இப் பகுதிக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்றும் உணரப்பட்டது.

போலந்து, ருமேனியாவில் உள்ளது போல் இங்கு ரகசியச் சிறை உள்ளது என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் இப்பகுதியைப் பற்றி அவ்வப்போது கூறப்பட்டது. இதைக் கடந்த ஆறு ஆண்டுகளாக அமெரிக்காவும் பிரிட்டனும் மறுத்து வந்தன. ஆனால் ஒரு பத்திரிகையாளர் இப் பகுதிக்கு எப்படியோ சென்று திரும்பிவந்து தீவில் நடப்பவற்றைப்பற்றி தெளிவாக எழுதியுள்ளார். இந்நிலையில், கடந்த பெப்ரவரியில் பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் மில்லிபேண்ட் நாடாளுமன்றத்தில் பேசியபோது இத் தீவில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை லேசாக ஒப்புக்கொண்டார்.



மைக்கல் ஹேடன்



இதற்கு கொண்டலீசா ரைஸ், பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியது தவறு. இதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இத் தீவில் யாரும் சிறை வைக்கப் படவில்லை என சி.ஐ.ஏ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சி.ஐ.ஏ. இயக்குநர் மைக்கல் ஹேடன் இங்கு சிறை இருப்பதாகக் கூறுவதைத் தொடர்ந்து மறுத்து வருகிறார்.

அமெரிக்கா பலரை அங்கு சிறை வைத்துள்ளது என்பது பலரது சந்தேகமாக உள்ளது. சாகோசியன்ஸ் வெளியேற்றப்பட்டதையடுத்து, அவர்கள் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தினர். வீதியில் இறங்கிப் போராடினர். உண்ணாவிரதங்கள் மேற்கொண்டனர். உரிய நிவாரணம் கோரினர். அமெரிக்க, பிரிட்டிஷ் முன்னாள், இந்நாள் அதிகாரிகளை அவர்கள் குற்றஞ்சாட்டினர். நீதிமன்றத்துக்குச் சென்றனர்.

இம் மக்களின் குற்றச்சாட்டை அமெரிக்க அரசு மறுத்துள்ளது.

ஆனால், இதற்கு மாறாக, பிரிட்டிஷ் அரசை எதிர்த்து இத் தீவுவாழ் மக்கள் தொடர்ந்த வழக்குகளில் மூன்றில் வெற்றி பெற்றுள்ளனர். லண்டனில் 2000, 2006, 2007 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற வழக்குகளில் வெற்றி பெற்றுள்ளனர். தற்போது இவர்களுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு பார்வையாளர்களும் இத் தீவுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Savory Chicken Satay

தேவையான பொருட்கள்:

1 என்வெலொப் லிப்ரன் ஒனியன் சூப் மிக்ஸ்
1/4 கப் ஒலிவ் ஒயில்
2 மே.க. பிறவுன் சுகர்
2 மே.க. பீனட் பட்டர்,
12 அல்லது 16 இறைச்சி குற்றும் ஈக்கில் தண்ணீரில் ஊறவிட்டு
1 இறாத்தல் எலும்பு அற்ற சிக்கன் பிறெஸ்ட் மெல்லிய நீட்டுத் துண்டாக வெட்டி

செய்முறை:

1) பிலாஸ்ரிக் பாக் ஒன்றில் சூப் கலவை, எண்ணெய், சீனி, பீனட் பட்டர் என்பவற்றைக் கலந்து கொள்ளவும். பாக்கில் சிக்கன் பிறெஸ்ட் துண்டுகளைப் போட்டு நன்கு கலந்து, பிறிட்ஜ்ஜில் 30 நிமிடங்கள் ஊற விடவும்.

2) இறைச்சியை எடுத்து ஈக்கில் குற்றிக் கொள்ளவும். அவுனில் வைத்து ப்றொயில் (broil) பண்ணிக் கொள்ளவும். சோசுடன் பரிமாறவும்.



CARROT SOUP

தேவையான பொருட்கள்:
1 மே.க. ஒலிவ் ஒயில்
1 லீக்ஸ் நறுக்கி
6 கரட், தோல் சீவி நறுக்கி
4 cm இஞ்சி துருவி
2 கப் உப்பு குறைந்த மரக்கறி ஸ்ரொக்
2 கப் தண்ணீர்
சவர் கிறீம், பாண் துண்டு, டில் இலை பரிமாறும்போது.

செய்முறை:
1) எண்ணய்யைச் சட்டியில் சூடாக்கி அதில் கரட், லீக்ஸ், இஞ்சி என்பவற்றைப் போட்டுக் கிளறி அவிய விடவும், 8 நிமிடங்கள்.

2) இப்போது மரக்கறி ஸ்ரொக், தண்ணீர் என்பவற்றைச் சட்டியில் விட்டு கிளறி, மூடி கொதிக்க விடவும். கொதித்ததும் அடுப்பின் சூட்டை நடுத்தரமாகக் குறைத்து மூடி மேலும் 20 நிமிடங்கள் அவிய விடவும் அல்லது கரட் அவிந்து மென்மையாக வரும் வரை விடவும். அடுப்பில் இருந்து இறக்கி சூடு ஆற விடவும். இப்போது பூட் புறொசர்சரில் அல்லது பிலெண்டரில் சூப் கலவையைப் போட்டு ஸ்மூத்தாக வரும் வரை அரைத்துக்கொள்ளவும். அரைத்த சூப் கலவையை மீண்டும் சட்டியில் விட்டு சூடாக்கி, உப்பு, மிளகுத்தூள் தேவைக் கேற்ப சேர்த்துக்கொள்ளவும்.

3) அடுப்பில் இருந்து இறக்கிப் பரிமாறும் பாத்திரத்தில் விட்டு மேலே சவர் கிறீம் கொஞ்சம் விட்டு, அத்துடன் டில் இலையும் வைத்துப் பாணுடன் பரிமாறவும். 4 பேருக்குப் போதுமானது.

BARBECUED SALMON WITH LEMON AND HERBS

தேவையான பொருட்கள்:
1/2 கப் ஒலிவ் ஒயில்
2 உள்ளி நறுக்கி
2 எலுமிச்சம்பழம், சாறாக்கி
1/3 கப் டில் இலை நறுக்கியது
1 பிடி லெமன் தைம் நறுக்கி
உப்பு
12 **(180g)** சல்மன் மீன் துண்டுகள்
லெமன் துண்டு பரிமாறும் போது

செய்முறை:
1) எண்ணெய் 1/3 கப் லெமன் ஜூஸ், டில், லெமன் தைம் இலை என்பவற்றை ஓர் பாத்திரத்தில் கலந்து கொள்ளவும். இன்னோர் பாத்திரத்தில் மீன் துண்டுகளை அடுக்கி மேலே உப்பு, மிளகுத்தூள் தூவிக் கொள்ளவும். பின்னர் மீன் துண்டுகளின் மேல் முதலில் கலக்கிய சோஸ் கலவையில் பாதியை விட்டுக் கொள்ளவும். மீன் துண்டுகளைத் திருப்பி, மீதிப் பாதிக் கலவையை விட்டுக்கொள்ளவும். மூடி 2 அல்லது 4 மணி நேரம் பிறிஜ்ஜில் ஊற வைக்கவும். மீனை சமைப்பதற்கு 30 நிமிடத்திற்கு முன்னர் பிறிஜ்ஜில் இருந்து வெளியில் எடுத்து வைக்கவும்.

2)பாபக்கியூவை சூடாக்கி அதில் மீன் துண்டுகளை அடுக்கி மீன் அவியும் வரை விடவும். அவ்வப்போது திருப்பி மீன் ஊறிய சோஸ் கலவையைப் பூசிக் கொள்ளவும். லெமன் துண்டுடன் பரிமாறவும். 12 பேருக்குப் போதுமானது.

RUM AND RAISIN BREAD AND BUTTER PUDDING

தேவையான பொருட்கள்:
குக்கிங் ஸ்பிறே (எண்ணெய் ஸ்பிறே)
1/3 கப் சீனி
3 பெரிய முட்டை
1 தே.க. வனிலா எசென்ஸ்
1 ஆரேன்ஜின் தோல் துருவலாக்கி
1 மே.க. றம்
3/4 கப் பால்
5 துண்டு முந்திரியவத்தல் போட்ட பாண் **(raisin bread)**
1 மே.க. ஐஸ்சிங் சுகர்
4 ஸ்கூப் ஐஸ் கிறீம்
250g ஸ்ரோபெரி பழம் நறுக்கி

செய்முறை:
1) 5 கப் கொள்ளளவு கொண்ட பேக்கிங் டிஸ் ஒன்றிற்கு எண்ணெய் ஸ்பிறே பண்ணிக்கொள்ளவும்.

2) பாத்திரம் ஒன்றில் சீனியையும் முட்டையையும் அடித்துக் கொள்ளவும். பின்னர் வனிலா, ஆரேன்ஞ் தோல், றம் பால் என்பவற்றையும் முட்டையுடன் கலந்து கொள்ளவும்.

3) பாணை பேக்கிங் டிஸ்சில் அடுக்கிக் கொள்ளவும். மேலே முட்டைக் கலவையை ஊற்றி 20 நிமிடங்கள் ஊற விடவும்.

4) அவுனை 170 டிகிரி செல்சியசில் சூடாக்கி 35 அல்லது 40 நிமிடங்கள் பேக் பண்ணி எடுக்கவும். மேலே ஐஸ்சிங் சுகர் தூவி, ஐஸ் கிறீம், ஸ்ரோபெரியுடன் பரிமாறவும்.

அத்தியாயம் - 26

தனது ஊழியர்களை சமையலறையில் சந்தித்துப் பேசும் பழக்கம் டயானாவுக்கு உண்டு. டயானாவின் இந்தப் பழக்கத்தை அபாயகரமானது என்று இளவரசர் சாள்ஸ் கூறுவதுண்டு.

கென்சிங்டன் அரண்மனையின் வளாகத்திலோ அல்லது மைதானத்திலோ நாங்கள் நடந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்தால், இளவரசி அந்த ஊழியரை தன்னுடன் பேசுவதற்கு அழைப்பது வழக்கம். ''ஒ, எக்ஸ், நீங்கள் என்ன செய்து கொண்டி ருக்கிறீர்கள்?'' என்று டயானா கேட்பார். ''ஒன்று மில்லை'' என்று அந்த நபர் பதில் கூறினால், ''நான் சமையலறைக்குச் சென்று கொண்டிருக்கிறேன். நீங்கள் ஏன் என்னுடன் வந்து ஒரு கோப்பை டீ குடிக்கக்கூடாது'' என்று



உலகின் வசீகர இளவரசி டயானா

கேட்பார். அதை உங்களால் மறுக்க முடியாது. இவ்வாறு டயானாவுடன் டீ சாப்பிட அரண்மனை சமையலறைக்குச் சென்று அரண்மனைக்குள் நடக்கும் விடயங்களைப் பற்றி அவரிடம் தெரிவித்த வேலையாட்கள் பலர் உள்ளனர்.

சிக்கினார் ஜோர்ஜ்

இதே போன்று ஒரு நாள் ஜோர்ஜ் ஸ்மித்தைப் பார்த்த டயானா, ''ஜோர்ஜ்'' என்று அழைத்தார். அப்போதுதான் அவரைத் திரும்பிப் பார்த்த ஜோர்ஜ், ''ஓ, ஹலோ, மடம்'' என்றார். ''நீங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ஜோர்ஜ், மெர்வினைப் பார்க்கச் சென்று கொண்டிருக்கிறீர்களா?'' என்று டயானா கேட்டார். நான் உங்களை அங்கு பார்க்கிறேன் என்று கூறிவிட்டு டயானா சென்றுவிட்டார். டயானாவே நேரடியாக அழைத்ததால், அவருடன் பேசுவதை ஜோர்ஜ் ஸ்மித்தால் மறுக்க முடியவில்லை. டயானாவுடன் பேசுவது பாதுகாப்பானதுதான் என்று ஜோர்ஜ் கருதினார்.

அரண்மனையில் உள்ள சூழ்ச்சிகள் அவருக்குத் தெரியவில்லை. இதனால்தான் இந்த அழைப்பை அவர் எளிதாக எடுத்துக் கொண்டார். டயானாவைச் சந்திப்பது என்றும் ஜோர்ஜ் முடிவு செய்தார். ஜோர்ஜ் ஸ்மித் சமையலறைக்கு அரண்மனை ஊழியருக்கான சீருடையுடன் சென்றார்.

அங்கு நடந்தவற்றைக் கண்டு ஜோர்ஜ் திகைத்துப் போனார். தனக்கு டயானா இவ்வளவு மரியாதை அளிக்கிறாரா என்று அவர் ஆச்சரியப்பட்டார். அவர் அங்கு ஜோர்ஜ் ஸ்மித்தாக இல்லை. ரோபோவாகவே மாறிவிட்டார். மதுபானங்கள் உள்ள கபேர்டைத் திறந்து மதுபானங்களை அருந்துங்கள், சமையலறைக் கதவை நீங்கள் திறந்தால் அங்கு ஏராளமான உணவு வகைகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன, அவற்றில் எதை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள், இதோ கார் உள்ளது, ஆதோ ஹைகுரோவ் இருக்கிறது, இவை அனைத்தையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொர்க்கத்தையே திறந்து விட்டனர் அரண்மனை ஊழியர்கள்.

டேப்பில் பதிவான வாக்குமூலம்

சமையலறையில் ஜோர்ஜ் ஸ்மித்துடன் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருந்தார் டயானா. அப்போது பேச்சுவாக்கில் ஸ்மித் வெளியிட்ட ஒரு தகவல் அரண்மனையில் பூகம்பத்தையே கிளப்பக் கூடியதாக இருந்தது. இளவரசரின் ஊழியர் ஒருவரால் தான் ஹோமோசெக்ஸ் முறையில் கற்பழிக்கப்பட்ட நபர் என்று ஜோர்ஜ் கூறிய தகவல் டயானாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஜோர்ஜ் கூறிய விடயத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள டயானா முடிவு செய்தார். இதற்கு ஜோர்ஜின் வாக்குமூலத்தை டேப்பில் பதிவு செய்வதுதான் ஒரே வழி என திட்டமிட்ட

டயானா, 1996-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ரிச்சர்ட் கேயின் டேப் ரெக்கார்டர் மூலம் ஸ்மித் கூறிய குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்தார். அப்போது ஸ்மித்தை இரண்டு முறை டயானா சந்தித்தார். ஒரு முறை அவர்கள் சந்தித்தபோது டயானாவின் தனிச் செயலாளர் விக்டோரியா மெண்ட்ஹாமும் உடனிருந்தார். இந்தச் சந்திப்புகளின்போது ஜோர்ஜ் கூறிய ஹோமோசெக்ஸ் குற்றச்சாட்டுகள் முழுமையாக டேப்பில் பதிவு செய்யப்பட்டன.

டேப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்கள் தனது கணவருக்கு எதிராக டயானா பயன்படுத்தப் போகும் ஆயுதம் என்று அவரது நண்பர்கள் கருதினர். ''விவாகரத்து ஏறத்தாழ முடிந்து விட்டாலும், டயானா இன்னமும் சாள்ஸ்ஸின் வீட்டில் உள்ளவர்கள் பற்றி அறிவதில் தீவிரமாக இருக்கிறார். செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் பிரச்சனைகள் ஏற்படுவதை அவர் விரும்புகிறார். அதனால்தான், அங்கு ஏராளமான பிரச்சனைகளும் ஏற்படுகின்றன'' என்றார் ஊழியர் ஒருவர். அங்கு உண்மையிலேயே பிரச்சனை ஏற்பட வேண்டும் என்று டயானா விரும்பியிருந்தால், அந்த டேப்பை பொலிசில் ஒப்படைத்திருக்கலாம். ஆனால், டயானா அவ்வாறு செய்யவில்லை. அதற்குப் பதிலாக ஜோர்ஜ் விவகாரம் குறித்து இளவரசர் சாள்ஸ்ஸிடம் டயானா தெரிவித்தார்.

மூடி மறைக்க விசாரணை

2002-ம் ஆண்டு நவம்பர் மாதம் இளவரசர் சாள்ஸ், சமீபத்தில் தனக்குத் தனிச்செயலாளராக நியமிக்கப்பட்ட மைக்கேல் பீட் மற்றும் எட்மண்ட் லாசன் ஆகியோரை அழைத்து மற்ற அலுவலர்களுடன், 1996-ல் ஜோர்ஜ் ஸ்மித் ஹோமோசெக்ஸ் முறையில் கற்பழிக்கப்பட்டதாக கூறியுள்ள குற்றச்சாட்டை மூடி மறைக்கும் வகையில் விசாரிக்குமாறு உத்தரவிட்டார். பீட் அறிக்கை 2003-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி வெளியிடப்பட்டது. உண்மையைக் கண்டறியுமாறோ அல்லது ஜோர்ஜ் ஸ்மித்தின் குற்றச்சாட்டுகள் குறித்தோ விசாரணை நடத்த பீட்டுக்கு உத்தரவிடப்படவில்லை. இதனால், ஸ்மித் ஹோமோசெக்ஸ் கற்பழிப்பு விடயத்தை வெளிப் படையாக மூடி மறைக்கும் முயற்சியாகவே இந்த அறிக்கை இருந்தது.

1987-ம் ஆண்டு வெல்ஷ் கார்ட்ஸில் இருந்து ஸ்மித் இளவரசரின் 'பயண ஊழியராக' பணிக்குச் சேர்ந்த பின்னர், 1993-ம் ஆண்டில் 'உதவி வாலெட்'டாக அவர் பதவி உயர்வு பெற்றார்.

1995-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், மோசமான மன அழுத்தத்தில் ஸ்மித் இருந்தார். அப்போது மனைவி அவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். பால்க்லேண்ட்ஸில் அவரது சேவை காரணமாக, அவர் எம்எம்எஸ் காலாஹத் கப்பலில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார். அந்தக் கப்பல் மீது அப்போது தாக்குதல் நடத்தப்பட்டு, தீப்பிடித்து எரிந்தது. இதில் மோசமான முடிவுகள் ஏற்பட்டன. இதன் பின்னர் உதவி ஊழியர் அலுவலரிடம் வந்த ஸ்மித், தான் ''ஏஏ''வினால் (தாக்குதல் நடத்தியதாக கருதப்படுபவர், அவரது அடையாளம் இளவரசர் சாள்ஸ்ஸின் அலுவல கத்துக்கும், பத்திரிகையாளர்களுக்கும் தெரியும்)



கற்பழிக்கப்பட்டதாக கூறினார்.

தான் கற்பழிக்கப்பட்ட விவகாரத்தை கென்சிங்டன் அரண்மனையில் வைத்து வேல்ஸ் இளவரசி டயனாவிடமும், அவரது தனிச்செயலாளர் விக்டோரியா மென்த்ஹாமிடமும்தான் தான் முதலில் கூறியதாக ஸ்மித் கூறியுள்ளார்.

டயானாவின் தலையீடு

கற்பழிப்புக் குற்றச்சாட்டு சூடு பிடித்ததும், அது குறித்து பொலிசார் விசாரணை நடத்தினர். டயானாவிடம் கூறியது என்ன என்பது குறித்து பொலிசாரிடம் வாக்குமூலம் அளித்தார் ஜேம்ஸ் ஸ்மித். ''நான் அவரைச் சென்று பார்த்தபோது, ''ஏஏ''வின் (தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படுபவர்) வித்தியாசமான நடவடிக்கைகள் குறித்து அவர் துருவித்துருவி முக்கியத்துவம் கொடுத்துக் கேட்டார். 1996-ம் ஆண்டில் மூன்றாவது முறையாக டயானா என்னைச் சந்தித்த போதும் எனது குற்றச்சாட்டை அவரிடம் தெரிவித்தேன். டிவிக்கென்ஹாமில் உள்ள எனது வீட்டுக்கு இளவரசி வந்து சந்தித்தார், அப்போது இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்தும் பேசினோம். முதல் கற்பழிப்பு 1988-ல் நடந்தபோது, அப்போதுதான் நான் வீட்டு வேலையில் சேர்ந்திருந்தேன்.

தாக்குதல் குற்றம் சாட்டப்பட்டுள்ளவரால் ஜேம்ஸ் 1995-ல் இரண்டாவது முறையாக ஹோமோசெக்ஸ் முறையில் கற்பழிக்கப்பட்டார். ஆனால், இந்த 2002-ம் ஆண்டில் டெய்லி மெயில் பத்திரிகைக்கு ஸ்மித் கொடுத்த பேட்டியின் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது.

1996-ம் ஆண்டின் இளவேனிற்காலத்தில் திருமதி யாக்ஸ்லேவை டயானா தொலைபேசியில் அழைத்துப் பேசினார். இளவரசரின் வீட்டு வேலைக்காரர்களுக்கு யாக்ஸ்லேதான் தலைவராக இருந்து வந்தார். சக ஊழியர் குறித்து ஜோர்ஜ் ஸ்மித் கூறிய பயங்கரமான குற்றச்சாட்டு பற்றி யாக்ஸ்லேவிடம் டயானா தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டு குறித்து வேறு யாருக்கும் தெரியுமா என்று அவரிடம் கேட்டு உறுதி செய்து கொண்ட பின்னரே, சாள்ஸை டயானா தொலைபேசியில் அழைத்துப் பேசினார். டயானா கூறியதைக் கேட்டு இளவரசர் சாள்ஸ் ஆவேச மடைந்தார். உடனடியாக அரச குடும்ப சட்டத்தரணியான பாரெர் அண்ட் கோவிலிருந்து தனது சட்டத்தரணி பியோனா ஷாக்கிள்டனை சாள்ஸ் அழைத்தார். டயானாவுடனான தொலைபேசி உரையாடல் குறித்து சாள்ஸ் கூறியதை பியோனா ஷாக்லடான் குறிப் பெடுத்தார். ''டயானா இதில் தலையிட்டு, ஜோர்ஜ் ஸ்மித்தைச் சென்று பார்த்திருக்கிறார். பால்க் லேண்ட்ஸில் இருந்து ஜோர்ஜ், உடல்நலக்குறைவுக்குப் பின்னால் ஏற்படும் மன அழுத்தத்தால் அவதிப்பட்டு வருகிறார். ஜோர்ஜ் தற்போது 'ஏஏ' தன்னை கற்பழித்ததாகப் பல ஆண்டுகளுக்குப் பின்னால் குற்றம் சாட்டுகிறார்'' என்று சாள்ஸ் கூறினார். இது பொய்யான குற்றச்சாட்டு என்று நான் டயானாவிடம் கூறினேன். இந்த விடயத்தைத் தெளிவுபடுத்துமாறு அவர் என்னிடம் கேட்டார் என்று சாள்ஸ் கூறினார்.

சட்டத்தரணி மூலம் அறிவுரை

தான் குடிகாரர் என்பதால் ஜோர்ஜ் தனது செயலுக்காக என்னிடம் வருத்தம் தெரிவித்தார். 'ஏஏ'வைப் பற்றி உண்மையில்லாத தகவல்கள் பரவுவதால் ஜோர்ஜுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. தற்போது ஏஏதான் மோசமான நிலைக்கு ஆளாகிவிட்டார் என்று இளவரசர் சாள்ஸ் கூறினார். சாள்ஸின் அறிவுரையின் பேரில் பியோனா ஷாக்கிள்டன் டயானாவின் சட்டத்தரணி அந்தோணி ஜுலையசை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். ''இந்த விடயத்தில் தலையிடுவதை நிறுத்திக் கொள்ளுமாறு டயானாவிடம் கூறிவிடுங்கள். ஜோர்ஜின் பிரச்சனையைத் தீர்த்துவைத்து, அவரை நாங்கள் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்'' என்று பியோனா ஷாக்கிள்டன் அந்தோணி ஜுலியசிடம் தெரிவித்தார்.

ஊழியர் கற்பழிப்பு விவகாரத்தில் இந்த நேரத்தில் ஒரு புதுத் திருப்பமாக, 1996-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஸ்மித் ஹவுஸ்லோவில் உள்ள உள்ளூர் பொலிசாரிடம் சென்றார். தனது பின்னணி, 1998-ம் ஆண்டில் தான் கற்பழிக்கப்பட்டது உட்பட தனக்குள்ள தனிப்பட்ட பிரச்சனைகளை அவர் எடுத்துக் கூறினார். தன்னைக் கற்பழித்த நபரின் பெயரையும் அவர் பொலிசாரிடம் தெரிவித்தார். பொலிஸ் குறிப்பேட்டில், ''ஒரு நாள் இரவு குற்றம் சாட்டப்பட்ட நபருடன் சேர்ந்து குடித்த நிலையில், கற்பழிப்புச் சம்பவம் நடந்ததாகப் பாதிக்கப்பட்ட நபர் கூறுகிறார்'' என்று எழுதப் பட்டிருந்தது. ஸ்மித்தின் குற்றச்சாட்டைப் பார்க்கும் போதே, அதில் வெளிப்படையான ஆதாரம் ஏதுமில்லை. மேலும், தனது வீட்டிலும், வீதியிலும் தன்னை ஒரு நபர் ஆயுதத்துடன் பின் தொடர்ந்து வந்து அணுகியதாகவும் குறிப்பிட்டார். கற்பழிப்புக் குற்றச்சாட்டைத் தொடர தனக்கு விருப்பமில்லை என்று ஸ்மித் கூறியதைத் தொடர்ந்து, பொலிசார் இந்தக் குற்றச்சாட்டு குறித்து மேலும் தொடர்ந்து விசாரணை நடத்தவில்லை.

மீண்டும் ஸ்மித் பிரச்சனை

ஒக்டோபர் 17-ம் திகதி பியோனா ஷாக்கிள்டன், இளவரசர் சாள்ஸின் அரண்மனை ஊழியர்களுக்குத் தலைவரான யாக்ஸ்லேவுடன் ஸ்மித் பிரச்சனை குறித்துப் பேசினார். தனது கற்பழிப்புக் குற்றச்சாட்டை ஸ்மித் மீண்டும் கிளப்பத் தொடங்கியுள்ளார் என்று அப்போது யாக்ஸ்லே கூறினார். 'கற்பழிப்புப் புகாரில் குற்றம் சாட்டப்படும் நபரை வேல்ஸ் இளவரசி டயானா வெறுக்கிறார்' என்று யாக்ஸ்லே, பியோனா ஷாக்கிள்டனிடம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து மேலும் ஒரு திருப்பமாக ஊழியர்களின் தலைவரான திருமதி யாக்ஸ்லே, வேல்ஸ் இளவரசி டயானாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், கோடையில் நடந்த சம்பவங்கள் பற்றி தான் எழுதிய குறிப்புகளை உங்களிடம் கொடுத்துள்ளதாக ஸ்மித் கூறியுள்ளார். அந்தக் குறிப்புகளின் நகலை என்னிடம் கொடுங்கள் என்று யாக்ஸ்லே கோரியிருந்தார். இந்தக் கடிதத்துக்கு ஒக்டோபர் 21-ம் திகதி டயானா பதில் கடிதம் அனுப்பினார். அதில், ''உங்களது கோரிக்கையை ஏற்க முடியாத நிலையில் உள்ளேன். ஜோர்ஜுக்காக இதன் ரகசியத்தை நான் காப்பாற்றியாக வேண்டும்'' என்று எழுதியிருந்தார். கடிதத்தில் இளவரசர் சாள்ஸின் நடவடிக்கைகளைக் குத்திக் காட்டும் விதத்தில், மறைபொருளாக ஒரு வரியையும் அவர் எழுதியிருந்தார். ''உங்களுக்கும், இந்த விடயத்தை கையாளும் உங்களுடன் தொடர்புடைய மற்றவர்களின் கவனத்துக்குமாகத்தான், இந்தக் கடிதத்தை நான் எழுதுகிறேன்'' என்று டயானா குறிப்பிட்டிருந்தார்.


ஜேம்ஸின் குடிபோதை நட்பு

இந்த விடயம் குறித்து 'ஊடகங்களுக்குத் தொடர்பின்றி' விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக பியோனா ஷாக்கிள்டன், அந்தோணி ஜூலியஸிடம் குறிப்பிட்டார். சாள்ஸ், டயானா ஆகியோரின் ஈடுபாடுகளும் இந்த விடயத்தில் குறைய வேண்டும் என்று தான் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். இந்த விடயத்தை யாராவது ஒருவர் ஏதேனும் ஒரு வழியில் பத்திரிகையில் வெளியிடும் வாய்ப்பிருந்தது. இந்த விடயத்தில் தான் ஈடுபாடு காட்டுவதாகக் கூறப்படுவதை டயானா தனது வழக்கறிஞர் மூலம் மறுத்தார். 'கருப்பு வதந்திகள், பெரும் ஆபத்துகள்' என்று இந்தப் பிரச்சனை பற்றி வர்ணித்த ஊழியர்களில் ஒருவர், யார் மூலம் வேண்டுமானாலும் இந்தப் பிரச்சனை பத்திரிகைகளுக்குக் கசியலாம் என்றார்.

கென்சிங்டன் அரண்மனையில் இளவரசர் சாள்சுக்கு நெருக்கமானவர் கோன் டிரிம்மிங். இளவரசரின் கண்ணும் காதுகளுமாக இருப்பவர் என்று அரண்மனையில் டிரிம்மிங் பற்றி சக ஊழியர்கள் வர்ணித்தனர். டயானாவின் ஊழியர்கள் இருவருடன் ஸ்மித் சாதாரணமாக நெருங்கிப் பழகுகிறார் அல்லது அவர்களுடன் ஸ்மித்துக்கு 'குடிபோதை நட்பு' உள்ளது' என்று கோன் டிரிம்மிங் உறுதி பட நம்பினார். ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் ஸ்மித்தை சந்திக்கவில்லை என்று அவர் கூறினார்.

விலகினார் சட்டத்தரணி

ஜோர்ஜ் ஸ்மித்துடன் நடந்த சந்திப்புக் குறித்து பியோனா ஷேக்கிள்டன் எழுதியிருந்த குறிப்பில், 'தனது புகாரை திரும்பப் பெற்றதாக ஸ்மித் தெரிவிக்கவில்லை. இதற்குப் பதிலாக, பத்திரிகை குற்றச்சாட்டுகளை தான் மதிப்பதில்லை என்று ஸ்மித் கூறினார்' என்று தெரிவித்திருந்தார். குற்றம் சாட்டப்படும் நபர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பதுதான் இதற்கு வெளிப்படையான காரணம். அரண்மனை பணியாளர்கள் மத்தியில் ஏஏ-வின் அதிகாரம் செலுத்தி வந்தது குறித்து நாங்கள் விசாரித்த பலரும் தெரிவித்தனர். இது தொடர்பாக ஸ்மித்தின் தரப்பையும் அவர்கள்



எங்களுடன் பகிர்ந்து கொண்டனர் என்று அவர் அதில் எழுதியிருந்தார்.

தொடக்கத்தில் ஜேம்ஸ் விடயத்தில் டயானாவின் ஈடுபாட்டைப் பார்த்த அவரது தனிச்செயலாளரான மைக்கேல் கிப்பின்ஸ், நடந்த விடயங்களில் டயானா தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டார். 'பிரச்சனை மிகப் பெரியது' என்று பயந்து போய் ஸ்மித்தின் சட்டத்தரணி வழக்கில் இருந்து பின்வாங்கியபோது, தனக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க ஆளில்லாமல் ஸ்மித் தவித்தார். இந்த விடயம் டயானாவின் காதுகளைச் சென்றடைந்தது. ஸ்மித்துக்கு தானே ஆதரவு தருவது என்று டயானா முடிவு செய்தார். இதைத் தொடர்ந்து டயானாவும், அவரது தனிச் செயலாளர் மைக்கேல் கிப்பின்சும் இணைந்து ஸ்மித்துக்காக வாதாட வேறொரு சட்டத்தரணியை நியமிக்க நடவடிக்கை எடுத்தனர்.

தொடரும்

150 ஆண்டுகாலப் பாரம்பரிய மிக்க, தனக்கென தனி கௌரவத்தை உருவாக்கி வெற்றி நடைபோட்டு வருகிறது இந்தியாவின் மேற்கு வங்கத்தில் உள்ள கல்வி நிறுவனமான புனித சேவியர் கல்லூரி, கடனாவைச் சேர்ந்த பிரபல மனிடோபா பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து பட்டப்படிப்புகளை நடத்துவதாக கடந்த மாதம் அறிவித்துள்ளது. இது தனது கல்விச் சேவை வரலாற்றில் மற்ற கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது இதுதான் முதல் முறை. மேற்படி கல்வி நிறுவனத்தின் வரலாற்றில் இது முக்கியத் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

இந்தியாவின் மிகப் பழமையானதும் கல்வித்துறை வரலாற்றில் பிறரது தலையீடு இன்றி கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் தன்னாட்சி பெற்று தனித்தன்மையைப் பின்பற்றி வரும் இந்தக் கல்லூரி தனக்கென உயரிய கொள்கைகளை விடாப்பிடியாகப் பின்பற்றி வந்துகொண்டிருந்தது. இப்படியிருந்த இந்தக் கல்லூரி கல்வித்துறையில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள தனது நிலையிலிருந்து ஓரளவு இறங்கி வந்துள்ளது. "இது ஆச்சரியமான விடயமாகக் கருதப்படுகிறது" என்கிறார் மனிடோபா பல்கலைக்கழகத்தின் டீன், பேராசிரியர் மைக்கல் டிரிவென்.

காரணம் என்ன? ஆசியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் எவ்வளவுதான் தனித்தன்மையுடன் செயற்பட்டாலும், மேற்குலக நாடுகளின்

வெளிநாட்டுப் பெற்றோர் பிள்ளைகளை மேற்படிப்புக்காக

இந்தியாவுக்கு அனுப்பிவைக்க..



புனித சேவியர் கல்லூரி

பல்கலைக்கழகங்களுடன் கூட்டுச் சேராவிட்டால் படித்து விட்டு வெளியேறும் மாணவர்களில் எதிர்காலம் வெளி நாடுகளில் பிரகாசமாக இருக்காது என்பதே ஒரே காரணம்.

இந்தக் கல்லூரி மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல கல்லூரிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக இதுபோல வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து புதிய படிப்புகளை இந்தியாவில் அறிமுகம் செய்து வருகின்றன. ஹவாட் பல்கலைக்கழகம், கெலொக் பல் கலைக்கழகம், ஜோர்ஜியா இன்ஸ்டிடியூட் ஒஃப் டெக்னோலஜி, கார்னெஜி மெலன் பல்கலைக்கழகம் என அமெரிக்காவைச் சேர்ந்த உயர் கல்வி நிறுவனங்களும், Grenoble Ecole de Management என்ற பிரென்ச் உயர் கல்வி நிறுவனமும், ஆய்வுப்படிப்புகளை நடத்தும் லண்டன் பிஸ்னஸ் ஸ்கூல், ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகம், கலிபோர்னியா பல்கலைக்கழகம் என பல நாடுகளைச் சேர்ந்த பல பல்கலைக்கழகங்கள் இந்தியா வில் கூட்டாக உயர்கல்வியை அளிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

வெளிநாடுகளில் போதிக்கப்படும் உயர்கல்வியை இந்தி யாவில் உள்ள மாணவர்கள் உள்நாட்டிலேயே குறைந்த செலவில் படிக்க வேண்டும். அதற்கு நல்ல வாய்ப்பு என்ற நோக்குடன் இந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் செயலாற்றி வருகின்றன. நல்ல சம்பளத் துடன் வெளிநாடுகளில் வேலைபெற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தரும் பட்டங்கள் அவசியம் என்ற நிலையில், அதை வெளிநாடு சென்று தங்கிப்படித்து பெறுவதைவிட உள்நாட்டிலேயே இருந்துகொண்டு குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் இந்த வித்தி யாசமான முயற்சி இந்திய மாணவர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று என்பது மாத்திரமல்ல, வெளிநாடு களில் வசிக்கும் ஆசியர்களையும், தங்கள் பிள்ளை களை மேற் படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பத் தூண்டுகிறது.

இதிலுள்ள முக்கிய கவர்ச்சியே இதே மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களின் படிப்புக்கான கட்டணங் களைவிட, இந்தியாவில் வசூலிக்கப்படும் கட்டணம் பல மடங்கு குறைவானது.

வெளிநாட்டு உயர்கல்வியைப் பொறுத்தவரையில் தற்போதைய நிலவரம் என்னவென்றால், ஆண்டுக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் படிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். 2 லட்சத்திற்கும் அதிகமானோர் ஏற்கெனவே வெளிநாடு களில் தங்கிப் படித்து வருகிறார்கள். இந்த வகையில் இந்திய மாணவர்கள் ஆண்டுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்குப் பணத்தை இதற் காகச் செலவிடுகின்றார்கள் என்று கூறுகிறது இந்திய மனித உரிமை மேம்பாட்டு அமைச்சகம். இந்த



புனித சேவியர் கல்லூரி கல்வித்துறையில் கூட்டு முயற்சிகளை மேற் கொள்ள தனது நிலையிலிருந்து ஓரளவு இறங்கி வந்துள்ளது. "இது ஆச்சரியமான விடயமாகக் கருதப்படுகிறது" என்கிறார் மனிடோபா பல்கலைக்கழகத்தின் டீன், பேராசிரியர் மைக்கல் டிரிவென்.

நிலையில் இப்போது சிறிது மாற்றம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. அதாவது பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இந்திய உயர்கல்வி நிறுவனங் களுடன் கூட்டுச் சேர்ந்து பல புதிய கல்லூரிப் பட்டப் படிப்புகளை வழங்கத் தொடங்கியுள்ளன.

"இந்திய கல்லூரிக் கல்வி வரலாற்றில் இது புதிய பரிணாம வளர்ச்சி" என்கிறார் இந்தியாவில் கட்டுப் பாடற்ற கருத்தை வலியுறுத்தி வருபவரும் டெக்ஸஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான மகேஷ் செனகாலா. "கல்வியை உலகமயமாக்கல் என்ற திட்டத்தை இந்தியாவில் புகுத்துவதில் பல வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்கள் முயற்சியில் இறங்கியுள் ளன. இந்த வகையில் இந்தியாவின் 5 பெரிய நகரங்களில் மட்டுமல்லாது ஏராளமான சிறிய ஊர் களிலும் உலக பல்கலைக்கழகங்கள் கால்பதிக்கத் தொடங்கியிருக்கின்றன. அனேகமாக எல்லா வகையான தொழில்கல்வியையும் அவை போதிக்க முன் வந்துள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த 130க்கும் அதிகமான உயர்கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டாகப் பட்டப்படிப்புகளை வழங்கி வருகின்றன. இன்னும் 24 நிறுவனங்கள் புதிதாகத் தடம்பதிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன" என்ற தகவல் தில்லியைச் சேர்ந்த தேசியக் கல்வி மேம்பாட்டு நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

"இவ்விதம் இந்திய மாணவர்களுக்கு உள்நாட்டிலேயே படிக்க வாய்ப்பளிக்கும் வெளிநாட்டு பல்கலைக் கழங்களில் பல, அந்தந்த நாடுகளில் அரசு அங்கீகாரம் பெற்றவையா என்பதை முதலில் தெரிந்துகொண்ட பின்னரே, பெற்றோர் தமது பிள்ளைகளை அவற்றில் சேர்க்க வேண்டும். இது இந்தியாவில் வசிக்கும்



ஹைதராபாத்தில் உள்ள இண்டியன் ஸ்கூல் ஒஃப் பிஸ்னஸ்ஸின் மூலம் இரண்டு உலகத்தரமான பல்கலைக்கழகங்களிடம் பட்டப்படிப்பை மிகக் குறைந்த செலவில் படிக்க முடியும். இந்தக் கல்வி நிறுவனத்துடன் கூட்டு வைத்துள்ள வோர்டன் பிஸ்னஸ் ஸ்கூல் (பென்சில்வேனியா), கெலாக் பிஸ்னெஸ் ஸ்கூல் (சிகாகோ) ஆகியன இதைச் சாத்தியமாக்குகின்றன.

பெற்றோரைவிட வெளிநாடுகளில் வசிக்கும் பெற்றோருக்கு மிகச் சுலபமானது" என்கிறார் தொழில் நிறுவனங்களின் கட்டுப்பாட்டு நிறுவனமான அகில இந்திய தொழில் கல்வி கவுன்சிலின் தர நிர்ணய ஆலோசகர் பிரசாத் கிருஷ்ணா.

"உலகப் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றும் இந்தியாவில் எவ்விதம் கிளைகளைத் தொடங்குகின்றன என்று பார்த்தால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் கிளைகளைத் தொடங்குகின்றன. சில அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் சொந்தமாகக் கிளைகளைத் தொடங்குகின்றன. சில பல்கலைக்கழகங்கள் அப்படிச் செய்யாமல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டு நிறுவனம்போலச் செயல்படுகின்றன" என்கிறார் டிரிவேன். "இந்த முறையினால் கல்விச் செலவு வெகுவாகக் குறைகிறது. உதாரணமாக புனித சேவியர் கல்லூரியில் நான்காண்டு வெளிநாட்டுக் கல்வித் திட்டத்தில் படிக்க ஒரு மாணவருக்கு எல்லாச் செலவுகளுமாகச் சேர்த்து 20,000 கனேடிய டொலர்கள் செலவாகின்றன. இதில் படிக்கும் மாணவர்கள் முதல் இரண்டு ஆண்டுகள் கொல்கொத்தாவில் உள்ள கல்லூரி வளாகத்தில் நடக்கும் வகுப்புகளில் சேர்ந்து படிக்க வேண்டும். கடைசி 2 ஆண்டுகளைக் கனடாவில் உள்ள பல்கலைக்கழக வளாகத்திற்குச் சென்று படிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் படிப்புச் செலவு பாதியாகக் குறைகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

இதேபோல, ஹைதராபாத்தில் உள்ள இண்டியன் ஸ்கூல் ஒஃப் பிஸ்னஸ்ஸின் மூலம் இரண்டு உலகத்தரமான பல்கலைக்கழகங்களிடம் பட்டப்படிப்பை மிகக் குறைந்த செலவில் படிக்க முடியும். இந்தக் கல்வி நிறுவனத்துடன் கூட்டு வைத்துள்ள வோர்டன் பிஸ்னஸ் ஸ்கூல் (பென்சில்வேனியா), கெலாக் பிஸ்னெஸ் ஸ்கூல் (சிகாகோ) ஆகியன இதைச் சாத்தியமாக்குகின்றன.

மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் மிகக் குறைந்த பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அவற்றில் சேர்ந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. சுமார் 1 சதவீத மாணவர்கள்தான் இந்தியப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கின்றனர். மற்றவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிப்பதையே விரும்புகிறார்கள். இதுதான் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் வெற்றி ரகசியம் என்கிறார் டிரிவென்.

இந்திய மாணவர்கள் எதிர்பார்க்கும் சரியான கல்வி நிறுவனம் அவர்களுக்கு இந்தியாவில் கிடைப்பதில்லை என்பது மற்றொரு காரணம். பொதுவாக ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர வளர அதன் உயர்கல்விக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து அந்தக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவது அவசியம். இதில் சரியான கவனம் செலுத்தாவிடில் தோல்விதான் ஏற்படும். மாணவர்கள் எதிர்பார்க்கும் கல்வித்தரம் உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் கிடைக்காவிடில் அவர்கள் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களை நாடத்தான் செய்வார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த தேசிய அறிவாற்றல் கமிஷன் சில கருத்துகளைக் கண்டறிந்து கூறுகியிருக்கிறது. இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் 18 முதல் 24 வயதுடையவர்களின் அளவு 60 சதவீதமாக உள்ளது. இதில் 7 சதவீதத்தினரே பல்கலைக்கழக பட்டப்படிப்புகளில் சேருவோர். சீனாவில் 13 சதவீதத்தினரும், பிலிப்பைன்ஸில் 31 சதவீதத்தினரும், மலேசியாவில் 27 சதவீதத்தினரும், தாய்லாந்தில் 19 சதவீதத்தினரும் பட்டப்படிப்பை முடிக்கின்றனர் என்கிறது தேசிய அறிவாற்றல் கமிஷன்.

நிபுணர்கள் கூறும் மற்றொரு அதிர்ச்சியூட்டும் தகவல் என்னவென்றால், இந்தியாவில் படிக்கும் கல்லூரி மாணவர்களின் படிப்பின் தரம் இன்றைய அறிவு யுகத்துக்கு ஏற்ற அறிவைப் போதிப்பதாக இல்லை என்பது தான். கல்லூரிக் கல்வியில் போதிக்கப்படும் பாடத் திட்டங்கள் இந்தக் காலத்திற்கு ஒவ்வாததாக உள்ளன. மேலும் மிகவும் பழைய விடயங்களை மட்டுமே கற்பிப்பதாகவும் உள்ளன என்பது கல்வித்துறை நிபுணர்களின் கருத்து. எனவே, பயனற்ற பாடத்திட்டங்கள் ஒரு பெரிய குறைபாடாகவே உள்ளன. இந்தப் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க முடியாத நிலையில் உயர்கல்வி நிறுவனங்களும் மற்றும் அதன் பேராசிரியர்களும்

உள்ளனர். ஏனெனில், இதற்கான அதிகாரங்கள் எதுவும் அவர்கள் கைகளில் இல்லை.

காலத்திற்கேற்ப வேகமாக முன்னேறி வரும் பெரிய, சிறந்த நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய சிறந்த தகுதி படைத்த பட்டதாரிகள் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது என இந்திய தொழில்துறை அடிக்கடி குறை கூறி வருகிறது. இந்தியாவில் படித்துப் பட்டம்பெற்ற இளம் பொறியாளர்களில் சுமார் 25 சதவீதத்தினரும், நிதி சார்ந்த பட்டம் பெற்ற இளைஞர்கள் 15 சதவீதத்தினரும்தான் தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவர்களாக இருக்கிறார்கள்.

மேலும், இந்தியாவில் உள்ள கல்வி சம்பந்தமான நிர்வாகம் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் அமைப்புகளின் கீழ்தான் இயங்க வேண்டியிருக்கிறது. மத்திய அமைப்புதான் கல்வியறிவை நிர்ணயிக்கும் மேலதிகாரம் படைத்ததாக இருக்கிறது. இந்த அமைப்புகளின் உயரதிகாரம் படைத்தவர்கள்தான் ஆசிரியர் முதல் மாணவர்கள் வரை அனைவரது தலைவிதியையும் நிர்ணயிப்பவராக இருக்கிறார்கள்.

இந்தியக் கல்வித்துறையில் மாணவர்களுக்கு இப்படியாகவுள்ள கல்விசார்ந்த குறைகளை நிவர்த்தி செய்யப்படுவனவாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. 'ஆபத்பாந்தவன்', 'அறிவுக்காவலன்' என்ற அடைமொழிகளோடு அவை இந்தியாவில் கால் பதிக்கின்றன. தொழில்கல்வியை ஏட்டுக்கல்வியாக மட்டுமல்லாமல் செய்முறைக் கல்வியாக மாற்றி, தொழில் கூடங்களுக்குத் தேவையான படைத்திறன் கற்பிப்பதாக அவை மாற்றியமைத்துள்ளன.

"வகுப்பறை, வாத்தியார்கள் உரை என்ற குறுகிய வட்டத்திலிருந்து மீண்டு செயலூக்கம் மிக்கவர்களாக மாணவர்களை 'கற்றார்கள்', 'சாதிப்பார்கள்' என்ற தொழில்துறை மந்திரங்களோடு வேலைதேடச் செல்பவர்களாக வெளிநாட்டுப் பல்கலைக்கழங்கள் உள்ளன" என்கிறார் இந்தியாவுக்கான அமெரிக்க கல்வி போதனை அமைப்பைச் சேர்ந்த ஜோன் ஸ்கோவ்ஸ்கி என்ற பெண்மணி. இந்த இரு நாட்டுக் கல்வி அமைப்பின் நிர்வாக இயக்குநரான அவர், இந்திய நிலைமை பற்றிய இந்தக் கருத்து தனது சொந்தக் கருத்து என்கிறார்.


ஆனால், டிரிவேனின் கருத்து சற்று வித்தியாசமாக இருக்கிறது. "வெளிநாட்டுக் கல்வியை உள்நாட்டில் அளிப்பதால் உள்நாட்டு மாணவர்கள் மட்டுமே பயனடைவார்கள் என்பது விளம்பர உத்தி போன்றது" என்கிறார் அவர். "இதுபோன்ற திட்டங்களால் உள்நாட்டு மாணவர்களைக் கவர்வதைவிட, வெளிநாட்டுப் பெற்றோர் தமது பிள்ளைகளை மேற்படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பிவைப்பதைக் கவர்வதையே பல்கலைக் கழகங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த முயற்சிகளால் வெளிநாட்டுப் பெற்றோர்களும், பல்கலைக்கழகங்களும்தான் பயன்பெறுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை" என்கிறார் அவர்.

"உதாரணமாக பிரான்சில் வசிக்கும் ஒரு ஆசியக் குடும்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தக் குடும்பத்தின் பிள்ளைகள் பிரெஞ்சில் உயர்கல்வி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் அளவுக்கு ஆங்கிலத்தில் உயர் கல்வி பெற வாய்ப்பில்லை. இந்தத் திட்டம், அந்த வாய்ப்பை, அதுவும் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் உயர்கல்வியைக் குறைந்த செலவில் ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்துடன் ஆசியக் கலாச்சாரமுள்ள இந்தியாவில் சிலவருடங்கள் தங்கியிருந்து படிக்கவும் வசதிசெய்து கொடுக்கிறது. இரு தரப்பினரும்தான் ஆதாயம் அடைகின்றார்கள். மாணவர்களுக்கு நல்ல கல்வி, கல்வி நிறுவனங்களுக்குக் கல்விக் கட்டணம் வாயிலாக நல்ல பணம் என பரஸ்பரம் லாபம் உள்ள தொழில் முயற்சிதான் இது" என அவர் லாப நஷ்டங்களைப் புட்டுப்புட்டு வைக்கிறார்.

சீனாவுக்கு அடுத்து இந்தியாதான் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் விரிவாக்கக் கல்வித்திட்டத்திற்கு ஏற்ற நாடு என்ற அமெரிக்கத் தேசியக் கல்வி கவுன்சிலின் கருத்து, இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு ஊக்கம் தருவதாக இருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்களுக்கான விசா வழங்கும் முறையும், மற்றய நாடுகளுடன் ஒப்பிடும்போது, மிகவும் இலகுவானது என்பதும் இங்குள்ள மற்றய பிளஸ் பொயின்டாக இருக்கிறது.

"வகுப்பறை, வாத்தியார்கள் உரை என்ற குறுகிய வட்டத்திலிருந்து மீண்டு செயலூக்கம் மிக்கவர்களாக மாணவர்களை 'கற்றார்கள்', 'சாதிப்பார்கள்' என்ற தொழில்துறை மந்திரங்களோடு வேலைதேடச் செல்பவர்களாக வெளிநாட்டுப் பல்கலைக்கழங்கள் உள்ளன" என்கிறார் இந்தியாவுக்கான அமெரிக்க கல்வி போதனை அமைப்பைச் சேர்ந்த ஜோன் ஸ்கோவ்ஸ்கி என்ற பெண்மணி.



இலங்கையில் கோதுமை உணவுப் பொருள்கள் பயன்படுத்துவது மிகமிகக் குறைந்துவிட்டது. கடந்த காலங்களில் உள்நாட்டில் விளையும் அரிசிக்கு இணையாகக் கோதுமைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலை இலங்கையில் காணப்பட்டது. முக்கியமாக பாண் போன்ற உணவுப்பண்டங்கள் மக்களில் அன்றாட உணவுப் பட்டியலில் இருந்தன. இந்நிலையில், தற்போது இலங்கையில் உணவுப் பொருள்களின் விலை தாறுமாறாக உயர்ந்துவிட்டது. இதனையடுத்து வேறு வழியில்லாமல் கோதுமைப் பொருள்களைப் பயன்படுத்துவதை மக்கள் தவிர்த்து வருகின்றனர்.

என்று இத்தாலியைச் சேர்ந்த உணவு மற்றும் விவசாய நிறுவனம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அறிவித்தது. இந்த நிறுவனம் வெளியிட்ட பட்டியலில் ஆசியாவைச் சேர்ந்த நாடுகளான இலங்கை, வங்கதேசம், பிலிப்பைன்ஸ், தஜிகிஸ்தான், ஆர்மீனியா ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஆப்பிரிக்க நாடுகள் பட்டியலில், ஐவரி கோஸ்ட், செனீகல், நைஜீரியா, சோமாலியா, சூடான், உகாண்டா, எத்தியோப்பியா மற்றும் மொசாம்பிக் போன்ற நாடுகள் இடம்பெற்றுள்ளன.

பாதுகாப்புச் செலவீனங்கள் அதிகரித்த நிலையில் இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலையை அரசு கடுமையாக உயர்த்தியது. அதேநேரத்தில் இந்தியா, வியட்நாம் போன்ற அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளிடம், தங்களுக்குக் கூடுதலாக அரிசி ஏற்றுமதி செய்யும்படி

இலங்கையில் மாறும் உணவுப் பழக்கங்கள்

மேலும், இலங்கையில் நடந்து வரும் போர் காரணமாகவும் நாட்டில் ஏற்கெனவே விலைவாசி விண்ணை முட்டிக்கொண்டிருக்கிறது. கோதுமையைத் தவிர அரிசி மற்றும் பயறு வகைகளை உணவுப் பொருளாக மக்கள் மாற்றிக் கொண்டதை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலர் வரவேற்றுள்ளனர்.

இலங்கையில் இந்த மாதம் நடந்த இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய கூட்டத்தில் ஜனாதிபதி பேசும்போது, ''கோதுமை மா மற்றும் அதனால் செய்யப்பட்ட பொருட்களை மக்கள் பயன்படுத்துவது வெகுவாகக் குறைந்தது எனக்கு மிகப்பெரிய அளவில் சந்தோஷம் தருகிறது. நம்மிடம் ஏராளமான அளவுக்கு விளை நிலங்கள் இருந்தபோதும், மக்கள் கோதுமையைப் பயன்படுத்தும் அளவு அதிகமாக இருந்ததால் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் கோதுமைப் பொருள்கள் வெளிநாடுகளால் இலங்கைக்கு இலவசமாக சப்ளை செய்யப்பட்டன. அதன்பிறகு அந்த நிலைமை மெல்ல மெல்ல மாறி கடனில் வழங்கும் அளவுக்குச் சென்றுவிட்டது,'' என்றார்.

உலக அளவில் உணவுப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் இலங்கை உட்பட 14 நாடுகளில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும்

வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கையில் உள்நாட்டுப போர் நடந்து வருவதால், அங்கு அரிசி இறக்குமதி செய்வதற்கு அண்டை நாடான இந்தியா கடும் கட்டுப்பாடுகள் விதித்திருந்தது. ஆனாலும், இலங்கையின் வேண்டுகோளை கருத்தில் கொண்டு, ஒரு லட்சம் தொன் அரிசியை கப்பல் மூலம் அனுப்பி வைக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிபுணர் மற்றும் விவசாய வல்லுனர் நிமல் சந்தரத்ன, "அரிசி உற்பத்தி செய்யும் நாடுகளில் அரிசிக்கு மாற்றாக வேண்டுமென்றே கோதுமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஏனெனில், உள்நாட்டில் உற்பத்தியாகும் அரிசிக்கான உற்பத்திச் செலவைவிட மிகவும் விலை மலிவாகக் கோதுமை கிடைத்ததே காரணம். இதற்காக பல ஆண்டுகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்ததால் கடந்த சில மாதங்களில் அரிசி மற்றும் கோதுமை மா உணவுப் பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு மற்ற பொருள்களின் விலையையும் உயர்த்தியுள்ளது. ஆண்டு பணவீக்கம் விகிதம் 20 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு மக்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது,'' என்கிறார்.

சர்வதேச அளவில் எண்ணெய் விலை உயர்ந்ததே இதற்குக் காரணம் என்று அரசு கூறுகிறது.

வெளிநாட்டில் ஏற்படும் அதிரடி மாற்றங்களே பணவீக்கம் உயர்வுக்குக் காரணம் என்கிறது அரசு. இந்நிலையில ஐ.எம்.எப். என்ற சர்வதேச நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணவீக்க விகிதம் மாற்றம் ஏற்படுவதற்கு உள்நாட்டில் ஏற்படும் மாற்றங்களும், நிர்வாகக் குளறுபடிகளே காரணம் என்கிறது.

பொதுவாக பாண் மற்றும் கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் பயன்படுத்துவது இலங்கையில் கிட்டத்தட்ட 40 சதவீதம் குறைந்துள்ளது என்று அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன. ஆனால், இந்தத் தகவலை அரசு அதிகாரிகள் உறுதி செய்ய மறுக்கின்றனர். கடந்த சில மாதங்களை ஆய்வு செய்தபோது, ஒரு மாதத்திற்கு கோதுமை இறக்குமதி என்பது 80 ஆயிரம் மெட்ரிக் தொன்களாக உள்ளது. ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு மாதத்திற்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் தொன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உயர்வு, வரவு, செலவு அறிக்கையில் பற்றாக்குறை, மீதமுள்ள தொகையைச் செலுத்துவதில் முரண்பாடு, உணவு பொருள்கள் வழங்கும் நிறுவனங்கள் சலுகை களுடன் கடன் பெறுவதில் சிக்கல்கள் போன்றவை காரணமாக கடந்த செப்டெம்பர் மாதம் அரசு புதிய முடிவுடன் செயற்பட்டது. அதன்படி, உணவுப் பொருள் களை உள்நாட்டில் மிக அதிகமாகப் பயிரிடுங்கள் என்று புதிய பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது.

2007 – 2010 ஆண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டில் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் தேசிய அளவில் பிரசாரம் ஒன்றைத் தொடங்கியுள்ளது இலங்கை அரசு. அதற்காக, "பயிர்களை விளை







விப்போம்; தேசத்தைப் பேணுவோம்" என்ற கோஷத் துடன் விழிப்புணர்வுப் பிரசாரத்தை ஜனாதிபதி ராஜபக்க்ஷ தொடக்கி வைத்திருக்கிறார். இதன்மூலம் உணவுப் பழக்க வழக்கத்தை மாற்றுவதோடு, உணவு இறக்குமதிச் செலவையும் குறைக்கும் திட்டம் வழிவகுக்கப்பட்டது. நாட்டில் யுத்தம் நடைபெறுவது ஒருபுறமாக இருக்கட்டும்; மறுபக்கமாக நாட்டுமக்கள் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது. உணவுப் பஞ்சம் ஏற்பட்டால், சிங்கள மக்கள், தமிழ் மக்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருமே பாதிக்கப் படுவார்கள் என்பதே இங்கு முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய விஷயம்.



இலங்கையில் உணவு இறக்குமதித் தொகை ஆண்டுக்கு நூறு பில்லியன் ரூபா (ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்). இலங்கையின் உணவுக் களஞ்சியம் என்று கருத்தப்பட்ட கிழக்கு மாகாணத்தில், இந்தப் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தினால், நம் நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருளை சப்ளை செய்து தன்னிறைவு பெறலாம் என்றும் முந்தைய அரசு கருதியது. இதுகுறித்து ராஜபக்க்ஷ, ''எதிர்பாராத விதமாக சமீபத்தில் நாம் உணவு உற்பத்தியை மறந்துவிட்டு இறக்குமதி செய்வதையே முழுமையாக நம்பியுள்ளோம். 1970ம் ஆண்டுகளில் நாம் இறக்குமதி செய்த கோதுமை உணவுப் பொருள்களுக்கு கடன்க ளையே இன்னும் நாம் முழுமையாகச் செலுத்த வில்லை,'' என்றார்.

இத்திட்டம் சரியான முறையில் செயற்பட்டால் இலங்கைக்குத் தேவையான உணவுப் பொருட்களின் பெரும்பகுதியை உற்பத்தி செய்துகொடுக்கும் இடமாக கிழக்கு மாகாணம் உருவாகி விடுவதுடன், அங்கு வேலை வாய்ப்பும் பெருக வாய்ப்புண்டு.

அமெரிக்க அரசின் பொதுச் சட்டம் 480ன் திட்டத்தின்படி 1970களில் கோதுமையை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தது. இந்தச் சட்டத்தின்படி உள்ளூர் கரன்சி மதிப்புக்குக் கோதுமை மாவை சப்ளை செய்தது. இந்தத் திட்டத்திற்கு அப்போதைய நிதி அமைச்சர் என்.எம்.பெரேரா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். "கோதுமை இறக்குமதி செய்வதன் மூலம் நாம் அமெரிக்காவுக்குச் செலுத்தும் தொகையை வருடா வருடம் கணக்கிட்டால், நாம் மீளமுடியாத அளவுக்கு அமெரிக்காவிடம் அடிமையாகிவிடுவோம்" என்றார். அது எவ்வளவு உண்மையான ஒரு கணிப்பு என்பது இப்போது தெரிகிறது.

இந்நிலையில், இலங்கைக்கு தற்போது கோதுமை உணவுப் பொருள்கள் அவுஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த வேலையை சிங்கப்பூரைச் சேர்ந்த பிரிமா நிறுவனம் செய்கிறது. இந்நிறுவனத்திற்கு இலங்கையில் ஒரு கிளை உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரை இலங்கை கோதுமைக்கு அமெரிக் காவையே நம்பி இருந்தது குறிப்பிடத்தக்கது.

அரிசி உணவைப் பயன்படுத்தும் அளவை அதிகரிக்கும் முயற்சிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து வருகிறது. பாண் மற்றும் ரொட்டி போன்றவைகளை அரிசி மாவில் தயாரிக்கும் வேலையும் தீவிரமாக நடந்து வருகிறது. கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுனர் சிரமல் அபயரத்ன, ''இலங்கையில் மட்டும்தான் இப்படியான மாற்றம் நடைபெறுகின்றது என்றில்லை. ஐரோப்பாவிலும் தற்போது கோதுமையின் பாவனை குறைந்து அரிசி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது உலகமய மாதலின் ஒரு பகுதி,'' என்கிறார்.

உள்நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான, இந்தப் பிரசாரத் திட்டத்தின் மூலம், அடுத்த சில ஆண்டுகளில் நான்கு மில்லியன் வீடுகளில் தோட்டங்கள் அமைக்கப்படும் என்று அரசு நம்புகிறது. இதற்காகப் பயன்படுத்தாத நிலத்தை விரும்புபவர்கள் பயன் படுத்தும் அளவுக்கு வாடகைக்கு கொடுக்கவும் விழிப்புணர்வுப் பிரசாரம் செய்யப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார நிபுணர் சந்தரத்ன, ''அரிசியை மிக அதிகமாகப் பயன்படுத்தும் இலங்கை மக்களுக்கு கோதுமையைவிட அதிக சத்துக்கள் கிடைக்கிறது. மற்றய தானியங்களில் இருந்து நாம் பெறும் சத்துணவுகளில் 70 சதவீதத்திற்கு மேலானவை இலங்கையில் உபயோகிக்கப்படாமல் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும்'' என்கிறார்.

தற்போதுள்ள நிலையில் இலங்கையில் பணவீக்கம் 28 சதவீதத்தை எட்டியுள்ளதாக அண்மையில் தகவல் வெளியாகிறது. இதனால், நாட்டில் விலைவாசி உயர்வு விண்ணை முட்டிக்கொண்டு நிற்கிறது. இதன் மூலம் ஏழைகள், நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

இலங்கையில் இனப்பிரச்சனை இருக்கிறது. ராணுவரீதியான யுத்தமும் நடைபெறுகிறது. ஆனால் மக்களின் அன்றாட தேவைக்கான இப்படியான திட்டங்கள் வரவேற்கப்படாவிட்டால் பாதிக்கப்படப் போவது தென்னிலங்கையில் வசிக்கும் சிங்கள மக்கள் மாத்திரமல்ல. அங்கு வசிக்கும் அனைவருமே!

அரசுக்கும் அரிசிக்கும் இடையே பிடிவாதம்

வடகொரியாவில் உணவுப் பஞ்சத்தால் பெரும் பாதிப்பு ஏற்படக் கூடும் என கடந்த வாரம் வெளியான ஓர் அறிக்கை எச்சரித்திருக்கிறது. தென்கொரியாவைச் சேர்ந்தது 'குட் பிரெண்ட்ஸ்' என்ற அமைப்பு. இது வடகொரியாவில் நிலவும் பஞ்சநிலை பற்றி தனது உளவாளிகள் மூலம் திரட்டிய தகவல்களைத் தொகுத்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்தான் இப்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



வடகொரியா தனது அணு குண்டுச் சோதனை முயற்சியில் பிடிவாதமாக இருக்கிறது. இதனால், அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளின் பகையையும் சம்பாதித்துள்ளது. இந்த நிலை வெகுகாலமாக நீடிக்கிறது. இதனால், வடகொரிய ராணுவத்திற்கு அதிகம் செலவிட நேர்கிறது. உணவு தானியத் தன்னிறைவை எட்டமுடியவில்லை. பிற நாடுகளை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. இன்றைய நிலையில் வடகொரியாவுக்கு சீனாவிலிருந்துதான் அதிக அளவு உணவு இறக்குமதி செய்யப்படுகிறது. ஏற்கெனவே, 1990களில் இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. அப்போது 10 லட்சத்திற்கும் அதிகமானோர் இறக்க நேரிட்டது. இது வடகொரியாவில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

1990களில் ஏற்பட்டது போன்ற ஒரு நிலையை வடகொரியா சந்திக்க நேரிடலாம் என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணம் அமெரிக்கா, தென்கொரியாவுடன் அணு ஆயுதப் பரவல் காரணமாக ஏற்பட்டு வரும் பகைமையால் ராணுவச் செலவை தாங்க முடியாத நிலை வடகொரியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் சர்வதேச அளவில் உணவு தானியங்களின் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. இதுதவிர, உள்நாட்டில் கடந்த ஆண்டிலிருந்து ஏற்பட்டு வரும் வெள்ளச்சேதமும் வடகொரியாவின் கருவூலத்தைக் காலி செய்து வருகின்றது. இதனால், உணவு ரேஷன் முறையை அந்த நாடு 6 மாதங்களுக்கு ரத்து செய்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே அந்த நாட்டின் ரேஷன் முறை சரிவர செயல்படவில்லை என்ற குறை இருந்த நிலையில் இந்த ரேஷன் முறையை அரசு கைவிட்டுவிட்டதால் தனியார் துறையையே மக்கள் நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பணம் கொடுத்து தனியாரிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் உணவு தானியத்தையும் அந்த நாட்டு மக்கள் வாங்கிவைத்துக் கொள்ளலாம். இதனால், ஒரு சிலர் பெருமளவில் வாங்கிப் பதுக்கி வைக்கவும் வாய்ப்பிருக்கிறது.

ஆனால், இந்த நிலை வருவது உறுதி என ஊர்ஜிதமாகக் கூற முடியாது என்கிறது யாங் யாங்கில் அலுவலகம் வைத்துள்ள உலக உணவுத் திட்டம் என்ற ஐ.நா. அமைப்பு. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு உணவுப் பஞ்சம் அதிகமாகத் தலைவிரித்தாடும் வாய்ப்பு இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை ஊர்ஜிதமான முறையில் கூறமுடியாது என்கிறார் இந்த ஐ.நா. அமைப்பின் ஆசிய பத்திரிகை தொடர்பாளர் ஃபால் ரிஸ்லே.

வடகொரியர்கள் இந்த ஆண்டு கடும் உணவும் பஞ்சத்தைச் சந்திக்கவிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன என்கின்றனர் நிபுணர்கள். 1990ம் ஆண்டுகளில் மொத்த மக்கள் தொகையான 2.3 கோடி பேரில் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் பஞ்சத்தால் பலியான பின்னர்தான் அந்த நாடு வெளிநாடுகளின் உதவியை நாடியது. கடந்த ஆண்டு மழைக்காலத்தில் பெய்த மழையால் பெரு வெள்ளம் ஏற்பட்டு அந்தப் பருவத்தின் விளைச்சலில் 11 முதல் 13 சதவிகிதத்தை நாசம்

செய்துவிட்டது. சர்வதேச அளவில் உணவு தானியங்களின் விலை கடுமையாக உயர்ந்துவிட்டதால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் திறனும் அந்த நாட்டுக்குக் குறைந்துவிட்டது. வடகொரியாவுக்கு உணவு தானியங்களை அதிக அளவில் ஏற்றுமதி



செய்யும் சீனா தனது உணவு தானிய ஏற்றுமதிக்கான வரி விதிப்பைக் கடுமையாக உயர்த்திவிட்டது. அரசியல் கெடுபிடிகள் காரணமாக தென்கொரியாவும் வழக்கமாக ஆண்டுதோறும் அனுப்பும் உணவு தானிய ஏற்றுமதியை இந்த ஆண்டு நிறுத்திவிட்டது.

இப்படிப் பல்வேறு காரணங்களால் வடகொரியாவின் உணவு தானியக் கையிருப்புக்குப் பெரும்பங்கம் வந்துவிட்டது. வடகொரியாவில் ஆண்டுக்கு 10 லட்சத்திற்கும் அதிகமான பேருக்கு உணவு வழங்கும் ஐ.நாவின் உணவு உதவித் திட்டமும் இதனால் பாதிப்படைந்துள்ளது என ஃபால் ரிஸ்லே மேலும் கூறினார்.

கடந்தவாரம் வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியா எடுத்த கெடுபிடி நிலையால் கோபமடைந்து தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி லீ மயுங் பாக் மீது வடகொரியா ஆத்திரமூட்டும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளது. "தென்கொரியாவின் உதவி எங்களுக்குத் தேவையில்லை. வெளிநாட்டு உதவி இன்றியே எங்கள் உணவுத் தேவையைச் சமாளித்துக்கொள்வோம்" என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. வடகொரியா இப்படிக் கூறிவிட்டதால் தென்கொரியா இந்த ஆண்டு வடகொரியாவுக்கு வழக்கமான உணவு உதவியைப் அளிக்க முடியாது நிலையை அந்த அறிவிப்பு ஏற்படுத்திவிட்டது.

"உணவுத் தட்டுப்பாடு உச்சக்கட்டத்தை எட்டும் மாதங்களுக்கு முன்பே தென்கொரியா அளிக்கும் உணவு உதவிக்கு வேட்டு விழுந்துவிட்டது. பிடி அரிசிக்கும் வழியில்லை என்ற நிலையை மக்கள் எட்டும் வரை வடகொரியா அரசு பிற நாடுகளின் உதவியை நாடாது. இந்த பிடிவாதப் போக்கால் சாதாரண மக்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், உலக நாடுகளின் உதவியைப் பெற வடகொரியா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிகிறது" என வடகொரியாவின் பொருளாதார நிபுணர் டாங் யாங் ஸியுங் கூறியிருக்கிறார்.

உணவுத் தட்டுப்பாடு விரைவில் வரும் என்ற கருத்து பரவத் தொடங்கியதும் வட கொரியாவில் உணவு தானிய விலைகள் சுமார் 70 சதவீதம் வரை உயர்ந்துவிட்டன என்கின்றனர் தென்கொரிய நிபுணர்கள். தென்கொரியாவில் வாழ்ந்துகொண்டு வடகொரியாவில் வாழும் தங்கள் உறவினர்களுக்குத் தன்னார்வ அமைப்புகள் மூலம் உணவு உதவியை அளித்து வருபவர்களும் இப்படி விலை உயர்ந்துவிட்டன என்று உறுதி செய்கிறார்கள்.

வடகொரியர்கள் பஞ்சத்தில் அடிபடுவது ஏன் என சோலில் உள்ள கொரிய கிராம பொருளாதார அமைப்பின் உணவுப் பாதுகாப்பு நிபுணர் கிம் யாங் ஹுன் தனக்கே உரிய பாணியில் விவரிக்கிறார். 'வடகொரிய அரசியல்வாதிகளுக்கு வாய் பெரியது. பிற நாடுகளைப்பற்றி மோசமான வார்த்தைகளைக் கூறினால் உணவு உதவி நிறுத்தப்பட்டு விடும். அவர்கள் வாயை அடக்கி வைத்திருந்தால் உலக நாடுகளின் உதவி தட்டுப்பாடின்றி கிடைக்கும்" என கிண்டலாகக் கூறுகிறார் அவர்.

"உள்ளூர் அரசியல் சூழ்நிலையை இப்படி மோசமாகப் பேசினாலே வியாபாரிகள் நிலைமையைப் புரிந்து கொண்டு பதுக்கலில் இறங்கிவிடுகின்றனர். அரசு நிர்வாகமும் ரேஷனை நிறுத்திவிட்டது. பொதுமக்கள் வெளியில்தான் (தனியாரிடம்) உணவு தானியங்களை அதிக விலைக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால், ஏழைகளின் பாடு திண்டாட்டமாகி விடுகிறது. கால் வயிற்று உணவுக்கும் அல்லாட வேண்டியதாகி விடுகிறது. இப்போது உள்ள அரசியல் சூழ்நிலையைப் பார்த்தால் உணவு தானியக் கட்டுப்பாடு கடந்த ஆண்டைவிட மோசமாகத்தான் இருக்கும்" என்கிறார் அவர்.

கூட்டுப்பண்ணை முறையில் உணவு தானியங்களை விளைவித்து ரேஷன் முறை மூலம் பொதுமக்களுக்கு அதை அரசே வினியோகிப்பது என்பது பல காலமாக எவ்விதப் பிரச்சனையும் இன்றி வடகொரியாவில் நிறைவேறி வந்தது. ஓரளவுக்குப் பொதுமக்களின் உணவுதானியத் தேவையை இவை பூர்த்தி செய்து வந்தன. 1990ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் இந்த அரசு சார்பிலான உற்பத்தி மற்றும் விநியோக முறையை அடியோடு சிதைத்துவிட்டது. அரசு அல்லாத தனியார் பண்ணைகள், தனியார் மார்க்கெட்டுகள் என தனியார் துறை தலைதூக்கத் தொடங்கின. அதன்பின் நிலைமை சீராகி, கடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன் உணவு தானியங்கள் தாராளமான முறையில் தட்டுப்பாடு இன்றி கிடைக்கத் தொடங்கின. இதையடுத்து, தனியாரிடம் உணவுப் பண்டங்களை மக்கள் வாங்கக் கூடாது, அரசின் ரேஷன் முறையில் மட்டுமே அவற்றை வாங்க வேண்டும் என பழைய முறையை அரசு மீண்டும் புகுத்திவிட்டது.

தனியார் துறை அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது எனக் கருதி தனியார் பண்ணைகள், கடைகளை மூடச் செய்யும் நடவடிக்கையை அரசு கெடுபிடியான முறையில் அமலாக்கியது. இதனால், மக்கள் அரசு ஏஜன்சிகளையே நம்ப வேண்டியதாயிற்று. 'முதலாளித்துவத்தை உருவாக்குவன இந்த தனியார் அமைப்புகள். எனவே, இவற்றை மூடிவிட வேண்டும்' என அரசு எடுத்த நடவடிக்கையே பொதுமக்களிடம் மீண்டும் உணவு தானியத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டது என்கின்றனர் தன்னார்வ அமைப்புகளின் நிபுணர்கள்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதக் கடைசியில் தென்கொரியாவிடம் வட கொரியா தனக்கு உதவும்படி கோரிக்கை விடுக்கும். முன்பனிக்கால விவசாயத்துக்கு சுமார் 3 லட்சம் தொன் உரம் வேண்டும். பனிக்கால உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க 5 லட்சம் தொன் அரிசி வேண்டும் என அது பட்டியல் தரும். வடகொரியாவில் விளைச்சல் நன்றாக இருந்த காலங்களிலும் மக்களின் ஆண்டு உணவுத் தேவையில் 10 லட்சம் தொன்



கோபமடைந்து தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி லீ மயுங் பாக் மீது வடகொரியா ஆத்திரமூட்டும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளது. "தென் கொரியாவின் உதவி எங்க ளுக்குத் தேவையில்லை. வெளிநாட்டு உதவி இன்றியே எங்கள் உணவுத் தேவையைச் சமாளித் துக்கொள்வோம்" என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது

அல்லது 20 சதவீதம் குறைவாகவே விளைச்சல் கிடைக்கும். எனவே, அது பிற நாடுகளின் உதவியை நாடித்தானே ஆக வேண்டும். இப்படி மோசமான உணவு உற்பத்தி கொண்ட வடகொரியா, இந்த ஆண்டு பிற நாடுகளின் உதவியைப் பெற எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் இருக்கிறது. ஆனால், வடகொரிய அரசு நடத்தும் ஊடகங்கள் மட்டும் கடந்த வாரம் முதல் நிலைமையை விளக்கி தென்கொரிய புதிய ஜனாதிபதிக்கு உதவிகேட்டு குரல் எழுப்பி வருகின்றன. தங்கள் வயிற்றைப் பட்டினிபோடாமல் இருக்க வட கொரியாவும், தென் கொரியாவும் தங்கள் நிலையைத் தளர்த்திக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இரு நாடுகளாகப் பிரிந்திருந்தாலும் நாமெல்லாம் ஒரு தாய் மக்கள் அல்லவா என அவை கெஞ்சத் தொடங்கியிருக்கின்றன.

தென்கொரிய புதிய ஜனாதிபதியும் இதற்கு செவி சாய்த்துப் பதிலளித்திருக்கிறார். இரு தரப்பும் முறையாகப் பேசுவோம். வடகொரியா தனது பிடிவாதத்தை விட்டுவிட்டு பேச்சு நடத்த வரட்டும் என அவர் கூறியிருக்கிறார். ஆனால், வடகொரியாவின் கடற்பகுதிக்குள் தென்கொரியாவின் போர்க்கப்பல்கள் அத்துமீறி நுழைந்திருக்கின்றன. எனவே, பேச்சு நடத்த வர முடியாது என வடகொரியா திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

அரிசியா வரட்டுப் பிடிவாதமா தாக்குப்பிடிக்கும்?

மன்னாரில் இடம்பெறும் ராணுவ நடவடிக்கைகள் முடக்கப்பட்டு அவை தோல்வியின் விளிம்பிற்குச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ராணுவத் தினரின் கவனம் வடபோர்முனை (முகமாலை–நாகர்கோவில்) நோக்கி மீண்டும் திரும்பியிருக்கிறது. வன்னியைச் சூழ்ந்துள்ள ஏதாவ தொரு களமுனையூடாக வன்னிக்குள் கால்வைத்தேயாக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது ராணுவத்தரப்பு, ஆனால் சிக்கல் என்னவென்றால், எந்தவொரு களமுனையும் தற்போதைய நிலையில் ராணுவத்துக்குச் சாதகமானதாக இல்லை.

குறிப்பாக மன்னார், வவுனியா, மணலாறு, ஆகிய களமுனைகளில் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு முயன்று பார்த்தும் குறிப்பிடத்தக்க வெற்றியை செல்வதே அந்த நடவடிக்கையின் திட்டம்.

ஆனால் எதிர்பார்த்தற்கும் மாறாக ராணுவத்தின் அந்தத் திட்டம் அப்போது சறுக்கி விட்டிருந்தது. மிகப்பெரும் எதிர்ப்பைச் சந்தித்து கடுமையான படை இழப்புகளுடனும் ஆயுத இழப்புகளுடனும் முன்னேறிய துருப்புகள் பின்வாங்க நேரிட்டது. இந்த தோல்வியில் ராணுவத்தரப்பு தமது ஆறு டாங்கிகளை இழந்திருந்தது.

அதற்குப் பின்னர் வடபோர்முனை ஊடான முன்னகர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதுபோல் இருந்து வந்த ராணுவத்தரப்பு இடையிடையே முன்னே சென்று தாக்கிவிட்டு மீண்டும் பின்நகரும் உத்தியைக் கடைப்பிடித்து வந்தது. 2006 ஒக்டோபரில் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவமே இதற்கு காரணமாகவும் இருந்தது. இந்நிலையில் மீண்டும்

புலிகள் இதுவரை உபயோகப்படுத்தியிராத முக்கிய ஆயுதத்தின் வெள்ளோட்டம்?

புலிகளின் வேறு எந்தக் களமுனைக்கும் கொடுக்கப்பட்டிராத முக்கிய ஆயுதம் கேணல் தீபன் தலைமையிலான படையணியின் கைகளில்!

அடைந்து கொள்ள முடியவில்லை. மாறாக மடுமாதாவை இடம்பெயர வைத்த பெயரே ராணுவத் தரப்புக்கு கிடைத்திருக்கிறது. எனவே வன்னிக்குள் செல்லவேண்டிய தமது நகர்வுப் பாதைகளை அல்லது திட்டங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவை ராணுவத் தரப்பிற்கு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் வன்னிக் களமுனையில் மணலாற்று களமுனையில் வன்னிக்கு உள்ளே ஊடுருவ ஒரு சந்தர்ப்பம் இருப்பதாக ராணுவம் நினைத்திருந்தது. ஆனால் அங்கும் நிலைமை ராணுவத்தினருக்கு சாதகமாக இல்லை. எனவே வட போர்முனையின் பக்கம் விரும்பியோ விரும்பாமலோ தமது கவனத்தை மீண்டும் திருப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. வடபோர்முனையைப் பொறுத்தவரை, 2006 ஒக்டோபரில் ராணுவத்தினர் பலத்த ஏற்பாடுகளுடனான ஒரு தாக்குதலை முகமாலை–நாகர்கோவில் களமுனையில் மேற்கொண்டிருந்தனர். பெருமளவிலான படைகள் யுத்த தளபாடங்கள் சகிதம் நகர்ந்து ஆனையிறவுக்குச்

வடபோர்முனையின் பக்கம் ராணுவத்தின் கவனம் இப்போது திரும்பியிருக்கிறது. வன்னிக்குள் கால்வைக்கும் திட்டத்துடன் (அது ஆனையிறவை நோக்கியதாகவே பெரும்பாலும் இருக்கும் என்பதை ஊகிக்கலாம்) ராணுவத்தின் படையணிகள் மிகவே கமாகத் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்ட ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சில தினங்களுக்கு முன் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் "இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதலை புலிகள் மீது தொடுக்கப் போகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்.

ஜி.ஏ.சந்திரசிறி ஒரு தாக்குதலைப்பற்றி வாய் திறக்கிறாரென்றால் அது நிச்சயம் முகமாலை - நாகர்கோவில் களமுனையுடன் சம்மந்தப்பட்ட தாக்குதல்தான்.

மிகவும் பலமானதொரு மிகப்பெரிய தாக்குதலை நடத்த

வேண்டியிருக்குமானால் அது மிகவும் பலமாக இருக்கும் தரப்பினருக்கு எதிராகவே நடத்தப்படுவதாக இருக்கவேண்டுமல்லவா? அந்த வகையில் வடபோர் முனையில் புலிகளும் மிகப்பலமாகவே இருக்கின்றனர் என்ற உண்மையும் மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் கூற்றில் அடங்கியிருப்பதை அவதானிக்கலாம்.

வடபோர்முனையைப் பொறுத்தவரை ராணுவத்தினரின் இரண்டு பெரிய தாக்குதல் படையணிகளும், இரண்டு உதவித் தாக்குதல் மற்றும் தேடுதல் அணிகளும் நிலை கொண்டுள்ளன. 51, 52, 53, 55வது படையணிகளே வடபோர்முனையில் நிலைகொண்டுள்ளன. இதில் 53, 55வது படையணிகளே பலமான தாக்குதல் அணிகள். ஏனைய இரண்டும் உதவித் தாக்குதல் மற்றும் தேடுதல் அணிகள். இவை அனைத்திலுமே பலம் கூடியதென்றும் ராணுவத்தினரின் அதிநம்பிக்கையைப் பெற்றதுமான 53வது படையணி நாகர்கோவில் பகுதியில்தான் நிலைகொண்டுள்ளது.

2007ம் ஆண்டுவரை இந்த படையணியில் மூன்று பிரிகேட்களே இருந்தன. ஆனால் இன்று இந்த படையணி நான்கு பிரிகேட்களைக் கொண்ட, ஸ்ரீலங்கா ராணுவத்தின் முதன்மைத் தாக்குதல் அணியாக உருமாற்றம் அடைந்திருக்கிறது. மிருசுவிலில் தளம் அமைத்துள்ள இந்த 53வது படையணியின் கட்டளைத் தளபதியாக இருப்பவர் பிரிகேடியர் சமந்த சூரிய பண்டார. இந்த படையணியின் கீழ் 53-4வது பிரிகேட்டே புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. யந்திர காலாற் படைப்பிரிவான இந்த பிரிகேட்டுக்கு கேணல் ரால்ப் நுகேர கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் படையணிதான் அந்தக் களமுனையில் ராணுவத்தின் நம்பிக்கை நட்சத்திரம்.

2007ம் ஆண்டு பெப்ரவரி 28ம் திகதி பலாலி படைத்தளத்தில் வைத்து யந்திரக் காலாற்படைப்பிரிவு (Mechanized Infantry Division) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. அன்றுமுதல் இன்றுவரை இந்த படைப்பிரிவு பல்வேறு தாக்குதல் பயிற்சிகளைப் பெற்று, தற்போது நாகர்கோவில் களமுனையில் தயாராக நிற்கின்றது.

இலங்கை ராணுவத்தில் யந்திரக் காலாற்படைப்பிரிவு உருவாக்கப்பட்டது இதுவே முதற்தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்குமுன் ராணுவத்தின் ஒரு பிரிவாக 'கவசத்தாக்குதல் படைப்பிரிவு' என்ற பெயரில் ஒரு பிரிவு இருந்தபோதும், தற்போது கவசத்தாக்குதல் படைப்பிரிவுடன் காலாற்படைப்பிரிவையும் ஒன்றுசேர்த்து இயந்திரக் காலாற்படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதுவும், ராணுவத்தினரால் மிகவும் வலிமை வாய்ந்ததெனக் கருதப்படும் 53வது படையின் கீழ்!

இந்த 53-4வது பிரிகேட்டின் கீழ் 10வது சிங்க



பற்றாலியன், 3வது இலகு காலாற்படை பற்றாலியன், 4வது கஜபா பற்றாலியன், 5வது மற்றும் 6வது கவசத் தாக்குதல் படை பற்றாலியன்கள் இருக்கின்றன. அதாவது ஐந்து பற்றாலியன்களை உள்ளடக்கிய சுமார் 5 ஆயிரம் ராணுவத்தினரைக் கொண்டு இந்த பிரிகேட் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு பிரிகேட் ராணுவ நடைமுறைகளின்படி பார்க்கப்போனால் உண்மையில் மிகவும் பலம்பொருந்தாகவே இருக்கும்.

எனினும் புலிகள் வகுக்கும் தற்காப்புப் போர்த்திட்டத்தில் இது தாக்குப் பிடிக்குமா இல்லையா என்பதை அடுத்துவரும் சில வாரங்களில் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். காரணம் என்னவென்றால், இப்படியானதொரு படையணி மீதான offensive attack நடத்துவதற்கு அதீத படைப்பலம் தேவை என்பது உண்மைதான். ஆனால் defensive attack நடாத்துவதற்கு அந்தளவுக்குப் படைபலம் தேவையில்லை. தற்காப்புத் தாக்குதல் என்று வரும்போது அந்த அணி தனது பாதுகாப்பான பகுதிகளில் இருந்தே தாக்கப்போகிறது. எதிரணிதான் நகர்ந்து வரவேண்டிய சூழ்நிலை.

53-4வது பிரிகேட்டின் பிரதான கட்டளைத் தளபதியாக கேணல் ரால்ப் நுகேர இருக்கும் அதேநேரத்தில், களமுனையில் இந்த பிரிகேட்டை வழிநடத்தும் பொறுப்பு லெப்.கேணல் ஜெயசுந்தரவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. ஆனையிறவைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டே இந்த பிரிகேட் உருவாக் கப்பட்டது என்று ராணுவ வட்டாரங்களில் கூறப்படுகிறது. நாகர்கோவில் மற்றும் முகமாலை ஊடாக முன்னேறி, வெட்டவெளியான பகுதிக்குள் நுழைந்துவிட்டால் பின்னர் இத்தகைய யந்திரக் காலாற்படைப் பிரிவைப் பயன்படுத்தி ஆனையிற வுவரை இலகுவாக முன்னேறிவிடலாம் என்பது உண்மைதான். ஆனால் அதற்குப் புலிகள் இடம்கொடுப்பார்களா என்ன?

புலிகளைப் பொறுத்தவரை தமது அனுபவம் வாய்ந்த

சிறப்புத் தளபதி கேணல் தீபனை வட போர்முனையில் நிறுத்தி, தாக்குதல் அணிகளுக்கு தேவையான 'சகல வளங்களும்' கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. இங்கு 'சகல வளங்களும்' என்று குறிப்பிடும்போது, வேறெந்தக் களமுனைக்கும் கொடுக் கப்பட்டிராத சில யுத்த தளபாடங்கள் கேணல் தீபன் தலைமையிலான வட போர்முனைக்குக் கொடுக் கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் இருக்கிறது. இதற்குக் காரணமும் இருக்கிறது. அது என்னவென்றால் இந்தக் களமுனையிலேயே ராணுவம் தனது கவச வாகனப் படையணி சகிதம் முன்னகரத் திட்டமிட்டுள்ள காரணத்தால், கவச வாகனங்களைச் சரியான முறையில் எதிர்கொள்ளத் தேவையான யுத்த தளபாடங்கள் இந்தக் களமுனையிலேயே தேவைப்படுகின்றன.

மற்றய களமுனைகளில் பெரிதாக உபயோகப் படுத்தப்பட முடியாத, ஆனால் முகமாலை நாகர்கோவில் களமுனையில் பயன்படக்கூடிய, சில யுத்த தளபாடங்கள் புலிகள்வசம் இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இங்கு குறிப்பிடப்படும் ஆயுதங்கள் இதுவரை புலிகளால் இலங்கை ராணுவத்துக்கெதிராக உபயோகப்படுத்தப்பட்டிராத ஆயுதங்கள் எனவும் கூறப்படுகிறது.

தமது கவச வாகனங்கள் சகிதம் ராணுவம் நகரமுற்படும்போதே கேணல் தீபன் தலைமையிலான படையணி இந்த ஆயுதங்களை வெள்ளோட்டம் விடுவார்கள் எனவும் சொல்கிறார்கள். அப்போதுதான் புலிகளிடம் இவ்வகை ஆயுதங்களும் இருக்கும் விஷயம் வெளியே தெரியவரும் எனவும் கூறுகிறார்கள். இங்கு குறிப்பிடப்படுபவை எவ்வகை ஆயுதங்கள் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் இக்கட்டுரையின் இறுதிப்பகுதியில் சில சாத்தியங்கள் விளக்கப்பட்டுள்ளன. படித்துப் பாருங்கள்.

எனவே வடபோர்முனையும் ராணுவத்தினருக்கு நினைத்து வைத்திருக்கும் அளவுக்கு இருக்காமல் கடும் நெருக்கடியைக் கொடுக்கக்கூடும் என்றே தோன்றுகிறது.

இனி 55வது படையணி குறித்துப் பார்க்கலாம்.

55வது படையணி என்றதுமே உடனே நினைவுக்கு வருவது பிரிகேடியர் கமல் குணரட்ணதான். கடந்த 8ம் திகதி முகமாலை முன்னணியில் நிலைகொண்டுள்ள 55வது படையணியின் அதிகாரிகள் சகிதம் அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் அவதானித்துக் கொண்டிருந்தார். லெப்.கேணல் ஜெகத் ரட்ணாயக்க அவருக்கு அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த விளக்கங்களை வழங்கிய வண்ணமிருந்தார். திடீரென புலிகளின் சினைப்பர் குண்டு லெப்.கேணல் ஜெகத் ரட்ணாயக்கவின் மார்புப் பகுதியில் துளைத்தது. அதிர்ச்சியுடன் சுதாகரித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு உடனடியாக வெளியேறினார் பிரிகேடியர் கமல் குணரட்ண.

சினைப்பர் தாக்குதலுக்கு இலக்கான லெப்.கேணல் ஜெகத் ரட்ணாயக்கதான் முன்னணி நிலைக்குரிய கட்டளைகளைச் செயற்படுத்தும் அதிகாரியாக விளங்கினார். கடந்த 6ம் திகதி யாழ்.குடாநாட்டு அழைத்துச் செல்லப்பட்ட தென்னிலங்கை சிங்கள ஊடகவியலாளர்களுக்கு முன்னணிக் களநிலவரம் குறித்து இவரே விளக்கமளித்திருந்தார். தான் அழைத்தும் செல்லும் பாதையைவிட்டு விலகினால் மிதிவெடியில் சிக்கிவிடுவீர்கள் என்று சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்த லெப்.கேணல் ஜெகத் ரட்ணாயக்கவுக்கு புலிகளின் சினைப்பரில் இருந்து தப்பிக்கும் வழி தெரியவில்லை போலும். யார் இந்த பிரிகேடியர் கமல் குணரட்ண?

அவர்தான் 55வது படையணியின் கட்டளைத் தளபதி. முகமாலை முதல் நாகர்கோவில் பகுதிவரை நிலைகொண்டுள்ள இந்த 55வது படையணி வரணியில் தனது பிரதான பின்தளத்தை அமைத்திருக்கிறது. 55வது படையணியில் மூன்று பிரிகேட்கள் உள்ளன. 55-1வது பிரிகேட் கேணல் சாந்த திசாநாயக்க தலைமையிலும் 55-2வது பிரிகேட் கேணல் கபில உடலுப்பொல தலைமையிலும் 55-3வது பிரிகேட் கேணல் அத்துல கொடிப்பிலி தலைமையிலும் நிலைகொண்டுள்ளது. கிளாலி மற்றும் முகமாலை ஊடாக கடந்த பலமாதங்களாக மிகப்பெரிய அளவிலான தாக்கு தல்களை இந்த படையணி மேற்கொள்ளாத போதும். இடையிடையே தாங்கள் உஷார் நிலையிலேயே இருக்கின்றனர் என்பதை அவ்வப்போது காட்டுவது போல சிறிய சிறிய முன்னகர்வுகளை மேற் கொண்டுவிட்டு மீண்டும் பழைய நிலைக்கே ஓடிவந்து விடுகின்றனர்.

குடாநாட்டிலுள்ள ஏனைய இரண்டு படையணிகள் குறித்தும் இனிப் பார்க்கலாம். 51வது படையணி ஒரு தொண்டர் படையணி. வலிகாமம் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு இந்த படையணியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேஜர். ஜெனரல் மார்க் கொமாண்டஸ் இந்த படையணியின் தளபதியாக நீண்டகாலமாகச் செயற்பட்டுவருகிறார். புலிகளின் ஆளஊடுருவும் படையணியினர் குடாநாட்டில் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பும் மேலதிகமாக பூநகரிப் பகுதியில் இருந்து புலிகளால் வரும் அச்சுறுத்தலை முறியடிக்கும் பொறுப்பும் இந்த படையணியிடமே ஒப்படைக் கப்பட்டுள்ளது. யாழ். கரையோரங்களிலும் இந்த படையணியின் பிரிகேட்களைச் சேர்ந்தவர்களே பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

கடல்வழியாக புலிகள் தரையிறங்கும் பட்சத்தில் அந்த

தரையிறக்கத்தை முறியடிக்கும் பொறுப்பும் இந்த படையணியிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டை பொறுத்தவரை அது மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டு நோக்கப்படுகிறது. ஒன்று வலிகாமம். இரண்டு வடமராட்சி. மூன்று தென்மராட்சி. வலிகாமத்தில்தான் ராணுவத்தினரின் முக்கிய மையங்கள் அமைந்துள்ளன. அத்துடன் யாழ்.நகரோடு அண்மித்து வலிகாமமே காணப்படுவதால் வலிகா மத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அத்தகையதொரு பொறுப்பையே 51வது படையணி ஏற்றுள்ளது.

அடுத்து வடமராட்சி மற்றும் தென்மராட்சி. 52வது படையணியிடம்தான் இந்த இரண்டு இடங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 52வது படையணிக்கு கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் மனோ பெரேரா செயற்படுகிறார். வரணியிலே தளம் அமைத்துள்ள இந்த படையணிதான் முன்னரங்க நிலைகளிலுள்ள துருப்பு களுக்கான விநியோக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை 51, 52வது படையணிகள் உள்ளக அரங்கில் அதாவது குடாநாட்டுக்குள் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதில் படுதோல்வி கண்டுள்ளன என்பதே உண்மையாகும். கடந்த சில மாதங்களாக குடாநாட்டிற்குள் அசம் பாவிதங்கள் அதிகரித்துக் காணப் படவில்லை என்பது உண்மைதான்; ஆனால், கடந்தவாரம் மீண்டும் யாழ். குடாநாட்டிற்குள் ஒருவித பதற்றம் நிலவத் தொடங்கியுள்ளது. மீண்டும் இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றனர்.

ராணுவத்தினரோ அல்லது அவர் களின் துணைப் படைக்குழுவினரோ இவர்களை சுட்டுக் கொலை செய்யவில்லை என்று வைத்துக் கொண்டால், ராணுவத்திற்கு உதவியதற்காகவே புலிகள் இவர்களை சுட்டுக்கொலை செய் திருக்கலாம். அப்படியானால் புலிகள் யாழ். குடாநாட்டிற்குள் இன்னமும் உலவுகின்றனர் அல்லவா? அப்போ குடாநாட் டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதில் மேற்படி படை யணிகள் தோல்வியைத்தானே சந்தித்து வருகின்றன?

அதுதான் உண்மையும்கூட. கடந்தவாரம் நல்லூர் கோவில் வீதியில் வைத்து பலர் பார்த்திருக்க, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் அங்கு நின்ற இராணுவவீரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். குடாநாட்டிலுள்ள படையினரைச் சுட்டுக்கொலை செய்யவேண்டிய தேவை இராணுவ துணைப்படைக் குழுக்களுக்கு இல்லை. எனவே அந்த தாக்கு தலை புலிகளே நடத்தியுள்ளனர்.

யாழ். குடாநாட்டைப் பொறுத் தவரை இன்று அந்தப்பகுதி, அதியுச்ச பாதுகாப்பு வலயம் என்று வர்ணிக்கப்படுகிறது. அப்படினால் துப்பாக்கிச் சூட்டை நடத்தும் புலிகள் எப்படி தப்பிப் போகின்றனர்? எப்படி மீண்டும் வந்து தாக்குதல் நடத்துகின்றனர்? அதாவது 51, 52வது படையணிகள் குடாநாட்டின் உள்ளரங்கப் பாதுகாப்பில் தோல்வியைக் கண்டுள்ளன. அங்கே புலிகள் தாராளமாக நினைத்த மாத்திரத்தில் அதுவும் மோட்டார் சைக்கிள்களில்கூட நடமாடுகின்றனர்.

நிலைமை இப்படியிருக்கையில் யாழ். குடாநாட் டிலிருந்து தாங்கள் புலிகளை விரட்டியிருப்பதாகவும் யாழ். குடாநாட்டிற்குள் ராணுவத்தினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் 51வது படையணியின் தளபதியும் இலங்கை ராணுவத்தில் உள்ள மூத்த தளபதிகளில் ஒருவருமான மேஜர். ஜெனரல் மார்க் கொமா ண்டஸ் கூறியிருக்கிறார்.





யாழ். குடாநாட்டின் உள்ளரங்க நிலை இந்தக் கோலத்தில் இருக்கும் போதுதான் முன்னரங்க நிலையில் பெரியதொரு தாக்குதலுக்கு 53வது 55வது படையணிகள் தயாராகியுள்ளன. இவ்விரு படையணிகளும் சமகாலத்தில் புலிகளின் தற்போதைய முன்னரங்க நிலைகளை உடைத்துக்கொண்டு, எடுத்த எடுப்பிலேயே இரண்டாவது வளையத்திலுள்ள பாதுகாப்பு நிலைக்கு பாய்வதற்கு தயாராகின்றன என்ற தகவல்கள் ராணுவத்தரப்பிடம் இருந்து கசிந்துள்ளன. குறிப்பாக புலிகள் தமது முன்னரங்க நிலைகளில் டாங்கிகளை குப்புறக் கவிழ்க்கும் திட்டத்துடன் விழு குழிகளை வெட்டி வைத்துவிட்டுக் காத்திருப்பதால் அந்த உத்தியை உடைத் தெறிவதற்கான வியூகமும் ராணுவத்தரப்பால் வகுக்கப்பட்டு அதற்குரிய பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

ராணுவத்தரப்பு தமது முன்னகர்வுக்காக பெரிதும் நம்பியிருப்பது நாகர்கோவில் பகுதியைத்தான். இந்தப் பகுதியில்தான் பரந்த வெளிகளும், மணல்பாங்கான தரைத்தோற்றமும், களிமண்ணுடன் கூடிய தரைய மைப்புமென ஒரு வித்தியாசமான தரைத்தோற்றம் காணப்படுகிறது. இந்த தரைத்தோற்றத்தைப் பயன் படுத்தி தமது 53–4வது பிரிகேட்டின் யந்திரக் காலாற்படையை களமிறக்க ராணுவத்தரப்பு திட்டமிட் டுள்ளது. ஏனெனில் மேற்படித் தரைத்தோற்றத்தில் இத்தகைய யந்திரக் காலாற் படைப்பிரிவு இலகுவாக முன்னேறும் சாத்தியங்கள் உள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பரிட்சார்த்த முயற்சி ஒன்றை மேற்கொண்டு இப்பகுதியில் எந்தவித எதிர் தாக்குதல்களுக்கும் முகம்கொடுக்காமல் முன்னேறிய ராணுவத்தினருக்கு புலிகளின் வியூகம் குறித்த பொறிதட்டியதும், சடுதியாகப் பின்வாங்கியிருந்தனர். அதாவது புலிகள் தங்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நன்றாக உள்ளே இழுத்துச் சிக்க வைத்துவிட்டுத்தான் தாக்குதல் நடத்துவதற்காக, சிறிதும் எதிர்ப்புக் காட்டாமல் நகர விடுகின்றனர் என்று ஊகித்தே ராணுவம் சடுதியாகப் பின்வாங்கியிருந்தது. மொத்தத்தில் இந்த களமுனையில் ஒவ்வொரு அடியையும் நிதானமாக யோசித்தே முன்வைக்க வேண்டிய நிலையில் ராணுவத்தரப்பு உள்ளது.

கெரில்லாத் தாக்குதல்களுக்கு எதிராக களமுனைகளில் ஆயுதம் தாங்கிய கவச வாகனங்கள், டாங்கிகள் ஆகியவற்றைக் காக்கும் வகையில் தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்வது இந்தக் களமுனையில் ராணுவத்துக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. காரணம் இங்குள்ள கவச வாகனங்களின்மீது புலிகள் கண்வைத்துவிட்டால் இந்தக் களமுனையில் ராணுவத்துக்கு மகா சிக்கல் ஏற்பட்டுவிடும். முகமாலை போன்ற பகுதிகளில் கவச வாகனங்களின்மீது தாக்குதல் நடைபெறுவதைத் தடுப்பதற்கு ராணுவத்துக்கு விசேட பயிற்சிகள் கொடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலிய ராணுவத்தின் அபிமானத்துக்குரிய தாக்குதல் டாங்கிகளில் ஒன்றான Merkava-4 (தமிழில் அர்த்தம் கடவுளின் ரதம்) இலங்கை ராணுவத்துக்கு இந்தக் களமுனையில் பயன்படக்கூடியது என்று ராணுவத்தலைமையகம் கருதுவதாகத் தெரிகிறது. 2006ம் ஆண்டுவரை இஸ்ரேலிய Merkava, ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் அவர்களின் ஆர்.பி.ஜி–7 வழிகாட்டி மூலம் செலுத்தப்படும் ஏவுகணைகள் மீது கருணையுடன்தான் இருந்தது; பெரிதாகத் தாக்குதல் நடத்தியிருக்கவில்லை. 2006ல்தான் கதை மாறியது. இதன் தாக்குதல்திறன் இப்படியான களமுனைகளில் வெளிப்பட்டது. அதுவரையில் இதே ஆர்.பி.ஜி–7 வழிகாட்டி மூலம் செலுத்தப்படும் ஏவுகணைகள் இஸ்ரேலியர்களுக்கு தீராத தலைவலியைக் கொடுத்துக்கொண்டிருந்தன. அப்போது ரஷ்யாவில தயாரிக்கப்பட்ட 9எம்111 பாகோட் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், அவர்களது டாங்கிகளைப் பெருமளவு சேதப்படுத்தின.

விடுதலைப்புலிகள் இவ்வகை ஆயுதங்களை இதுவரை இக் களமுனையில் உபயோகித்திருக்கவில்லை. விடுதலைப்புலிகளிடம் இத்தகைய ஆயுதங்கள் இருப்பது உறுதி செய்யப்படாவிட்டாலும், சிரியா போன்ற நாடுகள் 2006–ம் ஆண்டுவரை ஹிஸ் புல்லாவுக்கு இது போன்ற ஆயுதங்களை ஏராளமான வழங்கியுள்ளன. விடுதலைப்புலிகளுக்கு பெய்ரூட்டுடன் இருந்த முன்னாள் தொடர்புகள் மூலம், இந்த விதமான ஆயுதங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டி ருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் 2006ம் ஆண்டுக் காலப்பகுதியில் புலிகளுக்கு ஹிஸ் புல்லாவுடன் சில தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டதாகப் பரவலாக நம்பப்பட்டது.

இதுவரை காலமும் டாங்க் எதிர்ப்பு ஏவுகணைகள், இலங்கை ராணுவத்தாலோ, சர்வதேச அளவில் சக்தி மிக்க நாடுகளின் ராணுவத்தாலோ மண்டலப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டி ருக்கவில்லை. ஆனால் முகமாலை நாகர்கோவில் களமுனையில், டாங்க்களைப் பிரதானமாக வைத்தே ஒரு படைப்பிரிவின் பலம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், புலிகள் இதுவரை உபயோகித்திராத

ஆயுதங்கள் எதையாவது கடைசிநேர அதிர்ச்சி வைத்தியத்துக்காக வைத்திருக்கிறார்களா என்று யோசிக்கவேண்டிய கட்டாயம் இலங்கை ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால்தான் Merkava-4 பக்கமாகக் கவனத்தைச் செலுத்த யோசிக்கிறது ராணுவத் தலைமையகம்.

இதுவரை, காட்டுப்பகுதிகளில் டாங்கிகளை எதிர்த்துப் போரிட, சாக்குப்பைகளில் ஆர்.பி.சி.–7 ரக ஆயுதங்களை புலிகள் மறைத்து வைத்திருப்பதாகக் கூறப்பட்ட கூற்றுக்களுக்கு விடுதலைப்புலிகளிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை. டாங்க் மற்றும் ஆயுதம் தாங்கிய வாகனங்களை விடுதலைப்புலிகள் வெட்டவெளிகளுக்குள் இழுத்துவிட்டு அவை தமது இலக்குக்குள் வந்தவுடன், ஆர்.பி.ஜி.க்களை அவற்றின் மீது பிரயோகிக்க வாய்ப்புள்ளது.

ஆயுத வாகனங்களைத் தகர்க்க சர்வதேச தீவிரவாத அமைப்புகள் பயன்படுத்தும் மற்றொரு தாக்குதல் கருவி ஐ.ஈ.டி. இதை எளிமையான தொழில்நுட்பம் மூலம் வெடிக்கச் செய்ய முடியும். பல்வேறு நாடுகளிலும் உள்ள மொபைல் போன் போன்ற தகவல் தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தி இவற்றை வெடிக்கச் செய்யலாம். வெடிக்கச் செய்வதற்கு அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பழமையான விடயத்தை இது இல்லாமல் செய்துவிட்டது. ரிமோட் மூலம் வெடிக்கச் செய்வதால், பொதுமக்கள் அல்லது சிறுவர்கள் கூட அதன் மீது சந்தேகம் ஏற்படாத நிலையில் வெடிக்கச் செய்து விட முடியும்.

உயர்தர வெடி பொருட்களுடன், உள்ளூரில் கிடைக்கும் அடிப்படையான பொருட்களைக் கொண்டு, குண்டு தயாரிப்பவர்கள் இதனை தயாரித்து விட முடியும்.

ஐ.ஈ.டிக்களில் இரண்டு வகைகள் உள்ளன. எஸ்.எப்.எப். கண்ணி வெடி மற்றும் ஊடுருவும் வகையிலான வெடிப் பொருள் (ஈ.எப்.பி.) ஆகியவைதான் இந்த இரண்டு வகைகள். எஸ்.எப்.எப். வெடிகள் இலகு ரக ஆயுதம் தாங்கிய வாகனத்தைத் தகர்க்கப் போதுமானது. ஈ.எப்.பி. வகை வெடிப்பொருள், டாங்க்கை முழுமையாக எரிய வைக்கக் கூடியது. சமீபத்தைய வெற்றிகரமான கண்டுபிடிப்புகளால் உலகம் வாகனப் பாதுகாப்பு முறைகளை முறையாகக் கையாள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. முக்கியமாக கவச வாகனங்களுக்கு!

இந்த ஆயுதங்கள் அல்லது தொழில்நுட்பங்களில் எந்தளவு புலிகளிடம் இருக்கின்றன என்பதில்தான் இருக்கிறது முகமாலை நாகர்கோவில் களமுனையில் ராணுவத்தின் கனவு பலிப்பதும் சிதறுவதும்.



இந்நிலையில், இந்தக் களமுனையில் இலங்கை ராணுவம் திட்டமிட்டுள்ள முன்னகர்வுக்கு பின்னணி ஆதரவு கொடுப்பதற்காக, 150,000 ரவுண்ட் சுடக்கூடிய 60 மில்லி மீற்றர் சிறு பீரங்கி குண்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் ஆகியற்றை உடனடியாக வழங்குமாறு பாகிஸ்தானிடம் இலங்கை கேட்டுள்ளது. மேலும், 25 மில்லியன் டொலர் தொகைக்கு 81 மில்லி மீற்றர், 120 மில்லி மீற்றர் மற்றும் 130 மில்லி மீற்றர் சிறு பீரங்கிக் குண்டுகள் ஆகியவற்றையும் தருமாறு பாகிஸ்தானிடம் கோரியுள்ளது.

அரசு தொடர்ந்து பில்லியன் கணக்கில் ராணுவத் தளவாடங்களுக்கு செலவிட்டு வருகிறது. விடுதலைப்புலிகள் பின்வாங்கும் வியூகத்தில் ஈடுபட்டதால் கிழக்குப்பகுதியை விடுவிப்பதில் தாங்கள் எளிதாக ஈடுபட்டது போன்று, வட பகுதியில் போர் அவ்வளவு எளிதாக இருக்காது என்பதை அரசு உணர்ந்துள்ளது என்பதையே இந்த ஆயுதச் சேகரிப்புகள் காட்டுகின்றன.

ஆனால், புலிகள் என்ன வைத்திருக்கிறார்கள் என்பது, கேணல் தீபன் தலைமையிலான படையணி அவற்றைக் கவசவாகனங்களின்மீது பிரயோகிக்கும்போதுதான் ராணுவத்துக்குத் தெரியவரும்.

அடையாறில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் அந்த டிராவல் ஏஜன்ஸி அலுவலகம் அமைந் திருந்தது. அங்கே ரங்கன் தென்பட்டவுடனே தகவல் கிடைத்துவிட்டதில் சிறப்புப் புல என்பதை முதலில் கண்டுபிடித்தனர். இப்போது அகப்பட்ட ஜீப் உட்பட 4 மாருதி ஜிப்ஸி ஜீப்களை வாங்க, சேலம் மாவட்டம் மேட்டுரைச் சேர்ந்த பஸ் அதிபர் தனசேகரன் என்பவர் ஏற்பாடு செய்திருந்தது தெரியவந்தது.

ராஜிவ்காந்தி கொலையின் மர்மங்கள்

அத்தியாயம்27

னாய்வுக்குழு உடனே ஒரு தேடுதல் குழுவை ஆயுதங்கள் சகிதமாக அனுப்பி வைத்திருந்தது. முதலில் டிராவல் ஏஜன்சி இருந்த கட்டடம் சாதாரண உடையிலிருந்த தேடுதல் குழு ஆட்களால் சுற்றி வளைக்கப்பட்டது. கட்டடத்தில் ஒவ்வொரு வாயிலிலும் இரண்டு ஆட்கள் யாரும் வெளியேற முடியாதபடி கவர் எடுத்தபடி நின்றிருந்தனர்.

ஏற்பாடுகள் எல்லாம் சரி என்று ஆளாளுக்கு ரேடியோ மூலம் தெரியப்படுத்தப்பட்டவுடன், டிராவல் ஏஜன்சியின் கதவைத் திறந்துகொண்டு அதிரடியாக நுழைந்தனர் இருவர். ஆனால் உஷாராக இருந்த ரங்கள் எப்படியோ அலுவலகக் கதவின் ஊடாக இந்த இருவரது பிடியிலிருந்தும் தப்பி, அலுவலகத்துக்கு வெளியே யிருந்த நடைபாதையில் ஓடத் தொடங்கிவிட, அங்கே பரபரப்பான ஒரு துரத்தல் நடைபெற்றது. அதுவரை மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கிகளை வெளியே எடுத்தவாறே ரங்கனைத் துரத்தியது தேடுதல் குழு.

இறுதியில், சிறப்புப் புலனாய்வுப்படையின் தேடுதல் குழு, ஹொலிவுட் திரைப்படப்பாணியில் துரத்திச் சென்று ஒருவழியாக ரங்கனைப் பிடித்துவிட்டது. அவர் சயனைட் குப்பியை மெல்ல முயலுவதற்கு முன், அதைப் பறித்தும் விட்டது.

மறுநாள் காலை விடிவதற்குள் உள்ளூரில் இருந்த வாகனங்கள் பழுது பார்க்கும் கராஜில் விடப்பட்டிருந்த அவரது மாருதி ஜிப்ஸி ஜீப்பைக் கைப்பற்றியது புலனாய்வுக்குழு. அந்த ஜீப்பை ஆராய்ந்து, அதை வாங்குவதற்கு முதலில் பதிவு செய்திருந்த நபர் யார்



பத்மநாபா

அவற்றில் சில ஏற்கெனவே போராளி அமைப்பினரிடமிருந்து கைப்பற்றப்பட்டு, தமிழகப் பொலிசார் வசம் இருந்தன.

ரங்கனைக் கைது செய்த பின்னர்தான், சிவராசன், சுபா, நேரு ஆகியோரை சென்னையிலிருந்து பெங்களூருக்கு திருச்சி சாந்தன் எவ்வாறு அனுப்பிவைத்தார் என்பது சிறப்பப் புலனாய்வுக் குழுவினருக்குத் தெரிய வந்தது. மேட்டூரைச் சேர்ந்த ராஜீ என்பவரின் டாங்கர் லொறிக்குள் சிவராசன், சுபா, நேரு ஆகியோரை அமரச்செய்துள்ளார் திருச்சி சாந்தன். சென்னையிலிருந்து பெங்ளூருக்கு எந்த இடத்திலும் பொலிஸ் சோதனைக்குச் சிக்காமல் அந்த டாங்கர் லொறி சென்றுவிட்டது. அந்த லொறியில் ராஜீவும், அதன் சாரதியும் சென்றுள்ளனர். சிவராசன் குழுவினரை எதிர்கொண்டு வரவேற்பதற்காக, திருச்சி சாந்தனும், இரும்பொறையும் பெங்களூரில் காத்திருந்தனர்.

அந்த டாங்கர் லொறியில் ரங்கனுடன் இருந்தவர் அவரது நண்பரான விக்கி. இவர் ஜுலையில் கோயமுத்தூரில் கைது செய்யப்பட்டார். ஆனால், சிவராசன் குழுவினர் பெங்களூருவுக்குத் தப்பிச் செல்ல உதவியது பற்றி, சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் விக்கி எதுவும் கூறவில்லை. ரங்கன் கைதுக்குப் பின், விக்கியை விசாரித்தபோது ரங்கன் சொன்னதெல்லாம் உண்மைதான் என ஒப்புக்கொண்டார். விக்கி அப்போது கோயமுத்தூர் ஆயுதத் தளவாட ஆலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

ரங்கன் சொன்ன தகவலையடுத்து, விக்கியும், ராஜிவ்காந்தி கொலை வழக்கில் எதிரியாகச் சேர்க்கப்பட்டார் என்றாலும், விக்கி கொடுத்த தகவல்கள்தான் சிறப்பப் புலனாய்வுக் குழுவினரை முதலில் பெங்களூருருக்குத் தேடுதல் வேட்டைக்காக அனுப்பி வைத்திருந்தது. விக்கி விசாரணையின்போது எதையும் கூறாது விட்டிருந்தால், பெங்களூர் தொடர்புகள் எதுவும் தெரியாத நிலையில் சிறப்புப் புலனாய்வுக்குழு தமிழ்நாட்டுக்குள்ளேயே சுற்றிச்சுற்றித் தேடிக்கொண்டிருந்திருக்கும். இந்திரா நகரில் திருச்சி சாந்தனின் மறைவிட வீட்டில் அதிரடி நடவடிக்கை எடுக்கக் காரணமே விக்கி விசாரணையின்போது கூறியிருந்த தகவல்கள்தான்.

இதற்கிடையே ஓராண்டாகத் துப்புத் துலங்காமல் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா கொலை வழக்கில், சிறப்புப் புலனாய்வுக்குழு ராஜிவ் காந்தி வழக்கில் சுதந்திர ராஜாவைக் கைது செய்ததையடுத்து மர்ம முடிச்சு அவிழ்ந்தது. வேறு எதையோ தேடப்போய் வேறு எதுவோ கிடைத்ததுபோலக் கிடைத்த துப்பு அது. பத்மநாபா கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக திருச்சி சாந்தனை தமிழக பொலிஸ்



அறிவித்தது. எனினும், அவரைக் குற்றவாளியாக சிறப்புப் புலனாய்வுப்படை அந்த நேரத்தில் அறிவிக்கவில்லை. அமைதியாக இருந்து அவரைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்பதே சிறப்புப் புலனாய்வுக்குழுவின் திட்டமாக இருந்தது.

முன்னதாக, சிறப்புப் புலனாய்வுக்குழு தொடர்பு கொண்டிருந்த திராவிடர் கழகப் பிரமுகர் மூலமாக. சிவராசனை உயிருடன் பிடிக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்தியது சிறப்புப் புலனாய்வுக்குழு. ராஜிவ் கொலை வழக்கில் சிறப்புப் புலனாய்வுக் குழுவால் தேடப்பட்ட முக்கிய ஆட்கள் எல்லோரும் சயனைட் அருந்தித் தற்கொலை செய்தவிட்டிருந்த நிலையில் குறைந்தபட்சம் திருச்சி சாந்தனையாவது உயிருடன் பிடிக்க வேண்டும் என்பதே புலனாய்வுக்குழுவின் எண்ணம்.

திருச்சி சாந்தன், தமிழகத்தில் போராளி அமைப்பின் அரசியல் அணியின் தலைவராக இருந்தார். தமிழகத்தில்

உளப்பிரிவுத் தலைவராக இருந்தவர் சிவராசன். இருவருமே ஒருவரை ஒருவர் சார்ந்திருக்காமல் தனித்தே செயல்பட்டு வந்தனர். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து அதிமுக்கிய உத்தரவு இல்லாமல் சிவராசனைக் காப்பாற்றும் நடவடிக்கையில் திருச்சி சாந்தன் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை என்று நினைத்தது புலனாய்வுப் பிரிவு. திருச்சி சாந்தனை உயிருடன் பிடித்தால், ராஜிவ்காந்தி கொலையில் போராளி அமைப்புக்கு உள்ள தொடர்பு குறித்து நேரடி சாட்சியம் தங்களுக்குக் கிடைக்கும் என்பதால் திருச்சி சாந்தனைப் பிடிக்க மிக ஜாக்கிரதையாக வலை விரித்தது சிறப்புப் புலனாய்வுப்பிரிவு.

ஏற்கனவே, குறிப்பிட்டதுபோல, திருச்சி சாந்தன் தலைமறைவாகியிருந்தார். அவருக்கு உதவியாக 3 போராளிகள் மட்டுமே இருந்தனர். அவர்களுக்கு இருந்த பிரச்சினை, பொது இடங்களில் பேசும்போது அவர்களது இலங்கைத் தமிழ் உச்சரிப்புக் காட்டிக்கொடுத்துவிடும் என்பதுதான். திருச்சி சாந்தனுக்கு உதவியாக இரும்பொறை என்ற விசுவாசியான இந்தியரும் கூடவே இருந்தார். கோயமுத்தூரில் ஜூலையில் டிக்சன் தற்கொலை செய்துகொண்டபோது, அவர் வசமிருந்த திருச்சி சாந்தனின் வயர்லெஸ் சாதனமும், ரகசியக் குறியீட்டுக் காகிதங்களும் அழிக்கப்பட்டுவிட்டிருந்தன.

திருச்சி சாந்தன், சிவராசனிடமிருந்து பெற்றுக்கொண்ட மற்றொரு வயர்லெஸ் சாதனம், ஒகஸ்ட் மாதத்தில் கரூரில் வரதன் என்பவர் கைது செய்யப்பட்டபோது தமிழகப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுவிட்டது. எனவே, இப்போது திருச்சி சாந்தனிடம் வயர்லெஸ் சாதனம் எதுவுமில்லை. ரகசியக் குறியீட்டுக் காகிதங்களும் இல்லை. பணமும் இல்லை. ஏற்கெனவே அனுபவித்து வந்ததைப்போல உதவியோ, ஆதரவோ, தங்குவதற்கு இடவசதியோ கிடைக்காது என்பதைச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு புரிந்து வைத்திருந்தது.

போராளி அமைப்புக்கு எதிராக இந்திய அரசு குறிப்பாக தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்குக் காரணம். இதைவிட மோசமானது யாழ்ப்பாணத்திலுள்ள தலைமையுடன் தொடர்புகொள்ள திருச்சி சாந்தனால் முடியாமல்போனதுதான். எனவே, யாழ்ப்பாணத்துக்கு ஒரு நபரை அனுப்பி, தற்போதைய நிலவரத்தை விளக்க வேண்டும். ஒரு வயர்லெஸ் சாதனம், அதை இயக்குவதற்கு ஒரு திறமைசாலி, மற்றும் தமிழகத்தில் போராளி அமைப்பின் நடவடிக்கைகளைத் தொடரு வதற்குத் தேவைப்படும் பணம், ஆகியவற்றைக் கேட்க வேண்டும் என முடிவு செய்தார் திருச்சி சாந்தன்.

இதற்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பத் தேர்வு செய்யப்பட்டவர் இந்தியப் பிஜையான இரும்பொறை.

போராளி அமைப்பின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு திருச்சி சாந்தன் ஒரு கடிதம் எழுதினார். செப்டெம்பர் 9ம் திகதியிட்ட கடிதம் அது. யாழ்ப்பாணத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், யாரைச் சந்திக்கவேண்டும், எப்படிச் சந்திக்க வேண்டும் என்பதை விளக்கி இரும்பொறைக்கு சில குறிப்புக்களையும் எழுதினார். யாழ்ப் பாணத்திலுள்ள தலைமையில் எவற்றைச் சொல்ல வேண்டும், எவற்றைச் சொல்லக்கூடாது என்பதுபோன்ற விவரங்கள் அந்தக் கடிதத்தில் இருந்தன.

ஒக்டோபர் 2ம் திகதி இரவு 11 மணியளவில் இரும்பொறையும் தமிழகத்தில் சிகிச்சை முடிந்த 8 போராளிகளும் தமிழகத்திலுள்ள கரையோரக் கிராமமான வில் ஊன்றித் தீர்த்தம் என்ற இடத்திலிருந்து படகில் புறப்பட்டனர். ஆனால், அடுத்த சில மணித் தியாலங்களில், அந்தப் படகை இந்தியக் கடலோரக் காவல்படையினர் மறித்தி நிறுத்தினர்.

படகில் இருந்த 8 போராளிகளில் 3 பேர் சயனைட் குப்பியை மென்றனர். இவர்களில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றொருவர் கவலைக் கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். இரும்பொறை கைது செய்யப்பட்டார். திருச்சி சாந்தன் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக்கு எழுதிய கடிதமும், இரும்பொறைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த விரிவான குறிப்புக்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தக் கடிதமும் குறிப்பும்தான், ராஜிவ்காந்தி கொலையில் போராளி அமைப்புக்கு இருந்த தொடர்பை சட்டரீதியாகக் காட்டும் எனவும், சர்ச்சைக்கு இடமில்லாத சந்தர்ப்பச் சாட்சியச் சான்றுகளாக விளங்கின எனவும் புலனாய்வுக்குழுவால் கருதப்பட்டது.

இரும்பொறையை புலனாய்வுக் குழு தங்கள் பாதுகாப்பில் எடுத்து விசாரித்தபோது, சிவராசன், சுபா, நேரு ஆகியோரை ராஜீ தனது டாங்கர் லொறியில் பெங்களூருக்கு அழைத்து வந்தபோது, தானும் பெங்களூரில் இருந்ததாக இரும்பொறை தெரிவித்தார். மேலும் விசாரணையின்போது, போராளி அமைப்பு இந்த முறை மிகப்பாரிய இலக்கை (ஆளை) குறி வைத்திருப்பதாக, ராஜிவ்காந்தி கொலைக்கு முன், திருச்சி சாந்தன் தன்னிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் தமிழ் தேசிய மீட்புப் படை என்ற அமைப்பின் தலைவர் ரவி. இதன் உறுப்பினர்களான சுசீந்திரன், சங்கரமூர்த்தி, மோகன் ஆகியோர் இலங்கையில் போராளி அமைப்பிடம் கெரில்லாப் போர்முறை பயிற்சி பெற்ற முதலாவது இந்தியத் தமிழ் அணியினரில் அடங்குவர் என்று தமிழகக் காவல்துறையின் உளவுப்பிரிவால் கூறப்பட்டது. ரவி

மற்றும் சில இளைஞர்களுடன் 1990 டிசம்பரில் யாழ்ப்பாணத்தில் பயிற்சியை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார் என்பதும் தமிழக உளவுப்பிரிவால் கொடுக்கப்பட்ட உளவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ரவி யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்ற வேளையில், இந்த முறை தமிழகத்தில் பத்மநாபாவைவிட மிகப்பெரிய புள்ளியைக் குறிவைத்திருப்பதாக போராளி அமைப்பின் முக்கிய பிரமுகரால் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இலக்கு யாரென்று ரவிக்குக் கூறப்பட்டிருக்கவில்லை. இந்தத் திட்டத்துக்காக தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதுடன் சிவராசனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் ரவியிடம் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறப்பட்டிருந்தது.

ரவியின் முக்கியப் பணி தமிழ்த் தேசிய மீட்புப்படையின் கிளைகளை தமிழகத்தில் அமைப்பது. இதற்கான நிதியுதவியை சிவராசன் அளிப்பார். தமிழகக் கடலோரப் பகுதிகளில், போராளி அமைப்பின் படகுகள் வந்து செல்வதற்கான இடங்களைக் கண்டறியும் பொறுப்பும் ரவியிடம் விடப்பட்டது. சிவராசன் இறப்பதற்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து அவருக்கு அனுப்பப்பட்டிருந்த ரகசியக் குறியீட்டுச் செய்தியில், 'ரவியின் ஆட்களைப் பாதுகாக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தது. இந்த ரகசியச் செய்தி, இந்திய உளவுத்துறையினால் இடைமறிக்கப்பட்டுப் பெறப்பட்டு டிகோட் செய்யப்பட்டுமிருந்தது.

மார்ச்சில், தமிழ்த் தேசிய மீட்புப்படையைச் சேர்ந்த சுகுமார், திருநாவுக்கரசு ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் திரும்பினர். இந்த இருவரும் வயர்லெஸ் சாதனங்களை இயக்கவும், நவீன ஆயுதங்களையும் வெடிபொருள்களைக் கையாளவும் தீவிரப் பயிற்சி பெற்றிருந்தனர். சிவராசனுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் ரவி. பல்வேறு செலவுகள், முதலீடுகளுக்காக ரவியிடம் சுமார் 10 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்திருந்தார் சிவராசன்.

கண்ணியூரில் தனது ஆதரவாளர் வீட்டை வாடகைக்கு எடுத்திருந்த ரவி, அங்கிருந்து தனது வயர்லெஸ் சாதனத்தை இயக்கி வந்தார். அவரது கூட்டாளிகள், முன்கூட்டியே திட்டமிட்டு ஏதாவது ஓர் இடத்தில் அவ்வப்போது சந்தித்துக்கொண்டனர்.

ராஜிவ்காந்தி கொலைக்குப் பின், தப்பிச்செல்வதற்காக கடலோரப் பகுதிகளில் வழித்தடங்களை ஆராயுமாறு ரவியைப் பணித்திருந்தார் சிவராசன். ஜூன், ஜூலையில் சிறப்புப் புலனாய்வுப்படையின் நிர்ப்பந்தம் அதிகரித்ததும், காந்தன், ரமணன் மற்றும் தனது வயர்லெஸ் சாதனத்துடன் சென்னை வட பழநியில் உள்ள ஒரு வீட்டுக்கு மாறிச் சென்றார். ஜூன் இரண்டாவது வாரம்,



சென்னை கொட்டிவாக்கத்தில் சிவராசனை காந்தனுடன் கடைசி முறையாகச் சந்தித்தார் ரவி.

திருச்சி சாந்தனைப் பயன்படுத்தித் தப்பிச் செல்லும் திட்டத்தை ரவியிடமோ அல்லது காந்தனிடமோ தெரிவிக்க வேண்டாம் என, சிவராசனுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உளவுப் பிரிவின் தலைமையால் கூறப்பட்டிருந்தது. ஜூன் மூன்றாவது வாரத்திலிருந்து ரவியும், காந்தனும் சிவராசனுடனான தொடர்பை இழந்தனர். எனினும், யாழ்ப்பாணத்துடன் ரவி அப்போதும் நேரடியாகத் தொடர்பு வைத்திருந்தார்.

ஜூலை கடைசி வாரத்தில், ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தேடப்படும் நபர்கள் என காந்தன் மற்றும் டிக்சனின் புகைப்படங்களைச் சிறப்புப் புலனாய்வுப்படை வெளியிட்டதும் காந்தன் பீதியடைந்தார். மனம் உடைந்துபோனார். சிவராசனுக்கு உதவுவது பற்றி மட்டுமே யாழ்ப்பாணத்திலுள்ள உளவுப்பிரிவின் தலைமை கவலைப்படுவதாக அவர் கருதினார்.

இதற்கிடையே, தனது வயர்லெஸ் சாதனத்தை இயக்குவதற்காக திண்டுக்கல்லில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தார் ரவி. கண்ணியூரில் உள்ள வீட்டு உரிமையாளர் தனது வீட்டில் வயர்லெஸ் சாதனத்தைப் பயன்படுத்துவதற்கு ஆட்சேபம் தெரிவித்ததே இதற்குக் காரணம். திண்டுக்கல்லில் இருந்தவாறே யாழ்ப் பாணத்துடன் ரவியால் தொடர்புகொள்ள முடிந்தது. சிவராசன், சுபா ஆகியோர் மரணமடைந்த ஒரு வாரத்துக்குப் பின்னர் ஒகஸ்ட் 27ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படகு அனுப்பப்பட்டது. அந்தப்படகில் ஏறி ரவி, காந்தன், காந்தனின் வயர்லெஸ் இயக்குபவர் ரமணன் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்குத் தப்பிச் சென்றனர்.

(தொடரும்)



ஈராக் வடக்குப் பகுதி நகரங்களில் ஈராக்கிய ராணுவம் ரோந்து சுற்றிவரும் தனது கண்காணிப் பைப் பலப்படுத்தியிருந்தது. அப்போது, இரண்டு வாகனங் கள் முழுவதும் ஆயுதங்களோடு தீவிரவாதிகள் செல்வதை கேணல் ஹாஜி அல்-சிபரி கண்டு துரத்திச் சென்றார். இதைக் கவனித்துவிட்ட தீவிரவாதிகள் வண்டியின் சார தியும் அதில் சென்றவர்களும் வீதியில் குதித்து தாறுமாறாகத் தப்பி ஓடினர். பொலிசார் மீதும் துப்பாக்கியால் சுட்டனர். பின்னர் நகருக்குள் புகுந்து மக்களோடு மக்களாக தலைமறைவாகி விட்டனர்.

ஈராக்கிய ராணுவப் பிரிவின் இரண்டாவது டிவிசனின் இரண்டாவது பிரிகேட் உயர்நிலை அதிகாரியாகவிருக்கும் சிபரி, தீவிரவாதிகள் விட்டுச் சென்ற அந்த வாகனத்தை நகரின் மேற்கு எல்லைக்கு ஓட்டிச் சென்றார். அதன்மீது பெட் றோல் ஊற்றி எரிய வைத்தார். 'தீவிரவாதி களிடமிருந்து மீட்கப்படும் ஆயுதங்களையும், பிற பொருள்களையும் இப்படித்தான் நாங்கள்

ஆயுதங்கள் இருக்கின்றன... ஆனால் இயங்குவதில்லை!

அழிக்கிறோம்,'' என்கிறார்.

தீவிரவாதிகளை அழிக்கும் செயலில் ஈடுபட்டுள்ள ஈராக்கியர்களைப் பற்றி அமெரிக்க ராணுவ அதிகாரி கள், குறிப்பாக சிபரி தலைமையில் ராணுவ வீரர்கள் மிகத் திறமையாகச் செயல்படுகின்றனர். ஈராக் ராணுவ வீரர்கள் தாங்களாகவே சோதனைச் சாவடி களை அமைத்துள்ளனர். கண்காணிப்பு வேலைகளை மேற்கொண்டு செயல்படுகின்றனர். உளவுத் தகவல் களையும் சேகரிக்கின்றனர். ஈராக்கியர்களின் போக்கு அமெரிக்க ராணுவத்தின் திட்டத்திலிருந்து வேறுபட்டு உள்ளது என்று ஒப்புக் கொள்கின்றனர்.

ஆனால், முன்னேற்றம் என்பது நீண்ட காலமாக இழுத்துக் கொண்டு ஏற்றுக் கொள்கின்றனர்.

ஈராக்கில் உள்நாட்டுக் கலவரங்களை அடக்குவதற்கு ஈராக்கிய ராணுவம் முழு தகுதியும், திறமையும் பெற்றிருந்தால், உடனே அமெரிக்க ராணுவப் படைகள் வாபஸ் பெற்றுவிடும் என்று அமெரிக்க புஷ் நிர்வாகம் கூறுகிறது.

2003ம் ஆண்டில் கூட்டணி அதிகார உத்தரவின் கீழ் ஈராக்கியப் படைகள் கலைக்கப்பட்டன. அதன்பின் தற்போது புதிய ஈராக்கிய ராணுவம் தங்களது சொந்த நிலையை ஏற்படுத்திக் கொள்ளப் போராடுகிறது. ஈராக்கியப் படைகளுக்கு நீண்ட காலமாகப் பயிற்சிகள் வழங்காமல் மறுக்கப்பட்டுள்ளது. ஊழல், ஆயுதங்கள் பற்றாக்குறை மற்றும் கலவரத்தால் ஏராளமான ஈராக் கிய ராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதுபோன்ற காரணங்களால் ஈராக் கிய ராணுவம் போதிய பயிற்சி இன்றித் தவிக்கிறது. "ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, புதியதாகப் பிறந்த ஈராக்கிய ராணுவம் தனது சொந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்த வந்துள்ளது" என்று அமெரிக்க கொமாண் டோக்கள் கூறுகின்றனர்.

மொசூல் நகரில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள்

கலந்து வசிக்கின்றனர். இங்கு இனக்கலவரம் அடிக்கடி நடக்கிறது. இவர்களைக் கட்டுப்படுத்த அமெரிக்கப் படைகளைவிட உள்ளூர் ஈராக்கிய ராணுவ வீரர்கள் அதிகமாகக் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நகரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள் என்று அனைவரிடமும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. மொசூல் நகரில் இதுவரை ஈராக்கிய ராணுவத்தினர் மேற்கொண்ட செயல்களைக் கவனித்தபோது, அவர்கள் கூடுதல் கவனத்தோடு செயல்படுகின்றனர், முன்னெச்சரிக்கையோடு உள்ளனர். இருந்தாலும் இடைவெளி வித்தியாசத்தில் சிக்கித் தவிக்கின்றனர் என்று தெரிகிறது.

இதுகுறித்து அமெரிக்க கொமாண்டோக்கள், "மொசூல் நகரில் உள்ள ஈராக் படைகள் கண்காணிப்பு உட்பட அடிப்படையில் என்ன செய்ய வேண்டுமோ அந்தச் சோதனைகளையே செய்கின்றனர். மிகக்குறைந்த படைகளுடன் சென்று ரெய்ட் நடத்துகின்றனர். இதற்கு முன் ஈராக் படைகள் செயல்பட்டது போல அல்லாமல், மொசூல் பாட்டாலியன்களிடம் கடமையைக் கைவிடும் மனப்பாங்கு மிகவும் அரிதாக உள்ளது. உளவுத் தகவல்களின் அடிப்படையில் விரைந்து செயல்படுகின்றனர். அமைப்பின் செயல்பாடுகளில் பிரச்சனை மற்றும் ஆயுதங்கள் குறைபாடு ஆகியவை முழுமையான செயல்பாடுகளையே சீர்குலைக்கிறது. குர்த் மற்றும் சன்னி அரேபியர்களுக்கு இடையே குறிப்பாக பாக்தாத், தியாலா, அன்பர் மற்றும் சலாகுதீன் மாகாணங்களில் கலவரக்காரர்கள் மீண்டும் ஒன்றாக இணைந்து மிரட்டுகின்றனர். ஈராக்கிய ராணுவப் பிரிவு மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு இடையே சம அந்தஸ்தில் தலைவர்கள் இல்லாததால், மோசமான தகவல் தொடர்பு இன்னும் பிரச்சனையாக உள்ளது. மொசூல் ராணுவப் பிரிவில் உள்ள சில கொமாண்டோக்கள், தங்களது ராணுவ வீரர்கள் அடங்கிய குழுவைப் போருக்குத் தலைமை தாங்கிக் கொண்டுசெல்ல விருப்பமில்லாமல் இருக்கின்றனர்" என்று புகார் கூறுகின்றனர்.

பாக்தாத், தியாலா மாகாணங்களில் ராணுவப் படைகளை அதிகரிப்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால், மொசூல் நகரில் குறைந்த அளவு படைகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட முடியும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது. மொசூல் நகரில் 750 அமெரிக்க ராணுவ வீரர்கள் மட்டுமே தற்போது உள்ளனர். அதேநேரத்தில் சிரியா நாட்டு எல்லையான நிவே மாகாணத்தில் மொத்தம் 2000 பேர் மட்டுமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பதற்றம் நிலவியது. அதேபோல நிவே மாகாணத்திலும் பல்வேறு பிரிவு மக்கள் வாழ்கின்றனர். இங்கு கிறிஸ்தவர்கள், யாசிதிர்கள் மற்றும் பல்வேறு மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். இங்கு கலவரம் மற்றும் வன்முறைகள் நிகழாதவாறு உள்ளூர் மக்களே பாதுகாப்புக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். சன்னி விழிப்புணர்வுக் குழு என்று இவர்களை அழைத்தனர். இவர்கள் ஈராக்கில் பரவலாக வன்முறை நிகழாமல் தடுத்தனர்.



மொசூல் நகரில் உள்ள ஈராக் படைகள் கண்காணிப்பு உட்பட அடிப்படையில் என்ன செய்ய வேண்டுமோ அந்தச் சோதனைகளையே செய்கின்றனர். உளவுத் தகவல்களின் அடிப்படையில் விரைந்து செயல்படுகின்றனர். அமைப்பின் செயல்பாடுகளில் பிரச்சனை மற்றும் ஆயுதங்கள் குறைபாடு ஆகியவை முழுமையான செயல்பாடுகளையே சீர்குலைக்கிறது.

மொசூல் நகரில் கலவரம் ஏற்படுத்துவது என்பதை வன்முறையாளர்கள் தொடர்ந்து கையாண்டு வந்தனர். இதுகுறித்து கடந்த ஜனவரி மொசூல் நகருக்கு வந்த இன்வன்ட்ரி ரெஜிமென்ட் ராணுவ உளவு அதிகாரி கப்டன் பாட்ரிக் ரியான், ''ஹாடிதா ஆற்றுப் பள்ளத்தாக்கு வழியாக தியாலா மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஏராளமானோர் பாய்ஜி, சர்க்கத் நகரிலிருந்து மொசூல் நகருக்கு வருகின்றனர்'' என்று கூறியிருந்தார்.

தியாலா நகரிலிருந்து தொடர்ந்து எச்சரிக்கைகள் வந்து கொண்டே இருந்தன. மொசூல் நகரில் தீவிரவாதிகள் ஏராளமானோர் இருந்து கொண்டே கலவரத்தில் ஈடுபட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டனர். மேற்கு மொசூல் நகருக்கு அருகே உள்ள ஜன்சாலியில் அப்பகுதி மக்களை அச்சுறுத்துவதற்காக ராணுவத்தைச் சேர்ந்தவர்களை அடிக்கடி கொன்று தூக்கில் தொங்க விட்டனர். அதேபோல மற்றுமொரு பயங்கரத் தாக்குதல் கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் அமெரிக்க ராணுவ வீரர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. 21 நிமிடங்களாக தாக்குதலைக் கண் முன்னே கொண்டு வந்தது அந்த வீடியோப் பதிவு.

கிழக்கு மொசூல் நகரின் ஈராக் பட்டாலியன் ராணுவ கொமாண்டர் கேணல் அலி ஓமர் அலி, ''அமெரிக்கர்கள் இல்லாமல், ஈராக்கியர்களால் ராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்கின்றனர். அவ்வாறு அவர்கள் கூறுவது பொய். அமெரிக்கர்கள் இல்லாமல் ஈராக்கைக் கட்டுப்படுத்துவது என்பதை எங்களால் நினைத்துப் பார்க்க முடியாது,'' என்றார்.

மொசூல் நகரில் பணிபுரியும் அமெரிக்கப் படைகள் அரண்போல சோதனை மையங்களை அமைத்துச் செயற்படுகின்றன. நகரின் பதற்றமான குறிப்பிட்ட சில பகுதிகளில் அவுட்போஸ்ட்களை அமைத்துச் செயற்படுகின்றனர். இதற்கு முன் தல் அபர் மற்றும் பாக்தாத் போன்ற நகரங்களில் இதுபோன்ற சோதனைச் சாவடிகள் மற்றும் அவுட்போஸ்ட்களை அமைத்து தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியிருந்தனர். மேலும், கார் குண்டுகளையும் அப்புறப்படுத்தியிருந்தனர். அந்த ஐடியாவையே தற்போது மொசூல் நகரில் பின்பற்றுகின்றனர். மொசூல் நகரில் அமைக்கப்பட உள்ள அவுட்போஸ்ட் பாதுகாப்பு மையங்கள் நகரில் புதிய பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்தும். தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும். ஊடுருவலைத் தடுக்கும். ஈராக் ராணுவ வீரர்கள் பற்றாக் குறையைச் சமப்படுத்தும்.

இந்நிலையில், நினைவே பகுதியில் ஒப்பரேஷனல் கொமாண்டன்டை அமைக்கத் திட்டமிடப்பட்டது. ராணுவ வீரர்கள், பொலிசார் மற்றும் எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் இந்த கொமாண்டன்டில் இடம்பெற்றிருந்தனர். கடந்த ஆண்டு பாக்தாத் நகரில் 9வது ஈராக் ராணுவ டிவிசனின் முன்னாள் கொமாண்டர் மேஜர் ஜெனரல் ரியாத் ஜலால் தாபிக் என்பவரை பிரதமர் நூரி கமல் அல்-மாலிக் இதற்காக அனுப்பி வைத்தார்.

மொசூல் நகரில் மட்டுமல்ல பொதுவாகவே ஈராக்கிய ராணுவத்தின் தன்னம்பிக்கையை அதிகரிப்பது மற்றும் ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றியைப் பெறுவதற்காக ஈராக்கிய ராணுவத்துடன் ஈராக்கிய பொலிஸ் மற்றும் கூட்டணிப் படைகள், எல்லைப் பாதுகாப்பு படைகள் ஆகியோருடன் இணைந்து தோளோடு தோளாக நின்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகரின் மேற்குப் பகுதியில் அமெரிக்கப் படைகள் ஏற்கனவே ஒரு டசின் சோதனை மையங்களை அமைத்துள்ளன. அதேபோல இன்னும் பல சோதனை மையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சோதனை மையங்கள் மற்றும் அவுட்போஸ்ட்கள் அமைக்கும் வேலை முடிந்தபிறகு, ஈராக்கிய ராணுவம் நகரைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடும் என்பதே அங்கிருக்கும் நம்பிக்கை.

ராணுவ அதிகாரங்களை ஈராக்கிய ராணுவத்திடம் விட்டுக் கொடுக்க அமெரிக்கப் படைகள் மீண்டும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவுட்போஸ்ட் அமைப்பது தொடர்பாக ஈராக் ராணுவ வீரர்களுடன் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் அடிக்கடி பேச்சு வார்த்தை நடத்திவருகின்றனர். அதுபோன்ற ஒரு கூட்டம் கடந்த வாரம் நடந்தது.

ஈராக்கிய ராணுவ 2வது டிவிசனின் மலைப்பகுதி தலைமையகத்தில் உள்ள டைகர் தளத்தில் அதிகாரிகள் விவாதித்தனர். அவுட்போஸ்ட் அமைப்பது குறித்தும், ஈராக் கொமாண்டர்களிடம் தங்களது திட்டங் களை விளக்குவது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. கூட்டத்திற்கு முன், 1-8 இன்வன்ட்ரி பட்டாலியன் கேணல் கிறிஸ் ஜோன்சன் மற்றும் பிற அமெரிக்க அதிகாரிகள், ஈராக்கிய கொமாண்டர் பிரிகேடியர் ஜெனரல் முட்டா அல்காஜ்ராஜி மற்றும் அதிகாரிகளிடம் தங்கள் திட்டம் குறித்து விளக்கினர்.


காஜ்ராஜியைவிட அமெரிக்கர்கள் மூர்க்கத்தனமாக தங்கள் கருத்துகளை வலியுறுத்திப் பேசினர். அப்போது அமெரிக்க ஜெனரல் புகாராகக், ''எங்களிடம் எரிபொருள் குறைவாக உள்ளது. சீருடைகள், நன்கு செயல்படும் வாகனங்களும் குறைவாகவே உள்ளன. எங்களது வீரர்களிடம் போதிய அளவுக்கு ஆயுதங்கள் உள்ளன. ஆனால், முன்னாள் சோவியத் குடியரசு மற்றும் சீனா ஆகியோரிடமிருந்து வாங்கிய ஏகே-47 ரக துப்பாக்கி ஆயுதங்களால் குழப்பம் அடைந்துள்ளனர். அவை திறமையாக இயங்குவதில்லை.'' என்றார்.

இதற்கு காஜ்ராஜி, ''ஈராக்கின் உள்நாட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக ஈராக்கியர்கள் அதிகப் பொறுப்புகளை ஏற்கின்றனர். ஆனால், பெரும்பாலும் காலதாமதமாகவும், இக்கட்டான சூழ்நிலையிலும் பொறுப்புகளை ஏற்கின்றனர்,'' என்றார்.

''இதேபோன்ற நிலை தான் எங்களுக்கும் உள்ளது. எங்களது ஹம்வீ வாகனம் அழிக்கப்பட்டால், அதனை மாற்றுவதற்கு மிக நீண்ட காலம் ஆகும். அதனால், என்னை மன்னித்துவிடுங்கள், கேணல். ஆனால், உங்களிடம் ஏராளமான வாகனங்கள் உள்ளன. நீங்கள் உதிரிப் பாகங்கள் கேட்டால், புதிய பாகங்கள் கிடைத்து விடும். ஆனால் எங்களுக்கு பழைய பாகங்களே கிடைக்கிறது. குறிப்பாக எங்களது வாங்கனங்கள் 2000 அல்லது அதற்கு முன்பு உற்பத்தி செய்யப்பட்டவை. பெரும்பாலான நேரங்களில் அவை பொருந்துவதில்லை. மொத்தத்தில் எங்களால் அதனைத் திருத்தவும் முடியாது'' என்றார்.

இதற்கிடையே, மொசூல் நகர மேயரைச் சந்தித்து இப் பிரச்சனைக்குத் தீர்வாக நிதியை அதிகப்படியாக வழங்கும்படி அமெரிக்கர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். ஆனால், இதனை கஜராஜி திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. "மொசூல் நகரில் நடக்கும் இந்தப் போரில் நாம் எப்படி வெற்றி அடையப்போகிறோம்? தற்போது போலவே தற்காப்பு ரோந்துப் படைகளை அனுப்பி அடுத்த 10 ஆண்டுகள் இப்படியே இருப்பதா? இதுகுறித்து யோசித்து வாருங்கள். அடுத்த கூட்டத்தில் நிதானமாக விவாதிக்கலாம்" என்றார்.

மொத்தத்தில் அமெரிக்காவுக்குப் புதிதாக வரப்போதும் ஜனாதிபதி ஈராக்கிலிருந்து படைகளை வெளியேற்றினால் அங்கு நிலைமை மகா கவலைக்கிடமாகவே இருக்கும்.



மலைப்பகுதி தலைமையகத்தில் உள்ள டைகர் தளத்தில் அதிகாரிகள் விவாதித்தனர். அவுட்போஸ்ட் அமைப்பது குறித்தும், ஈராக் கொமாண்டர்களிடம் தங்களது திட்டங் களை விளக்குவது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. 1-8 இன்வன்ட்ரி பட்டாலியன் கேணல் கிறிஸ் ஜோன்சன் மற்றும் பிற அமெரிக்க அதிகாரிகள், ஈராக்கிய கொமாண்டர் பிரிகேடியர் ஜெனரல் முட்டா அல்காஜ்ராஜி மற்றும் அதிகாரிகளிடம் தங்கள் திட்டம் குறித்து விளக்கினர்

வெளிநாட்டவர்கள் கைகளில் இத்தாலிய உணவு

இத்தாலிய நாட்டவர் உணவை உயிர்போல நேசிப்பவர்கள். இத்தாலிய உணவுப் பதார்த்தங்களுக்கென தனியான மணமும், சுவையும் உண்டு. எந்தக் காரணத்திற்காகவும் இதை அந் நாட்டவர் அலட்சியமாகக் கருத மாட்டார்கள். உணவகங்கள் தயாரிக்கும் உள்நாட்டு உணவுப் பதார்த்தங்களுக்கென தனி பாரம்பரியம் உண்டு. இதற்கென தனி போட்டியே நடத்திப் பரிசு, விருதுகள் எல்லாம் கொடுப்பார்கள்.

இந்த வகையில் ரோமின் உயரிய கௌரவமிக்க கார்போனரா விருதை கடந்த மாதம் உணவுப் பதார்த்தங்கள் மற்றும் வயின் பற்றிய விமர்சகர் கம்பரோ ரோஸோ என்பவர் பெற்றார். இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது லாரக்அஞ்சலோ என்ற ரெஸ்டோரண்ட். இதன் தலைமை சமையல்காரர் அண்டிகோ ஃபோர்னோ ரொஸியோலி என்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

பாஸ்ட்டா, பிட்ஸாக்கள்தான் இத்தாலியின் பாரம்பரிய உணவு. இவற்றை இத்தாலியின் பாரம்பரிய மணமும், சுவையும் கொண்டதாக சமைப்பது அவ்வளவு எளித்தல்ல என்பது ரோஸோவின் கருத்து. ஏனெனில் இத்தாலியர்கள் தரத்தை சமரசம் செய்து கொள்ளாதவர்கள். எனவே, ஒருவரை சமையல்காரராக நியமிப்பதற்கு முன் அவருக்கு சமையலறையின் சிறிய சிறிய வேலைகளில் அனுபவத்தை ஏற்படுத்திப் படிப்படியாகத்தான் சமையல்காரர் பதவி கொடுப்பார்கள். ரோஸியோலி தனது 17 வயதில் பாத்திரங்கள் கழுபுபவராகவே நுழைந்தார்.

தற்போது 43 வயதை எட்டியிருக்கும் மற்றொரு சமையல்காரர் ஹாசன். பல இத்தாலி நாட்டைச் சேர்ந்த பாரம்பரிய சமையல் மாஸ்டர்களிடம் பயிற்சி பெற்றவர். சமைப்பது தனது உயிருடன் கலந்த



உன்னதமான தொழில் என்பது இவரது கருத்து. "உலகில் அழகானது எது என்றால் உணவுதான் என்பேன்" என்கிறார் இவர். ஒரு இத்தாலியரைப்போல இருக்கிறது இவரது கூற்று.


வெளிநாடுகளுக்குப் பிழைப்புத் தேடிச் சென்ற இத்தாலியச் சமையல்காரர்களிடம் அந்த நாட்டு மரபுசார்ந்த உணவுப் பதார்த்தங்களான பிட்ஸா, பாஸ்டா போன்றவற்றை எப்படி உள்ளூர் சுவை குன்றாமல் தயாரிப்பது என இப்போது ஏராளமான வெளிநாட்ட வர்கள் கற்றுக்கொண்டுவிட்டார்கள். இவர்கள் இத்தாலியர்களின் உணவகங்களில் இடம் பிடித்துக் கொண்டார்கள். வியர்வை சிந்திச் சொற்ப ஊதியத்திற்குச் சமையல் கட்டுகளில் உழைக்கும் வேலை இனி வேண்டாம் என இத்தாலியின் மண்ணின் மைந்தனர்கள் பெரும்பாலானோர் தங்கள் வேலையை உதறிவிட்டனர். இவர்களிடம் உதவியாளர்களாக இருந்து வேலை கற்றவர்கள் அவர்களது இடத்தைப் பிடித்துக்கொண்டனர். இப்படி வெளிநாட்டுச் சமையல்காரர்கள் இத்தாலியின் பெரும்பாலான உணவகங்களை ஆக்கிரமித்துக்கொண்டனர்.

முன்பிருந்த நிலவரம் இப்போது முற்றிலும் மாறிவிட்டது. இப்போதெல்லாம் இத்தாலிய உணவகங்களில் தட்டுக்கழுவுதல் சில்லறை வேலை செய்பவர் என வெளிநாட்டவர் ஒருவரைக்கூடப் பார்க்க முடியாது. கண்ணில் படும் உணவக ஊழியர்கள் எல்லோருமே சமையல் மாஸ்டர்களாகவே இருக்கின்றனர். எகிப் தியர்கள் இப்போது நன்றாக பிட்ஸா தயாரிக்கிறார்கள். பாரம்பரிய ருசி மாறாமல் பிட்ஸா தயாரிப்பதில் இவர்களை வெல்ல ஆளில்லை என்ற அளவுக்கு அவர்களது திறமை மிளிர்கிறது.

ஆனால், இப்போதுள்ள இத்தாலிய உணவகங்களில் வங்கதேசத்தவர், மொரோக்கோ நாட்டவர், டுனீசிய நாட்டவர்கள் போன்றவர்களைத்தான் அதிக எண் ணிக்கையில் வேலைக்கு அமர்த்தியிருக்கின்றனர்.

இது சமீபத்திய நிலவர மாற்றம். 1970களில் அதிக அளவில் சமையல் மாஸ்டர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி இத்தாலிய உணவு வகைகளை உலகறியச் செய்தனர். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. உள்நாட்டவரை மிஞ்சும் எண்ணிக்கையில் பிட்ஸா மாஸ்டர்கள் இத்தாலியில் கொடிகட்டிப் பறக்கின்றனர்.

உணவுப் பதார்த்தங்களில் என்னென்ன பொருட்கள் கலந்திருக்கின்றன என்று கேட்டுப் பார்த்துச் சாப்பிடுவதில் இத்தாலியர்களைப்போல யாரும் இருக்க முடியாது. பாரம்பரிய சுவை உள்ள பொருட்கள் வழக்கமாக விளையும் இடத்திலிருந்து தருவிக்கப்பட் டவைதானா என்றுகூட கேட்டறிந்துதான் சாப்பிடு



43 வயதை எட்டியிருக்கும் சமையல்காரர் ஹாசன். பல இத்தாலி நாட்டைச் சேர்ந்த பாரம் பரிய சமையல் மாஸ்டர்களிடம் பயிற்சி பெற்றவர். சமைப்பது தனது உயிருடன் கலந்த உன்னதமான தொழில் என்பது இவரது கருத்து

கிறார்கள். மணமும், சுவையும் மாறாதிருக்குமா என அறிய வாடிக்கையாளர்கள் சில சமயங்களில் கேட்கும் கேள்விகள் மிக தர்மசங்கடத்தை ஏற்படுத்துவதாக இருப்பதுண்டு.

அதிக சத்துகள் கொண்ட சமையல் பொருட்களை எளிதில் ஜீரணமடையக் கூடிய வகையில் சமைக்க வேண்டும் என்று வாடிக்கையாளர்களின் அதீத எதிர்பார்ப்பாக இருக்கிறது. இந்த உணவுப் பதார்த்தங்களைத் தயாரிப்பதில் ஏதாவது மாற்றம் செய்துவிட்டால் அது பெரிய அளவில் விவாதப் பொருளாகிவிடும். நாட்டின் கௌரவமே பாதித்து விட்டதுபோல ஓலமிடுவார்கள்.

எகிப்திய சமையல் மாஸ்டர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தால் அவர்கள் இத்தாலியப் பாரம்பரியச் சுவை மாறாமல் சமைப்பார்கள் என்பது ரோமின் அண்டை நகரமான டிரெஸ்டிவெரேயில் உள்ள ஷபாடினி உணவகங்களின் பங்குதாரர்களில் ஒருவரான பிரான்ஸிஸ்கோ ஷபாடினி என்ற 75 வயது முதியவரின் அனுபவக் கூற்று. இந்த உணவகங்களில் உள்ள சமையல் மாஸ்டர்களில் 10ல் 7 பேர் வெளிநாட்டவர் என்ற போதிலும் ரோமானியப் பாரம்பரியச் சுவையும் மணமும் கொண்ட பதார்த்தங்களை இங்கு மட்டுமே நம்பி உண்ண முடியும் என்பது அந்த நகர மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்தாக உள்ளது.

"இந்த உணவகங்களில் மட்டும் சுவை மாறாதிருப்பதன் ரகசியம் என்ன? சமையல் மாஸ்டர்கள் அனைவரும் உள்ளூர் சமையல் மாஸ்டர்களிடம் சுமார் 5 ஆண்டு வரைப் பயிற்சி பெற்றபின்பே வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் என்பதுதான். அனுபவம்

பேசுமல்லவா? அம்மாவின் கைப்பக்குவம் போல சமைக்க உள்ளூர் ஆசான்களிடம் பெற்ற அனுபவக் கல்வி கைகொடுப்பதுதான் இவர்களது வெற்றியின் ரகசியம். கைப்பக்குவம் மாறாதிருப்பதால்தான் என்னை இத்தனை வயது வரை முதலாளி அந்துஸ்து கொடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், வெளிநாட்டு சமையல் மாஸ்டர்கள் கள்ளக்கொப்பி பேர்வழிகள்தான். உண்மையான சுவையும், மணமும் அவர்கள் தயாரிக்கும் பதார்த்தங்களில் இல்லை என வேறு சிலர் வாதாடுகின்றனர். ஆக இது இப்படியே விவாதித்து க்கொண்டே போகும் அளவுக்கு அவ்வப்போது சர்ச்சையைக் கிளப்பிக்கொண்டே இருக்கிறது" என்கிறார் பிரான்ஸிஸ்கோ ஷபாடினி.



அபு மர்கியா என்ற இளைஞர் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தனது இத்தாலிய மாமி யாரிடம் பணத்தைக் கடனாக வாங்கி மிலான் நகரில் டா வில்லி என்ற தனது பட்டப்பெயரில் உணவகத்தைத் தொடங் கினார். இப்போது 41 வயதாகும் அபு மர்கியா தனக்கென ஒரு பிட்ஸா சாம்ராஜ்யத்தையே உருவாக்கிவிட்டார்.

அதே ஊரைச் சேர்ந்த லா கனோனிகா என்ற உணவகத்தின் முதலாளிகளில் ஒருவரான லோரியானா பியான்ஸியின் கூற்று மண்ணின் மைந்தர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. பாரம்பரியச் சுவைக்கு மவுசு ஏற்படுத்துவது அவசியமான ஒன்று. ஆனால், இத்தாலியர்களைக் கொண்டே அந்த மவுசை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இதில் அயல்நாட்டவரை அனுமதிக்கக்கூடாது என்கிறார் லோரியானா. தானே சமையல் மாஸ்டராக இருந்துகொண்டு வங்கதேசிகள் பலரை வேலைக்கு வைத்துக்கொண்டுள்ள இவரே இப்படிக் கூறுகிறார் என்றால், சுவை மாறா சமையலுக்கு இத்தாலியர்கள் எவ்வளவு முக்கியத்துவம் தருகிறார்கள் என்பது புரிகிறதல்லவா. "வேறு நாட்டவர்கள் என்பதால்தான் அவர்களை வேண்டாம் என்று கூறுகிறேன் என யாரும் நினைத்துவிட வேண்டாம். நமது கைப்பக்குவம் மற்ற நாட்டவருக்கு நிச்சயம் வராது என்பதுதான். தனது அங்கலாய்ப்புக்கு அர்த்தம்" என விளக்கம் கூறுகிறார்.

"உணவகங்களில் சமைக்கச் சரியான ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே, வீட்டுச் சமையலில்தான் உணவகத்தை நடத்தி வருகிறோம். இது அலுப்பான வேலை. தினமும் நெடுநேரம் உழைக்க வேண்டியிருக்கிறது என உள்நாட்டவர் சலிப்படைந்து பெருமளவில் வேலையை உதறிவிடுகின்றனர். எனவே, அந்த வேலை வெளிநாட்டவர் கைக்குப் போய் விடுகிறது" என்றும் அவர் கூறுகிறார்.

ஜோர்டானைச் சேர்ந்த அபு மர்கியா என்ற இளைஞர் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தனது இத்தாலிய மாமியாரிடம் பணத்தைக் கடனாக வாங்கி மிலான் நகரில் டா வில்லி என்ற தனது பட்டப்பெயரில் உணவகத்தைத் தொடங்கினார். இவரது கடையில் பிட்ஸா சற்று பருமனாக இருக்கும். ஆனால், விலை மலிவு. எனவே, வியாபாரமும் நல்லாக நடக்கிறது. இப்போது 41 வயதாகும் அபு மர்கியா தனக்கென ஒரு பிட்ஸா சாம்ராஜ்யத்தையே உருவாக்கிவிட்டார். மிலானில் 4 உணவகங்கள், ஜோர்டானில் 4, சைப்ரஸில் 2, துபாயில் தனியுரிமை ஏஜன்ட் மூலம் விற்பனை, எகிப்து, பெய்ரூட், ஷாங்காய் என பன்னாட்டு உணவக அதிபராகிவிட்டார். அவரது கருத்து, பிரான்ஸிஸ்கோ ஷபாடினி சொல்வதெல்லாம் கதை என்பதுதான்.

"உனக்கெல்லாம் அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுத்துவிட்டுதே" என இத்தாலியர் எனது வளர்ச்சியைப் பார்த்துக் கிண்டலாகக் கூறியது எனது மனதை வெகுவாகப் பாதித்துவிட்டது என மனம் வெதும்புகிறா சீன நாட்டவரான குயென்பென் ஜு. இவர் ரோமின் மையப் பகுதியின் கோப்பிக் கடை வைத்துள்ளார். 'எஸ்பிரஸோ' என அழைக்கப்படும் இவரது கடையில் இத்தாலிய மணமும், சுவையும் குன்றாத உணவுப் பதார்த்தங்களே விற்கப்படுகின்றன என்கிறார் சீன நாட்டு மதுவகைகளைப் பார்த்தவாறே. "சிலர் மதுவுக்காகவும் வருகிறார்கள். என்ன இருந்தாலும் நாங்கள் சீனாவுக்குத் திரும்பக் கூடியவர்கள் தானே. அதனால், இத்தாலியரின் கேலி கிண்டலைப் பொருட்படுத்துவதே இல்லை" என்கிறார்.

இந்த கிண்டல், கேலிப் பேச்செல்லாம் முன்புதான் இருந்தது. இப்பவெல்லாம் வெளிநாட்டினர் அதிக எண்ணிக்கையில் வந்துவிட்டதால் இத்தாலியர்கள் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்கள். வெளிநாட்டவர் அதிக அளவில் கடை திறப்பதால் இத்தாலியர்கள் வெளிநாட்டுப் பதார்த்தங்களையும் சாப்பிட வேண்டிய அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சில சீன உணவகங்களைத் தவிர வெளிநாட்டவர்களின் உணவகங்களைக் காண்பதே அரிது. ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகப் போய்விட்டது. ஜப்பானிய உணவுகள், இந்திய உணவு வகைகள் என ஆசிய நாடுகளின் பாரம்பரிய உணவுகள்கூட இங்கு எளிதாகவும் தாராளமாகவும் கிடைக்கின்றன என்கிறார் குயென்பென் ஜு.

"நாங்கள் பன்னாட்டு சமூகத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து மாணவர்கள் எங்கள் பாடசாலையில் படிக்கிறார்கள்.

விடுதியில் அவர்களுக்கு விதவிதமாக வெளிநாட்டு உணவு வகைகள் பரிமாறப்படுகின்றன. கடந்த ஆண்டு முதல் ஒரு புதிய திட்டத்தை அமல்படுத்தினோம். மாதத்திற்கு ஒருமுறை ஏதாவது ஒரு வெளிநாட்டுச் சாப்பாட்டை அறிமுகம் செய்வது என புதிய முயற்சியாக வங்கதேசச் சாப்பாட்டைப் பரிமாறினோம். ஆனால், அதற்குப் பெற்றோர்களிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. எனவே, பதார்த்தப் பட்டியலில் மாற்றம் செய்ய வேண்டியதாகவிட்டது.

வழக்கமான சாப்பாட்டுப் பிரியர்களான இத்தாலிய மாணவர்கள்கூட இத்தாலிய உணவு வகைகளையே விரும்பிச் சாப்பிடுவதில் பிடிவாதமாக இருக்கிறார்கள்" என்கிறார் ரோமில் உள்ள அரசுப் பாடசாலைகளின் ஆணையர் மரியா கோஸியா.

"பிரான்ஸில்கூட நிலைமை மாறிவிட்டது. அங்கு எந்த எதிர்ப்பும் இன்றி வெளிநாட்டு உணவுப் பதார்த்தங்கள்கூட சாப்பிடப் பழகிவிட்டார்கள்" என்கிறார் அவர்.

"இப்படி வெளிநாட்டு சமையல் மாஸ்டர்கள் அறிமுகப்படுத்தும் இத்தாலியின் பாரம்பரியமற்ற உணவுத் தயாரிப்புக்களை இத்தாலிய சமையல் மாஸ்டர்களும் பின்பற்றத் தொடங்கினால் உணவுக் கலாசாரமே மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது" என்கிறார் விருதுபெற்ற உணவகம் ஒன்றின் உரிமையாளரான ரோஸியோனி. "இப்படியே, நிலைமை போனால் இன்னும் பத்து ஆண்டுகளில் சிறிய, நடுத்தர உணவகங்களில் இத்தாலிய சமையல் மாஸ்டர்களே இல்லை என்ற நிலை உருவாகி வெளிநாட்டு சமையல் கலைஞர்களின் கைப்பக்குவத்தை மட்டுமே உண்ண வேண்டிய நிலை ஏற்படும்" என்கிறார் அவர்.

சில நிபுணர்களது கருத்தும் இதுவாகவே இருக்கிறது. இது ஒரு பக்கம் என்றாலும் மறுபக்கம் உள்ளூர் பதார்த்தங்களை மட்டுமே உண்பது என்ற பிடிவாதக்காரர்களும் பெருகி வருகிறார்கள். கம்பரோ ரொஸோ போன்ற சஞ்சிகைகள் இத்தகைய உள்ளூர் பதார்த்தங்களைப் பற்றி அதிகமாக கட்டுரைகள் வெளியிடுகின்றன. இதை ஒரு இயக்கமாகவே மேற்கொள்கின்றன இந்தச் சஞ்சிகைகள்.

4 ஆண்டுகளுக்கு முன் சர்வதேச இத்தாலிய உணவு சமையல் கலைக் கல்லூரி ஒன்று லமேட்சியா நகரில் தொடங்கப்பட்டது. இத்தாலிய உணவுகளின் உறைவிடம் என்று சொல்லும் அளவுக்கு இந்த நகரில் அனைத்து வகை பாரம்பரிய இத்தாலி உணவுப் பதார்த்தங்களும் கிடைக்கும். இந்த நகரத்திலுள்ள உணவகங்களின் சிறப்பம்சம் என்னவென்றால் இங்குள்ள சமையல் மாஸ்டர்கள் வீட்டுச்சமையல் என்ற பாணியிலிருந்து மாறி நவீன இயந்திரங்களின் உதவியால் உள்ளூர் உணவுப் பண்டங்களைச் சமைத்து ருசி மாறாமல் தயாரிக்கிறார்கள் என்பதுதான். இந்தப் புதிய பாணி வந்ததால் இத்தாலிய உணவுப் பதார்த்தங்கள் உலகின் கவனத்தை ஈர்த்தன. நிலைமை மாறிவிட்டது. இனி இத்தாலிய உணவகங்கள் இரு வெவ்வேறு வகையாகப் பிரிக்கும் அளவுக்கு சுவையும், மணமும் தனித்தனி என்று முன்னேறிவிட்டன.

அதாவது உள்ளூர் இத்தாலிய செல்வந்தர்களுக்கு மட்டுமேயான உள்நாட்டுச் சமையல் கலைஞர்களைக் கொண்ட உணவகங்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு என வெளிநாட்டுச் சமையல் கலைஞர்களைக் கொண்ட தனி இத்தாலிய உணவகங்கள் என இரு துருவங்களாக அவை செயல்படக்கூடும். இத்தாலி பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. எனவே, இந்த நாட்டின் உணவுப் பழக்க, வழக்கங்களும் கட்டாயம் மாறிவிடும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இந்த நிலையில் உள்நாட்டு உணவுப் பதார்த்தங்களை எளிய முறையில் தயாரிப்பதில் இந்தக் கல்வியகம் புதுமையைப் புகுத்துவதில் அரை மனதுடன் செயல்படுகிறது.

எனினும், காலமாற்றத்துடன் ஒட்டித்தானே செல்ல வேண்டியிருக்கிறது என்பதால் மாற்றங்களை ஏற்பதை அதிகக் காலம் தள்ளிப்போட முடியாது.



தினமும் வந்துவிழும் ரொக்கெட்கள்

இஸ்ரேலின் எல்லைப்பகுதி நகரான ஸ்டெர்ராட் 7 ஆண்டுகளாக பாலஸ்தீன ரொக்கெட் தாக்குதலால் சிதைக்கப்பட்டு சின்னாபின்னாமாக்கப்பட்டு சிதிலச் சின்னமாகக் காட்சி அளிக்கிறது. பல வெளிநாட்டினர் இங்கு வந்து இந்த நகரைப் பார்த்துச் செல்கின்றனர். காஸாவிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த நகரம் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட நகரமாகவே இருக்கிறது.

ஜெருசலேமில் உள்ள யாட்வாஸ்ஹெம் நினைவுச் சின்னம் போல உள்ள இந்த நகரம், இஸ்ரேலிய ஆதரவாளர்கள் அனைவரும் அவசியம் பார்க்க வேண்டிய 'சின்னாபின்னச் சின்னம்' ஆக உள்ளது. வெளிநாட்டு ராஜதந்திரத் தூதர்கள் அவசியம் சென்று பார்க்கும்படி பணிக்கப்படுகின்றனர். 7 அமைப்புகள் இதற்காக இந்த நகரில் தங்கள் அலுவலகங்களைத் திறந்திருக்கின்றன. உயரதிகாரிகளை இங்கு 5 தடவைத் தான் கூட்டிவந்து காட்டியதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறினார். ஜோன் மக்கெயின் கடந்த மாதம் வந்து பார்த்துச் சென்றார். இங்கு ராணுவத் தாக்குதல் தடுப்பு மையங்களை அமைக்கவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் பல்வேறு சமூக சேவை அமைப்புகள் குறிப்பாக இஸ்ரேலிய ஆதரவு நாடுகள் பெருமளவு பணத்தைக் கொட்டத் தொடங்கியுள்ளன.

"பல காலமாக இந்த நகரை வெளியுலகுக்குக் காட்டி இதைத் தேசியப் பிரச்சனையாக்க இஸ்ரேல் ஆர்வம் காட்டவில்லை. இதை உள்ளூர்ப் பிரச்சனையாக மட்டுமே கருதி வந்துள்ளது" என்று அமெரிக்க வாழ் யூதர்களின் நன்கொடையைக் கொண்டு இந்த நகரில் கட்டப்பட்ட பெரிய முதலுதவி மற்றும் அம்புலன்ஸ் மையத்தைத் திறந்து வைத்துப் பேசிய மேயர் எல்மோயல் கூறினார்.

இப்போதுதான் இந்தப் பிரச்சனையை இஸ்ரேல் தன்மானப் பிரச்சனையாகக் கருதத் தொடங்கியிருக்கிறது. எனவே, இஸ்ரேலிய ஆதரவாளர்கள் தன்மானத்தைக் காக்க இந்த நகர் மீது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

காஸாவிலிருந்து இஸ்ரேலிய ராணுவம் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து 2005ம் ஆண்டிலிருந்து இந்த நகரம் மீதும் பாலஸ்தீனம் ரொக்கெட் மழை பொழிந்து விட்டது என்று இஸ்ரேல் கருதுகிறது. இஸ்ரேலிய எல்லையில் ஹமாஸ்_ ஹிஸ்புல்லாகளுக்கு பலம் பெருகியதால் அவை நெடுந்தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கின. எனவே, இவர்களது பலப்பரீட்சைக்கு இந்த நகரம் இலக்காகியுள்ளது. எல்லைப்புற நகரம் தான் தாக்கப்படுகிறது என இஸ்ரேல் அலட்சியமாக இருந்துவிட்டது. இதே தாக்குதல் இஸ்ரேலின் உட்பகுதி நகரத்தின் மீதாக இருந்திருந்தால் பாதிப்பு எவ்வளவு இருந்திருக்கும் என்பதை இஸ்ரேல் எண்ணிப் பார்க்கவில்லை.

இந்த நகரில் உள்நாட்டு இஸ்ரேலியர்களும் வெளிநாட்டு நிவாரண உதவியைக் கொண்டு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். இஸ்ரேலின் உட்பகுதியில் உள்ள நகரம் ஒன்றில் சகலவிதமான சீமான் வாழ்க்கை வசதிகளை விட்டுவிட்டு இங்கு வந்து நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் தியேட்டர் இயக்குநர் இலானிட் ஸ்விஸ்ஸா, "இங்கு வந்து பார்த்த பிறகுதான் யுத்தம் எவ்வளவு நாசத்தை விளைவிக்கும் என்பதை உணரமுடிகிறது" என்கிறார்.

இந்த நகரம் தோட்டங்கள், கோதுமை வயல்கள் என ஒரு சோலையைப்போல இருந்தாலும் எந்நேரம் ரொக்கெட் தாக்குதல் நடக்குமோ என்ற அச்ச உணர்வோடு வாழ வேண்டிய துர்பாக்கியமான நிலையில் உள்ளது. ஒரு நாளைக்கு 50க்கும் அதிகமான ரொக்கெட் தாக்குதல்களை இந்த நகரம் சந்தித்ததும் உண்டு. 20 ஆயிரம் பேர் என்ற மக்கள் தொகை கொண்ட

இந்நகரில் மொராக்கன், எத்தியோபியன் என இஸ் ரேலிய சிறுபான்மையினர் அதிக அளவில் வசிக்கின் றனர். மத்திய ஆசியாவிலிருந்து அகதிகளாக வந்தவர் களும் கொஞ்சம் பேர் உள்ளனர்.

இந்த நகரில் ரொக்கெட் தாக்குதல் அச்சம் எப்போதும் நிலவி வருகிறது. அவ்வப் போது தாக்குதல் நடக்கும் சூழ்நிலையும் ஏற்படும். வர்த்தகம் முடங்கியுள்ளது. 3000 பேர் ஊரைக் காலி செய்துகொண்டு போய்விட்டனர். அடிக்கடி அபாயச்சங்கு ஊதுவது இங்கு வழக்கமாகிவிட்டது. எப்போது அபாயச்சங்கு ஊதுவார்கள், எப்போது ரொக்கெட் வந்து தாக்கும் என்ற அச்சம் காரணமாக அன்றாட வாழ்க்கை அல்லோகல மாகிவிட்டது. சிறுவர் பாட சாலையில் படிக்கும் குழந்தைகள் எப் போதுமே பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டிருப்பதால் ஏதோ பெயரளவில் பாடசாலைப் படிப்பு நடக்கிறது. உள்ளூர் மக்கள் ஒவ்வொருவருக்கும் சொத்து நாசம், ஆட்சேதம் என ஏதாவது ஒரு பாதிப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. இந்த ஊர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பார்த்தால் இந்த நகரம் மீது விழுந்து வெடிக்காத ஏவுகணைகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. பல கட்டடங்களில் ரொக்கெட் துளைத் ததால் துவாரங்கள் ஏற்பட்டுள்ளன.



மாணவர்கள் படிக்கும் பாடசாலையை நன்கொடை மூலம் புதிதாகக் கட்டி வரும் ராபி டேவிட், "காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறியது முட்டாள்தனமான செயல் என்பதை இங்கு வந்து விழும் ரொக்கெட்களே நிரூபிக்கின்றன" என்றார்.

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச அளவிலான கூட்டத்தை நடத்துவதாகவும், கடந்த முறை ஜனவரியில் நியூயோர்க்கில் இந்தக் கூட்டம் நடந்ததாகவும் இந்த நகருக்கு நிவாரண நிதி திரட்டும் அமைப்பான 'வேர்ல்ட் விஸ்ஸோ'வின் தலைவர் ஹெலினா கிளேஸர் கூறினார். 'ஸ்டெர்ராட் நகருக்கு உங்கள் உதவி தேவை' என டி சேர்ட்களை விநியோகித்து நாங்கள் நிதி திரட்டுகிறோம். பல கோடி பணம் திரட்ட முடியும் என நம்புகிறோம் என்றார் அவர்.

இந்த நகரில் சமீபத்திய மாற்றங்களில் ஒன்று, புதிய ஆலைகள் மூலம் ஊரின் பொருளாதார வளம் பெருகியுள்ளதுதான். "காஸாவிலிருந்து இஸ்ரேலிய ராணுவம் வாபஸ் ஆனதால் காஸாவில் இஸ்ரேலிய, பாலஸ்தீனியர்கள் நடத்தி வந்த தொழிற்பூங்காவில் இருந்த ஆலைகள் இந்த நகரத்திற்கு இடம்பெயர்ந் துள்ளன. இதனால், உள்ளூர் இஸ்ரேலியர்களுக்கு அதிக அளவில் வேலை கிடைத்துள்ளது. வேலை வாய்ப்பற்றோரின் எண்ணிக்கை 20 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதமாகக் குறைந்துள்ளது" என முனிசிபல் அதிகாரி ஷாலம் ஹலேவியன் கூறுகிறார்.

இந்த நகரில் வசிப்பவர்களின் மன உளைச்சல் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இரவில் ரொக்கெட் தாக்கு தலிலிருந்து தப்புவதற்காக ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரே அறையில் தங்கி தூக்கமில்லாமல் இரவைக் கழிக்கின்றனர். பாலஸ்தீனர்களுடன் பேசி 'போர் நிறுத் தம்' மேற்கொள்ள நடவடிக்கையெடுத்து வருகிறது ஓர் அமைப்பு. இதில் இரு தரப்பினரும் ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக்கொள்கின்றனர். இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் யார் என்ற விவரம் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

தான் நடத்தும் 500 மாணவர்கள் படிக்கும் பாடசாலையை நன்கொடை மூலம் புதிதாகக் கட்டி வரும் ராபி டேவிட், "காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறியது முட்டாள்தனமான செயல் என்பதை இங்கு வந்து விழும் ரொக்கெட்களே நிரூபிக்கின்றன" என்றார்.

'ரொக்கெட் தாக்குதல் மூலம் இந்த நகரைச் சின்னாபின்னமாக்கி இதை ஒரு பேய் நகரமாக்க பாலஸ்தீனியர்கள் முனைப்புடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்களது முயற்சியை முறியடிப்பதில் நாங்கள் முனைப்பாக இருக்கிறோம். ஜியோனிசத்தின் முனைப்பான மையமாக இந்த ஊரை நாங்கள் மறு நிர்மாணம் செய்து வருகிறோம்" என அவர் தனது பாடசாலைக் கட்டட கட்டுமான வேலைகளை மேற்பார்வையிட்டபடியே கூறினார்.

ஜேர்மன் பொலிஸ் லிபியாவுக்குக் கொடுத்த பயிற்சி

இதய நோய் சிகிச்சை நிபுணர் ஒருவர் அரசு பொது வைத்தியசாலையில் அனைத்து வசதிகளுடன் பணிபுரிகிறார். ஆனால், அந்த அரசு மருத்துவமனைக்கு அருகிலேயே அவர் தனது குழந்தைகள் அல்லது மனைவி பெயரில் சில கோடிகள் செலவழித்துத் தனியாக வைத்தியசாலை ஒன்றைத் தொடங்குகிறார். அரசு வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளைத் தனது வைத்தியசாலைக்கு வரும்படி தூண்டுகிறார்.

இதுபோல, சிவில் என்ஜினியரும் அரசுப் பணியில் இருந்துகொண்டு, தனியாக கட்டுமானப் பணி நிறுவனத்தை நடத்துவார். இதெல்லாம் சரியா? இதுமட்டுமல்ல, நாட்டின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள காவல்துறையினர் மற்ற நாட்டினருக்குத் தனியாக பணம் பெற்றுக் கொண்டு பயிற்சியளிப்பது எந்த வகையில் நியாயம்?

இப்படி ஒரு சம்பவம், ஜேர்மனியில் நிகழ்ந்துள்ளது. இதனால் ஜேர்மனியில் காவல்துறையினர் நடத்தி வரும் தனி ஆவர்த்தனம் குறித்து சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. அந்நாட்டில் உள்ள தகவல் தொடர்புச் சாதனம் இதை அண்மையில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது.

விஷயம் என்னவென்றால், ஜேர்மனியில் உள்ள சிறப்பு பொலிஸ் கொமாண்டோ பிரிவினர் 30 பேர் மற்றும் ஒரு ராணுவ வீரர் பி.டி.பி. புரடெக்ஷன் என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனத்துக்காகப் பயிற்சியளித்தனர் என்ற செய்தி வெளியானது. இதற்கும் மேலாகச் சிக்கல் என்னவென்றால் பயிற்சி கொடுக்கப்பட்டது லிபியா நாட்டவர்களுக்கு!

ஜேர்மன் காவல்துறையின் முன்னாள் கொமாண்டோ ஒருவர் இந்தப் பாதுகாப்பு நிறுவனத்தைத் தொடங்கி, லிபிய அரசிடமிருந்து 25 லட்சம் டொலர்களைப் பெற்றுக்கொண்டு ஜேர்மன் காவல் துறையினரைக் கொண்டு, லிபிய காவல் துறையினருக்குப் பயிற்சியளித்தார். இதற்காக ஜேர்மன் காவல் துறைக்குப் பணம் அளித்துள்ளார் என்பது குற்றச்சாட்டு.

இதுகுறித்து ஜேர்மன் அரசு கடந்த வாரம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில், 2005 முதல் 2007ம் ஆண்டு வரை அரசு பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த எவரையும் லிபியா காவல்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்க அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

"ஜேர்மன் காவல்துறையினர் விடுமுறை நாட்களிலோ அல்லது ஊதியமின்றி விடுமுறை எடுத்துக் கொண்டே சென்று லிபிய காவல்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளித் துள்ளனர். இதுகுறித்து அவர்களது உயர் அதிகாரி களுக்கு எந்தத்




தகவலும் தெரிவிக்கப்படவில்லை. பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுபோன்ற பாதுகாப்பு நிறுவனங்கள் எல்லாம் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் செயல்படுகின்றன" என்று தெரிவிக்கிறார் அரசு செய்தித் தொடர்பாளர் உல்ரிச் வில்ஹெம்.

"அரசு இப் பிரச்சனை குறித்து முழுவதும் விவாதித்து நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், மக்கள் பிரதிநிதிகள் இதுகுறித்து பல்வேறு கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பியுள்ளனர். இதுதொடர்பான நடவடிக்கைகள் தீவிரமடையும் எனத் தெரிவிக்கிறது" என்றும் உல்ரிச் தெரிவிக்கிறார்.

"பி.என்.டி. பாதுகாப்பு அமைப்பு என்ன கனவு கண்டு கொண்டு இருக்கிறதா?" என அந்நாட்டு எதிர்க்கட்சியான ஃப்ரீ டெமாகிரட்டிக் கட்சியின் பொதுச் செயலர் திர்க் நேபல் குற்றஞ்சாட்டியுள்ளார். பயிற்சி தொடர்பாக குற்றச்சாட்டை பி.என்.டி. பாதுகாப்பு அமைப்பு மறுத்துள்ளது. இப் பிரச்சனை நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இதனால், ஆளுங்கட்சியினர் ஒருவித பயத்தில் உள்ளனர். உள்நாட்டுப் பாதுகாப்பு ரகசியம் காவல் துறையினர் மேற்கொண்ட பயிற்சியால், லிபிய காவல்துறையினர் அறிந்திருக்கக்கூடும். இதை எதிர்க்கட்சிகள் எழுப்பினால், நமதுபாடு திண்டாட்டம்தான் என ஆளுங்கட்சியினர் கருதுகின்றனர்.

லிபியத் தலைவர் கடாஃபி, 2003ம் ஆண்டு எடுத்த நடவடிக்கையின்படி நாட்டில் அணு அயுதங்களை ஒழிக்க முடிவு செய்தார். அதையடுத்து, மேற்கத்திய போர் முறைகளையே அந்நாடு கடைப்பிடிக்கத் தொடங்கியது. கிறிஸ்துவ டெமாகிரடிக் கட்சியின் நாடாளுமன்றத் துணைத் தலைவரான உல்ஃப்கேங் பாஸ்பாச் பி.என்.டி. பாதுகாப்பு அமைப்பின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார். அதன் உரிமைகளைப் பறிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். "லிபிய காவல்துறைக்குப் பயிற்சி அளிக்க ஜேர்மன் நாடாளுமன்றம் அனுமதி அளித்திருக்கக் கூடாது. லிபிய அரசு முறைகேடாக நடந்துள்ளது" என ஒரு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார். "காவல்துறையினர் பயிற்சி அளிப்பது குறித்து அரசிடம் அனுமதி கேட்டிருந்தாலும், அரசு அதை மறுத்திருக்க வேண்டும்"

ஏற்கெனவே சில அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு சார்ஜென்ட் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். எட்டு பொலிஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உள்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஓர் அதிகாரியின் மீது அரசு ஆவணங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதற்காகக் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



லிபியத் தலைவர் கடாஃபி

திரிபோலியில் உள்ள ஜேர்மன் தூதரகம் இந்தப் பயிற்சி குறித்து அதிகாரப்பூர்வமற்ற தகவலைத் தெரிவித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அதற்கு முதல் நாள்தான் பயிற்சி குறித்த தகவலுக்கு வெளிநாட்டு அமைச்சகம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

இப்பயிற்சி குறித்து 2004ம் ஆண்டு கடைசியில் அந்நாட்டின் அப்போதைய முதல்வர் கெர்கார்ட் ஸ்குரோடர் லிபியா சென்றபோது முடிவு செய்யப்பட்டது. அவர் கடாஃபியைச் சந்தித்து இதுகுறித்துப் பேசியுள்ளார். ஆனால், ஸ்குரோடர் 2005ம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்றார். 2000ம் ஆண்டில் பிலிப்பைன் தீவில் சூலோ என்ற இடத்தில் இருந்த அன்னியச் சுற்றுலாப் பயணிகளை விடுவிப்பதற்கு (அதில் ஒரு முஸ்லிம் குடும்பத்தினரும் இருந்தனர்) கைமாறாகப் பயிற்சி அளிக்க முன்னாள் முதல்வர் சம்மதம் தெரிவித்தார் என்ற ஊடகங்களில் வெளியான செய்திக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சனை குறித்து நாடாளுமன்றக் குழு பலமுறை கூடி விவாதித்துள்ளது. முன்னாள் முதல்வர் மற்றும் அவருடன் இருந்த தற்போது வெளியுறவுத் துறை அமைச்சர் பிராங்க் வால்டர் ஸ்டெயின்மெரிர் ஆகியோருக்கு இப் பயிற்சியில் எந்த அளவு தொடர்பு உள்ளது என்று அவர்கள் அடிக்கடி சந்தித்து விவாதித்துள்ளனர்.

இதுதவிர, பிற நாடுகளுடனான பிரச்சனை குறித்து இக் குழு விவாதித்து வருகிறது.

பாகிஸ்தான் உளவுத்துறையின் ஆசியுடன் இந்தியாவில் தீவிரவாதம்

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் உல் முஜாகுதீன் அலுவலகத்தில் பணியாற்றும் பிலால் அகமது மிர் கடந்த ஆண்டு அந்த அமைப்பைவிட்டு வெளியேறும் முடிவை எடுத்தார். தனது வாழ்நாளில் தான் எடுக்கும் மிகவும் அபாயகரமான முடிவாக அது இருக்கும் என்று பிலால் அகமது மிர் இதைக் கருதலாம். வட காஷ்மீரில் உள்ள பயங்கரவாத மையத்திற்கு பொறுப்பாளராகச் செல்வது என்பதே அவரது இந்த அபாயகரமான முடிவு. அவரது முடிவை ஏற்ற அமைப்பின் அதிகார பீடம் அவருக்கு வேண்டிய ஆயுத உதவிகளைச் செய்தது. பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. மூலம் அவருக்குத் தேவையான ஆயுதங்கள் பாதுகாப்பாக வழங்கப்பட்டன.

பாகிஸ்தான் விசாவும் நேபாள பாஸ்போர்ட்டும் தரப்பட்டு நேபாளத் தலைநகர் காத்மாண்டுவுக்கு பாகிஸ்தான் மூலம் சாதாரணப் பயணியாக அவர் தனது பயணத்தைத் தொடங்கினார். கடந்த கோடைக்காலத்தில் செய்திருந்த முன் ஏற்பாட்டின்படி அவர் காத்மாண்டுவில் உள்ள இந்திய உளவாளி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பிலால் பயணம் செய்த நேரம் காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் முட்டுக்கட்டை நிலவிய நேரம். அப்போது பாகிஸ்தானில் நிலவிய அரசியல் ஸ்தரமின்மை காரணமாக பேச்சுவார்த்தை தடைபடாமலிருந்ததால் இந்நேரம் அங்கு புதிய அரசு பதவி ஏற்றிருக்கும். இதற்கிடையே இந்திய, பாகிஸ்தான் அரசுகள் ரகசிய பேச்சுவார்த்தைகள் மூலம் 5 அம்ச சமரசத் திட்டத்தை வெளி உலகுக்கு அறிவிக்கக் கூடும் என்ற நிலை எட்டப்பட்டிருந்தது.

காஷ்மீரில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய செயல்திட்டங்களான ராணுவம் வாபஸ், எல்லைக்கோடு நிர்ணயம், சுதந்திரமான வர்த்தகம், வாகனப் போக்குவரத்துக்கு வழிவகுத்தல் என சில அம்சங்களில் இந்த சமாதானத்திட்டம் மூலம் ஒரு முடிவு எட்டப்பட்டிருந்தது. ஆனால், காஷ்மீரில் இயங்கும் ஹிஜ்புல் முஜாஹிதீன் அமைப்புக்கு இந்த சமாதானத் திட்டம் கழுத்துக்குக் கத்தி வரும் சமாச்சாராமாகவே பட்டது.

1995ம் ஆண்டுக்குப் பின் முதன்முறையாக தேர்தல் நடவடிக்கை தொடங்கப்பட்டிருப்பதை அனுமதிப்பதா, தடுப்பதா என காஷ்மீரில் இயங்கும் பயங்கரவாத அமைப்புகள் எதுவும் எந்த முடிவும் தெரிவிக்காத நிலை அப்போது இருந்தது. 1996ம் ஆண்டு ஜனநாயகத்தை காஷ்மீரில் மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சிகள் மேற்கொண்டபோது அரசியல்வாதிகள் 61 பேரும், 1997ம் ஆண்டு 57 பேரும் பயங்கரவாதத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.



2001ம் ஆண்டு காங்கிரஸ் மக்கள் ஜனநாயக கட்சி (பி.டி.பி.) கூட்டணி காஷ்மீரில் ஆட்சியைப் பிடித்தது. அந்த ஆண்டு 76 அரசியல்வாதிகள் கொல்லப்பட்டனர். 2002ம் ஆண்டும் இதே நிலை தொடர்ந்தது- 100 பேர் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம் பயங்கரவாத அமைப்புகளுடன் தங்களுக் குள்ள உறவை அரசியல்வாதிகள் துண்டித்துக் கொண்டே ஆக வேண்டும் என்ற கட்டாய நிலை உருவாக்கப்பட்டது. இதையடுத்து பயங்கரவாத அமைப் புகள் தங்கள் நிலையை தளர்த்திக் கொண்டன. ஐக்கிய ஜிகாத் கவுன்சில் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு எந்த வித இடையூறும் செய்யவில்லை என அறிவித்தது. இப்படியாக காஷ்மீரில் பயங்கரவாத அமைப்புகளால் தாக்குதல் நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விட்டன.

சமீபகாலத்தில் இப்படி தங்கள் தாக்குதல் நடவடிக் கைகளை நிறுத்திக்கொண்ட பயங்கரவாத அமைப்பு களின் தலைவர்களில் மிர்ரும் ஒருவர். 2007ம் ஆண்டின் இறுதியிலிருந்து காஷ்மீரின் ஹிஜ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைவராகச் செயல்பட்டு வருகிறார். நசீர் அகமது பட்டும் இப்படி நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டவர்களில் ஒருவர்தான். ஸ்ரீநகருக்கு வெளியே உள்ள பாதுகாப்பான ஓர் இடத்தில் ரகசியமாக வாழ்ந்து வருகிறார். இவருக்கு மாநில அரசின் ரகசியப் பாது காப்பு இருக்கிறதாம். அடுத்த சட்டப்பேரவை தேர்தலை யொட்டி இவருடன் மாநில அரசு பேச்சு நடத்தும் என நம்பப்படுகிறது.

பேச்சு நடத்தச்செல்வது என்ற கருத்துக்கு முஜாஹிதீன் அமைப்பில் உள்ள 'தளபதி' முகமது யூசுப் ஷா அஹா சையது சலாலுதீன் முற்றிலுமாக உடன்படவில்லை. ஆனால், இந்த அமைப்பைச் சேர்ந்த மற்றவர்கள் என்னதான் கூறுகிறார்கள் பார்ப்போம் என்ற பாணியில் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் என தெரிகிறது.

2008 ஜனவரியிலிருந்து முஜாஹிதீன் 'படைத் தளபதிகள்' பலர் பாகிஸ்தானிலிருந்து காஷ்மீருக்குத் திரும்பி வந்துள்ளனர். இந்திய அரசின் கெடுபிடி நடவடிக்கைகள் எல்லைப்புறத்தில் கடுமையாக இருக்காதிருந்தால் இப்படி திரும்பிவரும் முஜாஹிதீன் படைத் தளபதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும் என நிபுணர்கள் கூறுகிறார்கள். மனந்திருந்திய பயங்கரவாதிகள் பலர் மீண்டும் ஜிகாத் அமைப்புகளுடன் தங்களுக்கு உள்ள தொடர்பைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என தெரியவந்ததையடுத்து இந்திய அரசு எல்லைப்புறக் கெடுபிடியை கடுமையாக்கியது.

மனம் திருந்தி தாயகம் திரும்பும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தை உருவாக்கி அமலாக்க வேண்டும் என்ற கருத்தை ஜம்மு



இந்திய அரசின் கெடுபிடி நடவடிக் கைகள் எல்லைப்புறத்தில் கடுமையாக இருக்காதிருந்தால் திரும்பிவரும் முஜாஹிதீன் படைத் தளபதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும் என நிபுணர்கள் கூறுகிறார்கள். மனந்திருந்திய பயங்கரவாதிகள் பலர் மீண்டும் ஜிகாத் அமைப்புகளுடன் தங்களுக்கு உள்ள தொடர்பைப் புதுப்பித்துக்கொண்டிருக் கிறார்கள் என தெரியவந்ததையடுத்து இந்திய அரசு எல்லைப்புறக் கெடுபிடியை கடுமையாக்கியது.

– காஷ்மீரில் உள்ள பெரிய அரசியல் கட்சிகள் அனைத்துமே ஆதரிக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு சிலரது ஆதரவும் சிலரது எதிர்ப்பும் இருக்கிறது.

உதாரணமாக குல்ஹமாலில் பிறந்த ரியாஸ் அகமது "அரசின் திட்டத்தை நம்பி நான் எனது கையைச் சுட்டுக்கொள்ள விரும்பவில்லை" என்கிறார். அவர் பாகிஸ்தானில் முஜாஹ"தீன் முகாமில் பாதுகாப்பாக இருப்பதையே அவரது பெற்றோர்கள் விரும்புகிறார்கள். தாயகம் திரும்பி ஆபத்தைத் தேடிக்கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. ரியாஸ் தலைமைப் பத வியை விட்டுச்சென்றுவிட்டால் முஜாஹிதீன் அமைப்பில் வெகுகாலம் வேலை செய்த முஜாபர் அகமது தர் அவரது பதவியை வகிக்கத் தயாராக இருக்கிறார்.

வடக்கு காஷ்மீர் பகுதியில் இந்த அமைப்புக்கு 3 கொமாண்டர்கள் இருக்கின்றனர். 'தாஜத்' என்ற புனைப்பெயரில் பக்சன் படிபோராவிலிருந்து இந்த இயக்கத்தின் செயல்பாடுகளில் பங்கேற்கும் முகமது ஷாபி, அவரது பக்கத்து ஊர்க்காரரான சுண்டி முல்லாவைச் சேர்ந்த அவரது பழைய நண்பர் அலி முகமது லோன் மற்றும் மற்றொரு பக்கத்து ஊரான பாரமுல்லா பக்-இஸ்லாமைச் சேர்ந்த தன்விர் அகமது, இவர்கள் மூவருக்கும் கீழ் ஒரு டசினுக்குக் குறைவா னவர்களே செயல்படுகின்றனர். தெற்கு காஷ்மீரில் ஒரு காலம் இவர்கள் மிகவும் பலம் மிக்கவர்களாக இயங்கி வந்தனர்.

பர்வேஸ் முகமது தார் மார்ச் 31ம் திகதி ஜம்மு - காஷ்மீர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இந்த அமைப்பின் மற்றொரு கொமாண்டரான பரூக்தார்



பெப்ரவரி 10ம் திகதி டிரால் அருகே சுட்டுக் கொல்லப்பட்டார். தஸ்மில் இஸ்லாம் என்பவர் முஜாஹிதீன் தலைவர் முகமது யூசுப் ஷாவின் மிகவும் நம்பகமான தளபதியாக இருந்தவர். இவர் கைது செய்யப்பட்டதால் இந்த அமைப்பின் மத்திய டிவிஷன் சரியான தலைமை இன்றிச் செயல்படும் நிலை ஏற்பட்டது.

மார்ச் 19ம் திகதி ஸ்ரீநகரில் உள்ள ஜஹாங்கீர் சௌக்கில் ஒரு வெடிகுண்டுத் தாக்குதலை முஜாஹிதீன் அமைப்பு நடத்தியது. இதற்கான வெடிபொருட்களும் தன்வீர் அகமது தலைமையிலான வடக்கு காஷ்மீர் செல்லில் இருந்து விநியோகிக்கப்பட்டன. பல்வேறு தவறுகள் காரணமாக விஷயம் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரிய நேர்ந்தது. முஜாஹிதீன் அமைப்புக்குள் ஜம்மு- காஷ்மீர் பொலிஸ் புலனாய்வுப்பிரிவினர் ஊடுருவியுள்ளனர். எனவே, தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திவிடுவோம் என முடிவு செய்யப்பட்டது. இந்த ஊடுருவல் காரணமாக முஜாஹிதீன் அமைப்பினருக்குள் பிரிவினை எண்ணமும் அவநம்பிக்கையும் அதிகரித்தது.

இதுபோன்ற பல காரணங்களால் ஜிகாத் அமைப்பு பலவீனமடைய நேர்ந்தது. ஆனாலும், தனது தாக்குதல் நடவடிக்கைகள் முற்றிலுமாக நிறுத்திக்கொள்ள அது முனைப்புக் காட்டவில்லை. மார்ச் 1ல் முஜாபராபாத்தில் கூடியிருந்த லஸ்கர்- இ- தொய்பா அமைப்பினரிடையே லாகூரிலிருந்து செயல்படும் அமீர் ஹாஜிப் முகமது தொலைபேசி மூலம் பேசினார். பாகிஸ்தான் நிர்வகிக்கும் காஷ்மீரில் தமது நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாடுகள் விரைவில் விலக்கிக்கொள்ளப்படும் என்றார். ஆப்கனிஸ்தானில் அமெரிக்கப்படைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பின்னடைவு காரணமாக ஜம்மு-காஷ்மீரில் ஜிகாத் அமைப்பின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் அறிவித்தார். ஜம்மு காஷ்மீரில் ஜிகாத் அமைப்புக்காக விரைவில் ஒரு வெடிமருந்துக் கிடங்கை திறக்க லஸ்கர் அமைப்பு முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதைவைத்துப் பார்க்கும்போது, லஸ்கர் அமைப்பு புதிய தாக்குதலை நடத்த தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு வருகிறது எனத் தெரிகிறது. எல்லைப்பகுதியில் உள்ள கெல் என்ற இடத்தில் உள்ள தனது கட்டுப்பாட்டு நிலையத்திற்குப் புதிய நவீன உத்தி கொண்ட வயர்லெஸ் சாதனங்களை லஸ்கர் அமைப்புப் பொருத்தத் தொடங்கியிருக்கிறது. லோலப் மலைப்ப குதியில் ஊடுருவல் நடக்க வாய்ப்பு அதிகமுள்ள பகுதிகளில் இந்தக் கட்டுப்பாட்டு நிலையம் உள்ளது. எனவே, இந்தப் புதிய நடவடிக்கைகள் லஸ்கர் அமைப்பை மீண்டும் வலுப்படுத்துவதாக இருக்கும்.

லஸ்கர் அமைப்பின் தளவாடப் பிரிவைச் சேர்ந்த வாகாவில் வசிக்கும் ஷாகிர் அகமது கட்டளையின் பேரில் பாகிஸ்தான் நிர்வகிக்கும் காஷ்மீரில் பலா கோடே என்ற இடத்தில் ஒரு படைப் பயிற்சி மையத் திற்கு மீண்டும் புத்துயிரூட்டப்பட்டுள்ளது. குஜரன்வாலா அருகில் உள்ள லாலா மூஸா என்ற இடத்தில் புதிய பயிற்சி மையம் ஒன்றால் பாகிஸ்தான் ராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் ஜனவரியிலிருந்து ராணுவப் பயிற்சி அளிக்கிறார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட, முக்கியமான விடயம் என்னவென்றால் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. இப்போது லஸ்கர்-இ- தொய்பா அமைப்புக்கு மீண்டும் நேரடியாக நியுதவி அளிக்கத் தொடங்கியிருக்கிறது என்பதுதான். 2006ம் ஆண்டு சர்வதேச நிர்பந்தம் காரணமாகவே இந்த நேரடி நிதியுதவி நிறுத்தப்பட்டது.

பாகிஸ்தான் நிர்வகிக்கும் காஷ்மீரில் உள்ள ஹிஸ்புல் படை முகாம்களில் உள்ள திருமணமானவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவிப்பணமான பாகிஸ தான் ரூபா 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு இவர்களுக்கு 5,200 ரூபாவாகத்தான் இருந்தது. திருமணமாகதவர்களுக்குச் சம்பளம் 4,200 ரூபாவிலி ருந்து 8000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இடையே சிறிது காலத்துக்கு பாகிஸ்தானின் உளவுப்பிரிவு கொடுக்கும் நிதியுதவி நிறுத்தப்பட்டதால் சொற்பமான சம்பளமாக இருந்தது. இபபோது மீண்டும் நிதியுதவி கிடைத்துவிட்டதால் உயர்த்தப்பட்டிருக்கிறது.



பண உதவி அதிகரித்தபின் கடந்த கோடை காலத்தில் மிக வலுவான முறையில் ஊடுருவல் நடவடிக்கையை மேற்கொண்டனர். பாரமுல்லா அருகே அடர்ந்த காட்டுப்பகுதியில்தான் ஜிஹாதி அமைப்புகள் வலுவாக உள்ளன. அங்கு வன்செயல்களைத் திட்ட மிட்டபடி நடத்தி வருகின்றன. 2006ம் ஆண்டு பாரமுல்லா பகுதியில் 16 தாக்குதல்கள்தான் நடத் தப்பட்டன. ஆனால், 2007ல் அதிக எண்ணிக் கையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 22 இந்தியப் படைவீரர்களும் பொலிசாரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களில் கொல் லப்பட்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கையும் 103 ஆக அதிகரித்துள்ளது. எனவே, இந்த ஆண்டு பெரிய அளவில் ஊடுரு வல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜிகாத் அமைப் புகள் எத்தனிக்குமா என்பது தெரியவில்லை.

தேர்தலுக்கு முன்பான பயங்கர வாதத்தை ஒடுக்கும் நடவடிக் கையை மேற்கொள்ள இந்திய அரசு எவ்வளவு முனைப்புக் காட்டும் என்பதையும், அழிந்து வரும் ஜிகாத் அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்ட பாகிஸ்தான் எவ்வளவு தூரம் மனம் வைக்கும் என்பதைப் பொறுத்து தான் இந்த ஊடுருவல் நடவடிக்கைகளின் எண்ணிக்கை இருக்கும். முக்கியமாக, பாகிஸ்தான் மனது வைப் பதைப் பொறுத்தே ஊடுருவல் நடவடிக்கைகளின் எண் ணிக்கை அதிகரிக்கும் என்று தெரிகிறது.

இந்தியாவுடன் அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ள பாகிஸ்தான் அரசியல்வாதிகள் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் ஜர்தாரி தைரியமான பல திட்டங்களை இதற்காக வகுத்திருக் கிறார். பாகிஸ்தான் ராணுவம் என்ன நினைக்கிறது என்பது முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்தியாவுடன் ஜிஹாத் அமைப்புகள் மூலம் முறைமாக யுத்தத்தைத் தொடர்வதா? ராணுவத்தை மட்டுமே பயன்படுத்துவது பாகிஸ்தான் பாதுகாப்புக்குப் போதுமானதாக இருக் குமா? என ராணுவம்தான் தீர்மானிக்க வேண்டும்.

சமீபகாலமாக இந்த மறைமுக யுத்தத் திற்குப் பயன்படுத்தும் அமைப்புகள் மீதான ராணுவத்தின் பிடி தளர்ந்துள்ளது. பாகிஸ்தான் ராணுவம் பாகிஸ்தானின் மேற்கு எல்லையைப் பாதுகாப்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வருவதால் கிழக்கில் அது தனது மறைமுக யுத்தத்தை எப்படி மேற் கொள்ளும் என்பது உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது. பாகிஸ்தான் ராணுவம் தாம்புக் கயிறை எப்படிச் சுண்டும் என்பதைப் பொறுத்தே எதிர்காலத் தாக் குதல் யுத்திகள் வகுக்கப்படும் எனக் கருதப் படுகிறது.



இது ஒருபுறமாக இருக்க பாகிஸ்தானின் ஆசியுடன் வளரும், இந்தி யாவில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் மாணவர் அமைப்பான 'சிமி' கடந்த வாரம் பெருத்த பின்னடைவைச் (முடங்கும் நிலையை) சந்தித்துள்ளது. இந்திய மாணவர் முஸ்லிம் இயக்கம் (சிமி) என அழைக்கப்படும் இந்த இயக்கம் 2001ம் ஆண்டிலிருந்து இந்தியாவில் பல நகரங்களில் நடந்த பெரும்பாலான பயங்கரவாத, நாசவேலைகளைத் திட்டம் வகுத்து நடத்தியுள்ளது என நம்பப்படுகிறது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த 13 பெரிய தலைவர்கள் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் கைது செய்யப்பட்டனர்.

சிமி அமைப்பின் பொதுச் செயலாளரும் அதன் மூளையாகச் செயல்படுபவருமான ஷப்தர் நஹோரி, அவரது சகோதரரும் அந்த அமைப்பின் ஆந்திர மாநிலத்தில் சதி வேலை செய்ததற்குப் பொறுப்பான வருமான கமருதீன் நஹோரி, கர்நாடக மாநிலப் பொறுப்பாளரும் ஹாபிஸ் ஹுசேன், மென்பொருள் பொறியாளராக இருந்து பயங்கரவாதியாக மாறிய கேரள இளைஞர் ஷிபிலி பீடிகல் அப்துல் மற்றும் 7 பேர் சில தினங்களில் அடுத்தடுத்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட இந்த 13 பேரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

2001ம் ஆண்டு சிமி அமைப்பை இந்திய அரசு தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. இதையடுத்து நஹோரி உட்பட்ட நிர்வாகிகள் தலைமறைவாகினர். 2006ம் ஆண்டு ஜுலை 11ம் திகதி மும்பையில் புறநகர் ரயில்கள் பலவற்றில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்தன. அதற்குச் சில தினங்களுக்கு முன் உஜ்ஜயினியில் சிமி அமைப்பின் சார்பில் சதி ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்துள்ளது. இதை நஹோரிதான் நடத்தினார் எனக் கருதப்படுகிறது. பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஏகதேசம் சித்திக் என்பவர் (இவர் சிமி அமைப்பின் மகாராஷ்டிரா கிளையின் அப்போதைய பொறுப்பாளர்) கலந்துகொண்டார் என சந்தேகிக்கப்படுகிறது. பம்பாய் சம்பவத்தில் நஹோரி ரேடியாகத் தொடர்பு இல்லை என்ற போதிலும் அவர் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்தூரில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் சிக்கிய நஹோரி தலைக்கு 'அதிக விலை வைக்கப்பட்ட பயங்கரவாதி' என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். சிமி எப்படி பயங்கரவாத சதித்திட்டங்களைத் தீட்டுகிறது, யார் யாரிடமிருந்து அதற்குப் பணம் வருகிறது. இந்தியாவை அது எப்படியெல்லாம் தாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு உதவும் வெளிநாட்டவர்கள் யார்? என்ற விவரங்களை இந்த 13 பேரை விசாரித்துக் கண்டுபிடித்து விடுவோம் என அவர் மேலும் கூறினார்.

ஒருவாரம் நடந்த விசாரணையில் இந்த அமைப்பைப் பற்றிய பொலிஸ் துறையின் கணிப்புச் சரிதான் என தெரியவந்துள்ளது. 'ஃஷகீன்படை' என்ற பெயரில் இந்த அமைப்பிற்கு மகளிர் பிரிவு இருப்பது தெரியவந்துள்ளது. இந்தூருக்கு 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கோடைகால சுற்றுலாத்தலம் ஒன்றில் சிமி அமைப்பின் பயங்கரவாதப் பயிற்சி முகாம் ஒன்று இருந்ததும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. கவாலி கிராமத்தில் புதைக்கச் செய்திருந்த ஆயுதக் குவியலைக் கைப்பற்றவும், சரோல் என்ற மறைவிடத்தில் ஆயுதப் பயிற்சி நடத்தப்பட்டதும் இந்த விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

1977ம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலிகார் என்ற ஊரில் மாணவர் அமைப்பாகத் தொடங்கப்பட்டதுதான் இந்த சிமி அமைப்பு. பின்னர் ஜமாத்-இ-இஸ்லாமி என்ற சங்கிலித் தொடர் அமைப்பாக இது மாணவர்கள் மத்தியில் பரப்பப்பட்டது. இது மாணவர் முன்னேற்றத்திற்காகத் தொடங்கப்பட்டது என இதன் நிறுவனர் முகமது அகமதுல்லா சித்திக் கூறினாலும், காலப்போக்கில் மாணவர்களை சதிவேலைக்காரர்களாக உருவாக்கும் அமைப்பாக இது மாறிவிட்டது என்கின்றனர் இந்திய பொலிஸ் புலனாய்வு அமைப்பினர். இந்த அமைப்பு ஆரம்ப காலக்கட்டத்தில் தேசவிரோதச் செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை. மாறாக மதச்சார்பற்ற இந்திய ஜனநாயக அமைப்பை மத ரீதியாக எதிர்ப்பது மட்டுமே இதன் கொள்கை, கோட்பாடாக இருந்தது. முஸ்லிம் பழமைவாதக் கொள்கைகளுக்கு எதிராக இந்தியாவும், வேறுசில மேலை நாடுகளும் செயல்படுகின்றன. அவற்றை ஜிகாத் வழியில் திருப்பி மார்க்க ரீதியாகச் செயல்பட்டு முஸ்லிம் மதவாத அரசை நிறுவதுதான் இதன் தலைவர்களின் போதனைகளாக இருந்தன என ஒரு புலனாய்வு அதிகாரி கூறினார்.

1990களில் சிமி அமைப்பு தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாக மாறியது. 1992 டிசம்பர் 6ம் திகதி பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து மும்பையில் (அப்போதைய பம்பாய்) முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரம் செய்யப்பட்டதும் இவர்களது கோபத்தீயைத் தூண்டிவிட்டன. 11ம் நூற்றாண்டில் இந்தியாவில் பலமுறை இந்துக் கோயில்களைச் சூறையாடிய முகமது கஜினியின் பாணியில் இதற்குப் பழிதீர்க்க வேண்டும் என சிமி அமைப்பு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது. இந்த வகையில் சிமி அமைப்பு உத்தரப்பிரதேசத்தில் மதத்துவேஷத்தை தூண்டிவிட்டது. 2000ம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம் பைசாபாத் அருகே சபர்மதி எக்ஸ்பிரஸில் குண்டுவெடிப்புச் சம்பவத்தை சிமி நடத்தியது என சந்தேகிக்கப்படுகிறது. பயங்கரவாத செயல்களுக்காக சிமி அமைப்பின் தீவிரத் தொண்டர்களைக் கைது செய்யும் நடவடிக்கை அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

2001ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் திகதி நியூயோர்க்கில் உள்ள உலகப் பங்குச்சந்தை வர்த்தகக் கட்டடத்தை விமானம் மூலம் தாக்கிச் சிதைத்ததற்காக பின்லேடனை 'வாழ்த்தி' சிமி அமைப்பு பல்வேறு தெருமுனைப் பிரசாரங்களை நடத்தியது. 'பொடா' சட்டப்படி சிமி அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டு தடை செய்யப்பட்டது. 2004ம் ஆண்டு பொடா சட்டம் திரும்பப் பெறப்பட்டதால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இது தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ளது.

சிமியை தடை செய்ததை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த அமைப்பு மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவாகவும் நிரூபிக்கக் கூடியனவாகவும் இல்லை. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பேசும் பேச்சுகளைவிட சிமி நிர்வாகிகள் பேசும் பேச்சு அவ்வளவும் வரம்பு மீறியதாக இல்லை என்று இந்த எதிர்ப்பாளர்களின் வாதம். இந்து மதத்தினர் வரம்புமீறி பேசினாலும், பொலிசார் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதில்லை. ஆனால், சிமி விடயத்தில் கூண்டோடு கைது செய்யும் நடவடிக்கைகள் மிகச் சாதாரணமாக மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அந்த எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

சிமி அமைப்பு தடை செய்யப்பட்டதும் அதன் நிர்வாகிகள் தலைமறைவு வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். ஆனால், சிமி அமைப்பின் நடவடிக்கைகள் முனைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. நஹோரியின் தலைமையின் கீழ் இந்த அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு நிதி வசூல், ஆயுதம் வாங்குதல் என ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தனித்தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேசத்தில் மட்டுமே செயல்பட்டு வந்த அமைப்பு இந்தியாவின் பல மாநிலங்களில் கிளைகளை ஏற்படுத்திச் செயல்படத் தொடங்கியது. இப்படி இந்தியாவின் பல பகுதிகளில் சங்கிலித் தொடர்போல இது செயல்பட்டதால் லஸ்கர்-இ-தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகள் சிமியுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு நாட்டின் பல பகுதிகளில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

அண்மையில் கர்நாடகத்தில் சிமி நடத்திய தாக்குதல் நடவடிக்கை பற்றிய விசாரணையில்தான் சிமி அமைப்பு எவ்விதம் தென்மாநிலங்களில் காலூன்றியுள்ளது என்பது தெரியவந்தது. மேலும், முஸ்லிம்களில் நன்கு படித்தவர்கள், பெரிய பதவிகளில் இருப்போர் ஆகியோரை இந்த அமைப்பு எப்படி ஈர்த்துள்ளது என்பதும் பொலிசாருக்குத் தெரியவந்தது. பெப்ரவரி மாதம் கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் கைது செய்யப்பட்ட இந்த அமைப்பினால் மருத்துவர்கள், பொறியாளர்கள் ஆகியோரும் இருந்தது அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது.

சிமி அமைப்பின் முக்கிய நபர்களை முழுமையாகக் கைது செய்துவிட்டபடியால் அந்த அமைப்பில் என்ன மாற்றம் நிகழும் என யூகிப்பதில் பொலிசார் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த அமைப்பு மிகப் பெரியது. எனவே, இதை எளிதில் ஒழித்துவிட முடியாது என மூத்த பொலிஸ் அதிகாரிகள் கூறுகின்றனர். ஏனென்றால் இவர்களுக்கு அரசியல்வாதிகளின் ஆதரவு உள்ளது. மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கைது செய்யப்பட்ட சிமி அமைப்பினர் பலர் அரசியல்வாதிகளின் உத்தரவின்பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்கிறார் ஒரு பொலிஸ் அதிகாரி.


சிமி அமைப்பிலும், மிதவாதிகள் உள்ளனர். அத்தகையோரும் இந்த கைது நடவடிக்கையைக் கவனித்து வருகிறார்கள். சிமி அமைப்பில் உள்ள மிதவாதிகளுக்கும் ஜிகாத்ஷிகளுக்கும் இடையே நடக்கும் கொள்கை பற்று மீதான விவாதங்கள் பற்றி ஆங்கில சஞ்சிகளையில் பிரவீண் என்பவர் விரிவான முறையில் விவரித்திருக்கிறார்.

சிமி அமைப்புக்கு உள்ள ஜிகாத் தொடர்புகள் குறித்து இந்திய முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆட்சேபம் எழுப்பி வருகின்றனர். சிமி அமைப்பு தடை செய்யப்பட்டதால் அதன் நிர்வாகிகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவது குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகள் வருத்தமடைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையை மாற்றிட அவர்கள் விரும்புகின்றனர். இதற்காக பல முறை ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தியிருக்கின்றனர். சிமி அமைப்பில் அங்கம் வகிக்கும் ஜிகாத் ஆதரவாளர்களைப் பதவியிலிருந்து நீக்கி புதிய நிர்வாகிகளை நியமிக்கும் முயற்சிகளும் இதன் ஒருபகுதியாக இருந்திருக்கிறது.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இதில் இதுவரை வெற்றிகிடைக்கவில்லை.

தற்போது *13* முக்கிய நிர்வாகிகள் கைது செய்யப்பட்டிருப்பது சிமி அமைப்பின் மீதான ஜிகாத்தின் பிடியை தளர்த்தியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் அரசியல்வாதிகள் சிமி மீதான ஜிகாத் தொடர்புகளைத் துண்டித்துவிட முடியும். இதற்கான நெடிய முயற்சிகளில் ஈடுபட இயலுமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

இது எளிதான காரியமல்ல என்றபோதும், முன்பைவிட இப்போது எளிதானதுதான் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பது உண்மை.



006ம் ஆண்டு ஜூலை 11ம் திகதி மும்பையில் புறநகர் ரயில்கள் பலவற்றில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்தன. அதற்குச் சில தினங்களுக்கு முன் உஜ்ஜயினியில் சிமி அமைப்பின் சார்பில் சதி ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்துள்ளது.

இந்தியாவின் வியட்நாம்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். எதிராகத் திரும்புகிறது

அத்தியாயம் - 47

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூன்று பேர், அம்பன்பொல எஸ்டேட்டில் உள்ள ஜனாதிபதியின் வீட்டிற்குச் சென்று பிரேமதாசவைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு மிகவும் ரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டது என்ற விபரம் பலகாலமாக பரம ரகசியமாகவே இருந்துவந்தது. ரகசியம் எப்போது வெளியாகியது? எப்படி வெளியாகியது?


பின்னாட்களில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணம் குறித்து நடந்த விசாரணைக் கமிஷனில், பலர் விசாரிக்கப்பட்டனர். அப்போது சாட்சியளித்தவர்களில் பிரேமதாசாவின் முன்னாள் செயலாளர் எச்.கே.ஜே.விஜேதாசவும் ஒருவர். பிரேமதாசவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருந்ததா என்ற வகையில் அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோதுதான், விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூன்று பேர், அம்பன்பொல எஸ்டேட்டில் உள்ள ஜனாதிபதியின் வீட்டிற்குச் சென்று பிரேமதாசவைச் சந்தித்த இத்தகவலை எச்.கே.ஜே.விஜேதாச வெளியிட்டார். அதன்பிறகே இந்த விடயம் வெளியுலகத்திற்கு தெரியவந்தது.

இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்குமுன் பிரேமதாசவுக்கு விடுதலைப்புலிகளால் அனுப்பப்பட்டிருந்த கடிதம் கொஞ்சம் காரசாரமாகவே இருந்தது. இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவேன் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது பிரேமதாசா கூறிய வாக்குறுதிகளை மறந்துவிட்டார்; ஏமாற்றுகிறார் என்று அந்தக் கடிதத்தில் கடுமையாகவே குறிப்பிடப் பட்டிருந்தது. இருந்தாலும், ஆச்சரியகரமாக பிரேமதாசா அதற்காகக் கோபப்படவில்லை. புலிகள் தெரிவித்த கருத்தை பிரேமதாசா புரிந்து கொண்டார். என்று பின்னாட்களில் பாலசிங்கம் கூறினார்.

அதன்பின், ஜனாதிபதியின் உத்தரவுப்படி, இலங்கை அரசின் வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத்துறை சார்பாக அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, புலிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார். அந்தக் கடிதத்தில், போர் நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சில் இரண்டு தரப்பிலும் நல்ல விருப்பம் இருப்பது தெரிகிறது. அதனால் அமைதிப் பேச்சு நடத்த வாருங்கள். நல்ல ஒத்துழைப்பு கொடுங்கள்,'' என்று எழுதியிருந்தார். இந்தக் கடிதம்தான் இலங்கை அரசுடன் பேச்சுவார்த் தைகளுக்குப் போகலாம் என்ற எண்ணத்தைப் புலிகளுக்கு ஏற்படுத்தியது.

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன எழுதியிருந்த கடிதம் கிடைக்கப்பெற்றதும், லண்டனிலுள்ள தங்களது தலைமை அலுவலகத்திலிருந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் இலங்கை ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில், ''தாங்கள் கூறியபடி பேச்சுவார்த்தை நடத்த ஒத்துக்கொள்கிறோம். அமை திப் பேச்சு நடத்துவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுங்கள்" என்று குறிப்பிடப் பட்டிருந்தது. அந்தக் கடிதம் கிடைத்த உடனேயே, புலிகளிடமிருந்து பேச்சுவார்த்தையை உறுதி செய்யும் கடிதமும் ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு வந்தது.

கடிதங்கள் கிடைத்ததும், இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா, தனக்கே உரிய பாணியில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டங்களைத் தீட்டினார். புலிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார்.



"இலங்கையில் நீங்கள் கூறும் எந்த இடத்தில் வேண்டுமானாலும் பேச்சு வார்த்தை நடத்தலாம். அதற்கேற்ப, அதில் கலந்துகொள்ளவிருக்கும் உங்கள் அமைப்பிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளைப் பற்றிய தகவல்களைத் தாருங்கள். அதனடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்" என்று ஒரு தொலைநகல் லண் டனிலுள்ள புலிகளின் அலுவலகத்துக்கு அனுப்பப் பட்டது. அந்தத் தொலைநகலில் மேற்படி அழைப்பு ஜனாதிபதி பிரேமதாசவின் விருப்பப்படியே அவரது உத்தரவை நிறைவேற்றும் வகையில் அனுப்பப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில் உள்ள விவகாரம் என்னவென்றால், 'நாளைக்கே இந்த விஷயங்கள் வெளியே தெரியவந்து அரசியலில் சிக்கல் ஏற்பட்டால்..' என்ற எச்சரிக்கை உணர்வுடன், மேற்படி அழைப்புகள், இணக்கங்கள் எல்லாமே ஜனாதிபதி அலுவலகத்தின் லெட்டர்ஹெட்டில் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் அனுப்பப்படாமல், "ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் அனுப்பப்படுகின்றது" என்ற வாசகத்துடன் மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தன.

இதனை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகள் 1990, ஏப்ரல் 15ம் திகதி பதில் தொலைநகல் அனுப்பினர்.

புலிகள் அனுப்பிய பதொலைநகலில், ''எங்களது பேச்சுவார்த்தைக்கான கடிதத்தை ஏற்றுக் கொண்டது முழுமனதான திருப்தி அளிக்கிறது. பேச்சுவார்த்தைக்கு வரும் புலிகளின் பிரதிநிதிகளுக்கு உரிய பாதுகாப்பும், தங்கும் வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்,'' என்று குறிப்பிட்டிருந்தனர். புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி தனது குடும்பத்துடன் அம்பன்பொல கிராமத்தில் இருந்தார். கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு வந்த அந்தத் தொலைநகல், உடனடியாகவே தனி ஊழியர் மூலம் ஜனாதிபதிக்கு கிடைக்கும்படி அம்பன்பொல கிராமத்துக்கு அனுப்பப்பட்டது. நள்ளிரவில்தான் ஜனாதிபதிக்கு அந்தத் தொலைநகல் கைகளில் கிடைத்தது.

மறுநாள் அதிகாலை, தனது செயலாளர் விஜேயதாசவை அழைத்து, லண்டனில் உள்ள விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டு பேசுமாறு கூறினார். அப்போது, பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு நகருக்கு புலிகளின் பிரதிநிதிகள் வருமாறு அழைத்தார். இதனையடுத்து சில நாட்களில் இலங்கை அமைச்சரவைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னரே இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பமாகின.

பேச்சுக்கள் நடைபெற்றபோது இலங்கையில் இருந்த அரசியல் சூழ்நிலை பற்றிப் புரிந்துகொண்டால்தான் மேற்கொண்டு நடைபெற்ற விடயங்களைப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும் என்பதாலேயே மேற்படி நிகழ்வுகள் தொடரின் இடையில் இணைக்கப்பட்டன. இனி இந்தப் பேச்சுக்களின்போது நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளைப் பார்க்கலாம். அவை முக்கியமானவை.

பிரேமதாசவின் ஏற்பாட்டின்பேரில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைக்கு சிங்கள அரசியல் தலைவர்களிடையே வரவேற்பும், எதிர்ப்பும் கலந்த மனப்போக்கு காணப்பட்டது. முக்கியமான எதிர்க்கட்சியாக விளங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூத்த எம்.பி., லக்ஷ்மண் ஜெயக்கொடி மிகவும் எச்சரிக்கையாகப் பேசினார். "இது மிகவும் நல்ல முயற்சி. ஆனால், புலிகள் விரிக்கும் வலையில் இலங்கை அரசு சிக்கிவிடக்கூடாது. அந்த விடயத்தில் கொஞ்சம் நிதானமாகச் செயல்பட்டால் நல்லது. அதேநேரத்தில், அமைதிப் பேச்சில் ஈடுபடும் விடுதலைப்புலிகள் அமைப்பு எங்களுடனும் (எதிர்க்கட்சிகளுடனும்) பேச்சுவார்த்தை நடத்தினால் நல்லது''

முன்பு தமிழ் போராளிகள் அமைப்பாகவும், அதன்பின் இச்சம்பவங்கள் நடைபெற்ற காலகட்டத்தில் அரசியல் கட்சியாகவும் செயல்பட்டுக்கொண்டிருந்த ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதி, ''அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற முடிவு வரவேற்கத்தக்கது. அதற்காக விடுதலைப்புலிகள் மற்றும் இலங்கை அரசை மிகவும் மனதாரப் பாராட்டுகிறேன். மிகப்பெரிய போராட்டத்திற்குப் பிறகு அமைதி ஏற்படுவதற்கான ஒளிவட்டம் தெரிகிறது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். எங்களது கோரிக்கை தற்போது நிறைவேறப் போகிறது'' என்றார்.

தென்னிந்தியாவின் ஆங்கிலப் பத்திரிகையான தி ஹிந்து நாளிதழின் தலையங்கக் கட்டுரையில், "சமீபகாலமாக விடுதலைப்புலிகள் அமைப்பு ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நெருங்கி வருகிறது. வெளிநாட்டுக் கொள்கைகள், திட்டங்கள், வரைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை அரசு செயல்பட்டு வருகிறது" என்று எழுதியிருந்தது.

1990ம் ஆண்டு ஏப்ரல் 30ம் திகதி சண்டே டைம்ஸ் இதழுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் பிரதிநிதி ரஞ்சன் அளித்த பேட்டியில், "இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே உள்ள மோதல்களை விடுதலைப்புலிகள் அமைப்பு மிகவும் சாமர்த்தியமாகக் கையாள்கிறது. இந்தப் பேச்சுவார்த்தை மூலம் அமைதி நிலவ வேண்டும் என்று உண்மையான அக்கறையில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் செயல்படுகின்றனரா என்று கேள்வி கேட்டால், எனது பதில் வேறு. உண்மையான அமைதி வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விரும்புவதாக இருந்தால், இந்திய - இலங்கை கூட்டு ஒப்பந்தத்தில் இவர்களுக்குத் தொடர்பு இருப்பதால், இந்திய அரசுடன் கண்டிப்பாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அதோடு, எல்லா தமிழ்ப் போராளிகள் குழுக்களுடனும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே உண்மையான அமைதி ஏற்பட வழி பிறக்கும். அதன்பிறகே, இந்திய அமைதிப்படையினரை திரும்பிச் செல்லும்படி நாம் கேள்வி கேட்க முடியும்.


தற்போது நடைபெற உள்ள அமைதிப் பேச்சுவார்த்தை என்பது ஒரு கண்துடைப்பு நாடகம் போல எனக்கு தோன்றுகிறது. அதனால், இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. தற்போது இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்டுள்ள போர் நடவடிக்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருட்களையும், உடைமைகளையும், வீரர்களையும் இழந்துள்ளனர். இந்தச் சூழ்நிலையில் புலிகள் அமைப்பில் உள்ள போராளிகளைத் திருப்திபடுத்துவதற்காகவே, புலிகள் அமைப்பின் தலைவர்கள் மாற்று வழியைப் பின்பற்றுகின்றனர். அமைதிப் பேச்சுக்கு வருகின்றனர். இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே உள்ள விரோதப் போக்கை விடுதலைப் புலிகள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்துகின்றனர். ஆனால், அவர்கள் சர்வதேச அளவில் இவ்வாறு நடந்து கொள்ள முடியாது. ஏனெனில், இரண்டு நாட்டுக்கும் இடையே ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது" என்றார்.

சண்டே டைம்ஸ் இதழுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் பிரதிநிதி ரஞ்சன் அளித்த பேட்டியில் தெரிவிக்கப்பட்ட தகவல்களை, ஈரோஸ் அமைப்பின் சார்பில், வி.பாலகுமார் மறுத்தார்.

"ஈ.பி.ஆர்.எல்.எப்., அமைப்பினர் மக்களிடம் செல்வாக்கு இழந்துள்ளனர். ஏனெனில், மாகாண கவுன்சில் பணிளை அவர்களால் பாராட்டும்படி செய்ய முடியவில்லை. மேலும், தமிழர்களுக்கு தேவையானவற்றைச் செய்து கொடுத்து நம்பிகையைப் பெற முடியவில்லை. அவர்கள் இந்திய அமைதிப்படையினருடன் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான காரணங்களும், உணர்வுப்பூர்வமான பந்தங்களும் இருக்கின்றன" என்றார் அவர்.

இதையடுத்து வி.பாலகுமார், வித்தியாசமான நடவடிக்கை ஒன்றில் இறங்கினார். சிங்கள மக்களிடமும், தேசிய அரசியல் கட்சிகளிடமும், ஜே.வி.பி. போன்ற குழுக்களிடமும் பகிரங்கமான வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தார். "தற்போது நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற வேண்டும். ஏராளமான நிபந்தனைகளை விதிக்காதீர்கள். எக்காரணத்தைக் கொண்டும் பேச்சுவார்த்தை பாதியில் முடிந்து விடக்கூடாது. புலிகள் வெறும்கையோடு திரும்பிச் செல்லக்கூடாது. நல்ல முடிவு ஏற்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். "பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால், தனி ஈழம் கேட்டு போராடும் மக்கள், தங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவார்கள். மற்ற தமிழ் போராளிகளும் போர் புரிவதைத் தவிர

வேறு வழி இல்லை என்ற சூழ்நிலை ஆகிவிடும்" என்றார்.



பின்னர் பாலகுமார் ஊடகவியலாளர்களிடம், "எதிர்கட் சிகள் உட்பட இலங்கை அரசும், சிங்கள மக்களும் இணைந்து நடத்த வேண்டிய பேச்சுவார்த்தை இது. இது ஒருநல்ல சந்தர்ப்பம். அமைதியைத் தொடர இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று நான் நம்புகிறேன். சில ஊடகங்களில் கூறப்படுவது போல, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த் தைக்கு வந்தபோதும், இலங்கை அரசு தரப்பிலிருந்து ஆர்வம் காட்டப்படவில்லை என்பது தவறான கருத்து. விடுதலைப்புலிகள் பேச்சுவார்த் தைக்கு முன்வருகிறார்கள் என்றால் அது மிகப்பெரிய ஆச்சரியத்தை அளிக்கிறது.

ஆனாலும் நாம் வரவேற்கிறோம். இலங்கை அரசு தரப்பிலிருந்து மிகவும் எச்சரிக்கையோடும், இலங்கையில் அமைதி திரும்ப வேண்டும் என்ற உள்ளுணர்வோடும் அழைப்பு விடுக்கப்பட்டது என்பதை இலங்கை மற்றும் இந்திய அரசுகளும், இலங்கை மக்களும் நம்ப வேண்டும். தற்போது நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில், ஈழம் பற்றிய பல்வேறு பார்வைகள் திட்டங்கள் குறித்து பேசலாம்.

அவை எல்லாவற்றையும்விட, விடுதலைப்புலிகள் தற்போது என்ன கருத்தைச் சொல்கிறார்கள், அவர்களது தேவைகள் என்ன, நிபந்தனைகள் என்னென்ன என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதற்கு முன் நடந்ததுபோல அல்லாமல், புலிகள் தங்கள் தரப்பு கருத்துகளைச் சொல்லும்போது எதிர்ப்புக்களைச் சொல்லி பேச்சுவார்த்தையை இடையிலேயே நிறுத்தக் கூடாது. அதற்காக, அவர்கள் கூறுவதை அனைத்தையும் நாம் அப்படியே கேட்டு அதனைச் செய்துகொடுக்கும்படி சொல்லவில்லை. ஆனால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எந்த விடயத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது.

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு ராணுவத்தால் தீர்வு காண முடியாது. அதேநேரத்தில் 'இலங்கை நாட்டில் மற்றுமொரு தனி நாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. அதனை நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம்' என்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்போது, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறினார். அதையும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார்.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களைச் சரியான முறையில் பயன்படுத்தி, இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை எமது கட்சி ஏற்றுக்கொள்கிறது. ஆனால், மேற்படி பேச்சுக் களில் என்ன விடயங்கள் பற்றிப் பேசப்படுகின்றன என்பதை ரகசியமாக வைத்திருக்காமல், எமக்கும் அவ்வப்போது தெரியப்படுத்தப்பட வேண்டும். இது ஒரு தேசிய பிரச்சனை. இதில் எக்காரணம் கொண்டும் ஒழிவுமறைவு இருக்கக்கூடாது" என்று மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. மகிந்தா விஜேசேகர வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பிரேமதாச, இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு விரைவில் நல்ல தீர்வு காணும் வகையில் பல்வேறு அரச குழுக் களிடமும், எதிர்க்கட்சி எம்.பி.க்களிடமும், ஆலோசனை நடத்தப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைப் பலரும் வரவேற்றனர். விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் விவரம் குறித்து இந்திய அரசுக்கு அடிக்கடி தகவல் தெரிவிக்கப்படும் என்று இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சரும், பாதுகாப்புத் துறை அமைச்சரும் அறிவித்தனர்.

"பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக, காடுகளில் மறைந்து வாழும் விடுதலைப் புலிகள் நாட்டுக்குள் வருவதற்கு இந்திய அமைதிப் படையினர் ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் அதற்கு எந்தவித இடைஞ்சலும் செய்யவில்லை. இது பெரிய வகையில் உதவியாக இருந்தது" என்று அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

(தொடரும்)



Ayurvedic Herbal Drink!!
Diabina
HERBAL DRINK
டயபீனா
டயபீனாவானது தினமும் அருந்தக் கூடிய ஓர் மூலிகை ஆரோக்கிய பானம் அல்லது சக்தி வாய்ந்த ஓர் மருந்து. இது உடலின் மிகுதியான குளுக்கோஸினை குறைக்கக் கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோஸினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. நீண்டகால நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடலின் பாகங்களில் விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, நோயினால் சலித்து ஏற்படக்கூடிய அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய வியாதிகளை படிப்படியாக நீக்கி விடக் கூடியது. டயபீனா வானது சுலபமான இரத்தோட்டத்தை வழங்கக் கூடியதும், உடலின் மிகையான குளுக்கோஸினை குறைக்கக்கூடியதும், இயற்கையான முறையில் உடலில் உள்ள குளுக்கோஸினை அளவை கட்டுப்படுத்தக் கூடியதும் என உத்தரவாதமளிக்கலாம்.
(டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்களுக்கு மட்டுமே)
Gluteala
HERBAL DRINK
க்லூட்டியலா
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக் கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக் கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது.
க்லூட்டியலா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழி வகுக்கின்றது.
SOAP FREE Hand Wash
SABONA
& Gift
www.mediherbs.ca
Hair Lotion
Haarlotion
Evuamatin
அமெசோன் வனத்தில் இருந்து எடுக்கப்பட்ட மூலிகைகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது எவமார்ட்டின். இயற்கையின் உதவியுடன் உங்கள் முடியுதிர்வை நிறுத்துங்கள். தலைமயிர் குறித்த பல பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கிறது எவர்மார்ட்டின்.
Herbal
Henna
Shampoo
Herbal Scrub
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)